# திருக்கோயில்

அக்டோபர் 1978 ரூ. 1-25

20 அக் 1978





திருவாரூர்த் தேர்த்திருவிழா நிகழ்ச்சியில், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பக்தியுடன் கலந்து கொண்டு, தேர் இழுத்து மகிழ்தல் (15-9-'78).

முகப்பு:

திருவாரூர்
அருள்மிகு தியாகேசப் பெருமானின்
அழகிய ஆழித் திருத்தேர் விழாக்காட்சி
(15-9-1978)

# திருக்கோயில்

மாலை: 21 | காளயுக்தி ஆண்டு-ஐப்பசித் திங்கள்—அக்டோபர்-1978 | மணி: 1

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. **15—00** உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. **1—25** வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் [PINCODE] எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. **25—00** ஆக ஜனவரி **1978** முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

அறநிலையத்துறை அலுவலர்களுக்கு
அமைச்சர் உரை, ஆணையர் உரை

திருவாரூர்க் கோயில்
—ஆணையர்

பக்தி சூத்திரமும் திருவாசகமும்
—திரு. பெ. திருஞானசம்பந்தம்

ஒன்றில் இரண்டு
—திருமுருக கிருபானந்த வாரியார்

ஒரே கல்வெட்டில் ஒருநூறு கோயில்கள்
—திரு பாகூர் சு. குப்புசாமி

கம்ப ராமாயணம்
—திரு ம. பொ. சிவஞானம்

பேய் முதல் கடவுள் வரை
—திரு கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ.,

எம்பெருமானாரும், திவ்வியப் பிரபந்தமும்
—திரு பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

வள்ளலாரின் உள்ளத் துடிப்பு
—கவியோகி சுத்தானந்த பாரதியார்

பாரதநூற் பண்போவியங்கள்
—கவிஞர் திரு மனசை ப. கீரன் பி.ஏ., பி.டி

குருவை மிஞ்சிய குருநமச்சிவாயர்
—திரு ஆ. பக்தவத்சலம்

அறக்கட்டளையின் பட்டியல்
—(தொகுப்பு)

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

# அறநிலையத்துறை அலுவலர்களுக்கு

## அமைச்சரின் சிறப்புரை

JL
92ண211, N58
158635
N78·21·1

### மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள்

சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு இராம. வீரப்பன் அவர்கள், மதுரையில் 20-8-78-ஆம் தேதி, மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள துணைஆணையர், உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள், ஆய்வர்கள் ஆகியவர்களின் கூட்டத்தில், அலுவலர்களின் பணியினை ஆய்வு செய்து ஆற்றிய உரை;

''ஆணையர் பேசியபொழுது, இந்த மாதிரி அறநிலையத் துறையின் அதிகாரிகளை மொத்தமாக ஓரிடத்தில் அமைச்சர் சந்தித்து உரையாடுவதும், விவாதிப்பதும், இதுதான் முதல் தடவை என்று குறிப்பிட்டார்கள். இவ்வாறு உங்களைச் சந்தித்து உரையாடுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்காக யான் மிகவும் மகிழ்கின்றேன்.

இந்த அறநிலையத்துறையினை, நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தம் பொறுப்பில் வைத்திருந்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்குப் பின், இந்தத் துறை இப்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்போன்றவர்கள், கடந்த 40 ஆண்டு காலமாகக் கோயிலுக்குச் சென்று, நம் கோயில்களின் நடைமுறைகளையும், பழக்க வழக்கங்களையும், போதிய அளவு நேரிற் கண்டறிந்து தெரிந்து கொள்ளவில்லை. ஆயினும் எங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற அறநிலையத் துறையின் பொறுப்பினைத் தூய்மையான இதய சுத்தியுடன் செய்வோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையும், அவ்வாறு செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் எங்களிடம் நிரம்ப இருக்கின்றன. நம்பிக்கையின் அடிப்படையிலேதான் நமது திருக்கோயில்கள் எல்லாம், உண்மையாகவே சிறந்த முறையில் திருக்கோயில்களாக விளங்க வேண்டும் என்று யான் பெரிதும் விரும்புகின்றேன்.

நமது தமிழகத்துத் திருக்கோயில்களில், வணங்க வருகின்ற பக்தர்களுடைய மனத்தைப் புண்படுத்தாமல், அவரவர் விரும்பிய தெய்வங்களை வணங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டியது, அரசின் கடமை என்பதை நன்குணர்ந்து, நாங்கள்எங்களுடைய பணியைச் செவ்வனே செய்துகொண்டு வருகின்றோம்.

நம்பிக்கை இல்லையென்றால் வாழ்வே இல்லை. நம்பிக்கையின் அடிப்படையிலேதான் இந்த நாடும் உலகமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நாம் நம்முடைய புராதனமான திருக்கோயில்களையும், சமய நிறுவனங்களையும், அறநிலையங்களையும் போற்றிக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கின்றோம். திருக்கோயில்கள், நம்முடைய முன்னோர்கள் நமக்கென்று அளித்துவிட்டுச் சென்றுள்ள, நமது பழம்பெரும் பாரம்பரியச் செல்வங்கள் ஆகும். ஆதலால், அவைகளையெல்லாம் நல்லமுறையில் தக்கவாறு போற்றி வளர்த்துக் காப்பாற்றுதலில், அறநிலையத் துறையின் அதிகாரிகளுக்கு, மிகுந்த பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன என்பதை, நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இங்கு நாம் நமக்கிடையேயுள்ள பல செய்திகளையும், குறைநிறைகளையும் பற்றி, வெளிப்படையாக மனம் திறந்து பேசுவோம். நமக்குள் மனந்திறந்து ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாகக் கலந்து பேசுவதன் மூலம், நாம் நம்முடைய பிழைகளையும் குறைகளையும் திருத்திக் கொள்ள முடியும் என்று யான் கருதுகின்றேன்.

அறநிலைய இலாகாவினை, இது ஒரு கறை படிந்த இலாகா, ஊழல் இலாகா என்று, பொதுமக்கள் கருதுவதையும் கூறுவதையும் காண்கின்றோம். அதனை நாம் எளிதில் புறக்கணித்துத் தள்ளிவிட முடியாது என்பதை, நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். 'நீங்கள்' என்று நான் யாரையும் குறிப்பிட்டுத் தனியாகச் சொல்லவில்லை. அறநிலையத்துறையில் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான பேர்கள் பல நிலைகளில் பணியாற்றுவதாகத் தெரிகின்றது. அவர்களில் ஒருசிலர் தவறுகள் செய்திருக்கக்கூடும். இனியேனும் நாம் நம் கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து, ஒருவரும் குறைகூற இடமில்லாமலும், எல்லோரும் பாராட்டும் வகையிலும், நல்லமுறையிலும் நடந்து கொள்ள வேண்டும்; பணியாற்றுதல் வேண்டும் என்று நான் உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். பிறர் நம்மைத் தவறாகக் கருதவோ, குறைகூறிப்

பேசவோ இடமேற்படாதபடி, நாம் மிகவும் கவனமாக நம் கடமைகளைச் சரிவரச் செய்து வருதல் வேண்டும் என்று, இத்துறையில் இருக்கும் அதிகாரிகள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், செயல்அலுவலர்கள், ஆய்வர்கள் ஆகிய அனைவரையும் மிகவும் அன்புடனும் பணிவுடனும் கேட்டுக் கொள்கின்றேன்.

நாம் அனைவரும், இந்த நாட்டு மக்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்துள்ள நம்பிக்கைகளையும், சமயக் கோட்பாடுகளையும், வழிபாட்டு நெறிகளையும், நம்முடைய கோயில்களைச் சார்ந்துள்ள கலை கலாச்சாரப் பண்பாடுகளையும், வாழ்க்கை நெறிமுறைகளையும், போற்றிப் பாதுகாக்க வேண்டிய புனிதமான ஒரு சிறந்த நல்ல பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். நம் முன்னோர்களின் பண்பாட்டினையும் பாரம்பரியத்தினையும் காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு, நமக்கு இன்றியமையாததாக உள்ளது. ஆகவே நமது முன்னோர்கள் வகுத்து வளர்த்துச் சென்ற அறநெறி உணர்வுகளையும், அறச்செயல்களையும், அறநிறுவனங்களையும், நல்லமுறையில் வளர்த்துப் பாதுகாப்பதில், அரசுக்கு நீங்கள் அனைவரும் உங்கள் ஒத்துழைப்பை முழு அளவில் அளித்து, உதவி புரியுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

நமது அறநிலயத்துறை குறித்து, ஒரு நாளைக்கு எவ்வளவோ பல புகார் மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகள் அனைத்தையுமே ஒட்டு மொத்தமாகப் பொய்ப் புகார்கள் என்று நாம் தள்ளிவிட முடியாது. அப்புகார்களை அனுப்புபவர்கள் எல்லோருமே, வீணாகவும் பொய்யாகவும் வேண்டுமென்றே தவறான புகார்களை அனுப்புகிறார்கள் என்று எண்ணுவதற்கில்லை. அப்புகார்களில் 25 சதவிகிதமாவது உண்மையாக இருக்கலாம். அவைகளையெல்லாம் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்படி ஆணையர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளருக்கும் உத்தரவு போடப்பட்டுள்ளது. குற்றம் இழைப்போர்களும், ஊழல்புரிபவர்களும் சட்டப்படி தண்டனை பெறுவார்கள் என்பதை மனத்திற்கொண்டு, நாம் அனைவரும் நல்லபடியாகப் பணியாற்றுதல் வேண்டும்.

'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். தமிழ்நாட்டில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றன. அவற்றில் சுமார் 25 ஆயிரம் கோயில்கள், அரசின் ஆளுகைக்குள் இருந்து வருகின்றன. எஞ்சிய 25 ஆயிரம் கோயில்கள் அரசின் ஆளுகைக்குள் சேராமல் வெளியில் இருக்கின்றன. பண்டைக் காலக் கோயிலான புதுக்கோட்டைப் பிருகதாம்பாள் ஆலயத்தில் மதிப்புள்ள சொத்துக்கள் இருக்கின்றன. பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் தங்கத்தேரில் இருக்கின்ற தங்கத்தைவிட அதிகமான எடையுள்ள தங்கம், புதுக்கோட்டைப் பிருகதாம்பாள் ஆலயத்தில், பிருகதாம்பாளின் தங்க அங்கியாக இருக்கின்றது. ஆனால், அங்கு வேலை செய்யும் ஊழியர்களுக்குச் சம்பளம் தர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற நிலை வேறு பல கோயில்களிலும் ஏற்பட்டிருத்தல் கூடும். இத்தகைய நிலைகள் எதனால் ஏற்பட்டன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அந்தந்த ஊரில் உள்ள கோயில்கள் பலவற்றைப் புதுப்பிக்க வேண்டும் என்று மனுக்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. இன்று காலையில் கூட இரண்டு மனுக்கள் வந்தன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து, நல்லமுறையில் சிந்தித்து முடிவெடுத்துச் செயற்பட வேண்டியுள்ளது.

இன்று, நாட்டு மக்களின் அடிப்படையான தேவைகளுக்குச் செலவிடவே அரசிடம் போதிய பண வசதியில்லை. பண்டைக் காலத்தில் அரசர்களுக்கு வேறு செலவுகள் இல்லாத காரணத்தால், எத்தனையோ பல அழகிய கோயில்களைக் கட்டினார்கள். ஆனால் இன்றைக்கு அவைகளையெல்லாம் தக்கபடி பாதுகாப்பதற்கே, ஏராளமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது. இவைகளையெல்லாம் முறையாகப் பாதுகாக்காவிட்டால், நம்முடைய பெருமை வாய்ந்த பல கலைச் செல்வங்கள் மறைந்து அழிந்து போய்விடும். சிற்பம் ஓவியம் இசை நடனம் நாட்டியம் நாடகம் நாதசுவரம் முதலிய எத்தனையோ பல கலைகள், நம்முடைய கோயில்களைச் சார்ந்தே வளர்ந்து வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டும்.

அறநெறியுணர்வின் அடிப்படையில், பகுத்தறிவின் அடிப்படையில், மனச் சான்றுக்கு மாறுபடாமல், உண்மை நெறிக்குப் புறம் செல்லாமல், நானும் நீங்களும் கடமை உணர்ச்சியோடு பொறுப்புணர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான், என்னுடைய உளம் நிறைந்த ஆசை, அன்புநிறைந்த வேண்டுகோள்.

நமது கோயில்களுக்குக் கூடிய விரைவில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட இருக்கின்றார்கள். அதற்குரிய விண்ணப்பங்களை அதிகாரிகள் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றார்கள். முன்னாள் அறங்காவலர்கள் செய்த பல்வேறு அநீதிகள், அக்கிரமங்கள், சான்றுகளுடன் எங்களிடம் உள்ளன என்பதை, நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அரசு, அறங்காவலரைத் தேர்ந்தெடுத்து நியமிப்பதில் மிக்க பொறுப்புணர்ச்சியோடும், நிதானமாகவும், நேர்மையாகவும் இருக்கின்றது. அறங்காவலர்கள் நியமன விஷயத்தில் ஆய்வர்கள் தகாத முறையில் நடந்து கொள்வதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. இங்குள்ள யாரையும் நான் தனியாகக் குறிப்பிட்டுப் பேசவில்லை. தமிழகத்தைப் பற்றிப் பேசுகின்றேன். தெரிந்து

வைத்துக் கொண்டுதான் பேசுகின்றேன். நல்ல விளக்குக்கும் தூண்டுகோல் இருந்தால்தானே நன்ருக எரியும்.

நம்முடைய கோயில்களில், ஒழுங்கு கட்டுப் பாடு சேவை ஆகியவற்றைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில்தான் நீங்கள் இருக்கின்றீர்கள். தயவு செய்து, கோயில் சொத்துக்களை எப்படிக் காப்பாற்றுவது என்று உணர்ந்து, சிறப்பாகச் செயலாற்றுங்கள். கோயில் சொத்துக்களைக் கவர்ந்து ஏமாற்ற நினைத்து முயற்சி செய்பவர்களைக் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கோயில் சொத்துக்களைப் பாதுகாக்க முயற்சி செய்யுங்கள். ஆண்டவனை வணங்கிப் பணியாற்றுகின்ற தூய உண்மையான மனத்துடன், ஏழை எளியவர்களைக் காப்பாற்றுகின்ற புனிதப் பணிக்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

இதற்கிடையில், நமது அறநிறுவனங்கள் கோயில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான பல் வேறு செய்திகளைக் குறித்து, அரசும் சட்ட ரீதியாகச் சிந்தித்துப் பரிசீலனை செய்து வருகிறது. ரூ. 25 ஆயிரம் பெறுமானமுள்ள சொத்துக்களை மீட்க, வீணான வழக்குகளில் ரூ. 60 ஆயிரம் பொருட் செலவும், காலக்கழிவும் செய்து கொண்டிருக்கின்ரேம். எனக்கு வரும் 100 கோப்புகளில், 75 கோப்புகள் வழக்கறிஞர்களுக்குக் கட்டணம் கொடுப்பது பற்றியே உள்ளது. வழக்கு மன்றத்திற்குப் போகவேண்டுமா? வேண்டாமா? என்று நன்கு சிந்தித்துப் பரிசீலனை செய்யுங்கள். இந்து ஆலயப் பாதுகாப்புக் குழுவினரும், பொதுமக்களுட் சிலரும், நமது ஆலயங்களின் வருமானங்களிற் பெரும்பகுதி, அறநிலைய அதிகாரிகளுக்கே சம்பளமாகச் செலவாகி விடுகின்றது என்று பெரிதும் குறைப்பட்டுக் கொள்கின்றனர். இதற்கெல்லாம் நாம் விடை கண்டுபிடித்தாக வேண்டும். விரும்பத்தகாத நிலைமைகளையெல்லாம், அறவே மாற்றித் திருத்தி அமைத்திடல் வேண்டும்.

நீங்கள் இதுவரை ஏதாவது தவறுகள் செய்திருந்தால், அந்தத் தவறுகளை இனிமேல் செய்யக்கூடாது என்று, நீங்கள் இன்று முதல் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். ஆண்டவன் மீதும், பெற்ற தாயின் மீதும், தந்தையின் மீதும், பிறந்த நாட்டின் மீதும், இயற்கையின் மீதும், இனி எத்தகைய சிறு தவறும் செய்யாமல் இருக்க உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். நமது அறநிலையத் துறையைத் தூய்மையான தாக்கவும், சிறப்புமிக்கதாக்கவும், நாட்டிலுள்ள ஏழை மக்களின் வாழ்க்கையை வளமுள்ளதாக்கவும் செய்யப் பெரிதும் விரும்பி, ஆண்டவனை வணங்கி வேண்டி அமைகின்றேன். வணக்கம்.''

**—அமைச்சர்.**

அறநிலையத்துறையில் நடைபெறும் வேலையையும், காரியங்களையும் மாண்புமிகு தமிழக அரசின் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் ஆய்வு செய்வதற்காக, மதுரையில் 20-8-78-ஆம் தேதி, மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள துணை ஆணையர், உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள், ஆய்வர்கள் ஆகியோர்களின் கூட்டத்தில், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் யு. **சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்.,** அவர்கள் வரவேற்றுப் பேசியபோது, அறநிலையத்துறை நிர்வாகத்தைச் சீராக்குவதற்கு, கடந்த சில மாதங்களாக முக்கியமான சில காரியங்களில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டார்:

'' 1. ஆலயங்களுக்கு வருகின்ற சேவார்த்திகள், வழிபாடுகள் புரிவதற்கு நல்ல முறையில் வசதிகள் செய்து கொடுப்பது.

2. செயல் அலுவலர்கள், உதவி ஆணையர்கள் ஆகியோர், மேலும் மிக்க பொறுப்புடனும், ஆர்வத்துடனும் வேலை பார்ப்பதுடன், துணை ஆணையர்கள், தம் ஆட்சி எல்லையில் உள்ள எல்லா ஆலயங்களுக்கும் நேரிற் சென்று பார்வையிட்டுக் கண்காணிப்பது.

3. ஆலயச் சொத்துக்கள் எவை எவை, அந்தச் சொத்துக்கள் எவ்வாறு இருக்கின்றன, ஆலய வளர்ச்சிப் புதிதாக என்னென்ன திட்டங்கள் உள்ளன என்பது பற்றி, அறிக்கைகள் தயாரிப்பது.

4. ஆலயங்களின் சொத்துக்களை நல்ல முறையில் பாதுகாத்து, மேலும் வருமானம் கிடைக்க வழிவகைகள் செய்வது.

5. ஆலயங்களின் சொத்துக்களின் பாது காப்பில் கவனம் செலுத்துவது.

6. ஆலயங்களில் இருக்கின்ற நிலங்களை நல்லமுறையில் பாதுகாப்பது.

ஆணையர் மேலும் பேசியதாவது: ''நமது துறைக்கு வரவேண்டிய பணம், பல லட்சக் கணக்கில் நிலுவையாக உள்ளது. அந்த நிலுவைப் பணத்தை வசூலிக்க உடனடியாகவும், தீவிரமாகவும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆலய அதிகாரிகளின் சம்பளம், பஞ்சப்படி ஆகியவைகள் அந்தந்த ஆலயங்களிலிருந்து தாமதமின்றி வசூல் செய்யப்பட வேண்டும். மற்றும் பங்களிப்புத் தொகை (Contribution) தணிக்கைக் கட்டணம் (Audit Fees) ஒவ்வொரு ஆலயத்திலிருந்தும் வசூல் செய்யப்பட வேண்டும். மற்றும் பல வகை நிலுவைகள் இருக்கின்றன. இவைகளை வசூலிப்பதில் காலதாமதம் கூடாது என்று அறி

வுறுத்தப்பட்டிருக்கின்றது. இவைகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்துவரும் நிலுவைகள். ஆலயங்களில் அந்தந்த ஆண்டின் செலவு போக எஞ்சிநிற்கும் மீதித் தொகையை பழைய நிலுவைகளைச் செலுத்திவிடுவதற்குப் பயன்படுத்த வேண்டும். சில ஆலயங்களில் நிலுவைத் தொகைகள் வசூல் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. எல்லா நிலுவைகளையும் நல்ல முறையில், அதிக கெடுபிடி இல்லாமல் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்து, 25 ஆயிரம் ஆலயங்களில், 15 ஆயிரம் ஆலயங்களின் நிலக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இன்னும் 10,000 ஆலயங்களுக்கு நிலக் கணக்குகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. ஆலயங்களின் சொத்துக்கள், எந்த நிலையில் இருக்கின்றன, வருமானம் என்ன கிடைக்கிறது என்பதற்கும், விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

பொதுவாக, உதவி ஆணையர்கள், துணை ஆணையர்கள் ஆகியோர், தங்களிடம் வரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, உடனடியாக உத்தரவு போடுவதில்லை என்று தெரிகிறது. சட்ட ரீதியாக உடனடியாக உத்தரவு போட வேண்டும். தாமதம் ஏற்பட்டால், பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நம் துறையில் ஒரே ஒரு சட்டம்தான்; இதர துறைகளிலோ பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. நமக்குச் சட்டம் ஒன்றே. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அரசு வகுத்துள்ள விதிகளுக்கு இணங்கி, நாம் வேலை செய்கின்றோம். தாமதமின்றி உடனே உத்தரவுகள் போட்டுவிட்டால், உத்தரவு போடவில்லை என்று பொதுமக்களிடமிருந்து குற்றச்சாட்டு வராது. நீங்கள் உத்தரவு போட்டு, பின்னுல் அதன் பேரில் மேல்முறையீட்டு மனு என்னிடம் வந்தால்தான், நான் நடவடிக்கை எடுக்க முடியும். இல்லையேல் பல பிரச்சினைகள் உண்டாகின்றன. உங்கள் உத்தரவின் மேல்தான், நான் ஏதேனும் உத்தரவு போட வேண்டும். அதன் பிறகே அரசுக்கு மேல் முறையீடு செய்யப்படவேண்டும். கோயில்களில் காரியங்கள் எல்லாம் நன்ருகவும் சிறப்பாகவும் நடக்க வேண்டும். அதையெல்லாம் கவனித்து உடனுக்குடன் உத்தரவு போட்டுவிட்டால், நமக்குப் பிரச்சினைகள் இருக்காது.

மற்ருெரு முக்கியமான பிரச்சினை, வழக்குகள். சிலர் 'சிவில் கோர்ட்டு'களுக்குப் போகிருர்கள். மற்றும் சிலர் 'ரிட் பெட்டிஷன்' என்று வேறு போடுகிருர்கள். இவ்வாறு பல ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டு நிலுவையில் இருக்கும் வழக்குகளைப் பற்றி, நாம் அரசாங்க வழக்கறிஞரிடம் சொல்லித் துரித நடவடிக்கை எடுத்து, விரைவில் முடிவிற்குக் கொண்டு வரவேண்டும்.

அறங்காவலர்கள் ஏதேனும் தவறுகள் செய்யும்பொழுது, நாம் சட்டத்தைப் பற்றி அவர்களுக்குச் சொல்வதில்லை. நாம் சும்மா இருப்பதால்தான் அவர்கள் தாங்கள் செய்வது சரியென்று நினைக்கிருர்கள். அவர்களுக்கு நாம் சட்ட விதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டும். யாரும் சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் செய்ய முடியாது.

சட்டப்படி கோயிலுக்குச் சேர வேண்டிய பணத்தை, அறங்காவலர்கள் வாங்கக் கூடாது என்பது சட்டம். அவர்கள் அவ்வாறு வாங்கும் ஒரு நிலை ஏற்பட்டதற்குச் செயல் அலுவலர்களும், நம் அதிகாரிகளும்தான் பொறுப்பு. சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் செய்யக் கூடாது என்ற ஒரு பயம், அறங்காவலர்களுக்கு ஏற்பட வேண்டும். நாமும் எடுத்துச் சொல்ல வேண்டும். நமக்கு உதவியாகத்தான் அவர்கள் நியமிக்கப்படுகின்ருர்கள்.

கோயில்களுக்குச் சேர வேண்டிய நிலுவைகள் எல்லாம், அதிகமாக இருக்கின்றன. 8-9 எண்ணுள்ள அறிக்கையில், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற புள்ளி விவரம் இருக்க வேண்டும்.

ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கோயிலிலும் பதிவேடுகள் அமைத்து, அந்தந்த வட்டாரத்தில் உள்ள கோயில்களில், உலோக விக்கிரகங்கள் எவ்வளவு இருக்கின்றன என்ற புள்ளி விவரம் தயாரிக்கப்பட வேண்டும். அறநிலையத்துறையின் பொதுநல நிதியிலிருந்து விக்கிரகங்களைப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இன்னும் நாம் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன. நமது பணியினைச் சட்டதிட்டங்களுக்குட்பட்டு, கடவுள் பக்தியோடு, ஒழுங்காக, நேர்மையாக, உண்மையாகச் செய்து, இந்து சமயத்தினரின் அன்பையும் நன்மதிப்பையும் பெறவேண்டும்.''

**—ஆணையர்.**

# திருவாரூர்க் கோயில்

## சில குறிப்புக்கள்

### பழமை :

பஞ்சபூதத் தலங்களுள், திருவாரூர் பிருதிவித் தலம் என்பர். திருவாரூர்க் கோயில் மிகவும் பழமையானது. அது எப்போது தோன்றியது என்று கணக்கிட்டுச் சொல்ல இயலாது. வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டது *(Pre-historic Temple)* எனலாம். அதனாலேயே,

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ?
ஓருருவே மூவுருவம் ஆனநாளோ?
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ?
கண்ணழலால் காமனையும் விழித்த நாளோ
மருவனாய்மண்ணும்விண்ணும் தெரித்த நாளோ?
மான்மறிக்கை ஏந்திஓர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ?
திருவாரூர்க் கோயிலாக் கொண்டநாளே!

என்று, திருநாவுக்கரசர் இக்கோயில் ஏற்பட்ட நாள் அல்லது காலம் எப்போது என்று, கடவுளையே வினவிப் பாடியிருக்கின்றார். திருநாவுக்கரசர் 1300 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர். அவரே இவ்வாறு வியந்து பாடி இருக்கின்றார் என்றால், இக்கோயிலின் பழமை எவ்வளவு என்று ஊகித்து உணரலாம்.

திருவாரூர், பண்டைக் காலத்தில் சோழர்களின் தலைநகரங்களுள் ஒன்றாக இருந்தது. திருவாரூர்க் கோயிலின் நடைமுறைகளையே பெரிதும் பின்பற்றி, இராஜராஜ சோழன் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலின் நடைமுறைகளையும், விழாநிகழ்ச்சிகளையும் அமைத்தான்.

### உட்கோயில்கள் :

திருவாரூர்க் கோயில் மிகப் பெரிய கோயில். அக்கோயிலுக்குப் பூங்கோயில் என்ற சிறப்புப் பெயர், திருநாவுக்கரசரால் தேவாரத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இதனையே வடமொழியில் கமலாலயம் (கமலம்-பூ, ஆலயம்-கோயில்) என்கின்றனர். பெரிய இந்தக் கோயிலுக்குள்ளாகப் பல சிறுசிறு கோயில்கள் உள்ளன. இக்கோயிலைச் சைவ சமய ஆசிரியர்கள் நால்வரும், மற்றும் பல சான்றோர்களும் பாடியுள்ளனர்.

### சப்தவிடங்கத் தலங்கள் :

திருவாரூரும், அதனைச் சேர்ந்த மற்றும் ஆறு தலங்களும் ''சப்தவிடங்கத் தலங்கள்'' (ஏழு தியாகராசர் கோயில்கள்) என்று போற்றப்பட்டு வருகின்றன. அத்தலங்களின் பெயர்களும், அங்குள்ள இறைவனின் பெயர்களும், அக்கோயில்களில் நடைபெறும் சுவாமியின் நடனங்களும், தனிச் சிறப்பு வாய்ந்தவையாகும். அவைகள் வருமாறு:

1. திருவாரூர், வீதிவிடங்கர், அசபா நடனம்
2. திருநள்ளாறு, நகவிடங்கர், உன்மத்தநடனம்
3. திருநாகைக் காரோணம், சுந்தரவிடங்கர், பாராவார தரங்க நடனம்
4. திருக்காறுயில், ஆதிவிடங்கர், குக்குட நடனம்.
5. திருக்கோளிலி, அவனிடங்கர், பிருங்க நடனம்.
6. திருவாய்மூர், நீலவிடங்கர், கமல நடனம்.
7. திருமறைக்காடு, புவனிவிடங்கர், அம்சபாத நடனம்.

### மண்டபங்கள் :

திருவாரூர்க் கோயிலில் பல புகழ் பெற்ற சிறந்த பெரிய மண்டபங்கள் உள்ளன. அவைகளுள் மிகவும் புகழ்பெற்றது தேவாசிரிய மண்டபம் என்பதாகும். இங்குதான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடினார் எனப் பெரிய புராணம் கூறுகின்றது.

### மூர்த்திகள் :

இக்கோயிலில் ஒவ்வொரு சந்நிதியிலும் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்குத் தனித்தனியான சிறப்புப் பெயர்கள் உண்டு. அப்பெயர் பெயர்கள் வருமாறு :

1. ஐங்கலக்காசு விநாயகர்.
2. வாதாபி விநாயகர்.
3. வன்மீக நாதர்.
4. தியாகேசர்.
5. அல்லியங்கோதை.
6. கமலாம்பிகை.
7. வீதி விடங்கர்.
8. தருணேந்துசேகரர்.
9. சுந்தரர்.
10. சேரமான்பெருமாள்.

**வாத்தியங்கள் :**

பொதுவாக எல்லாக் கோயில்களிலும் வாத்தியங்கள் இருப்பினும், திருவாரூர்க் கோயிலுக்கே சிறப்பான சில வாத்தியங்கள் உண்டு. அவைகள் வேறு எங்கும் இல்லை. திருவாரூரில் மட்டுமே உள்ளன. அவைகளாவன :

1. பஞ்சமுக வாத்தியம்.
2. பாரி நாயனம்.
3. சுத்தமத்தளம்.

**கல்வெட்டுக்கள் :**

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சோழ அரசர்கள் பலர் இக்கோயிலுக்கு வழங்கிய பலவகைத் தானங்களைப் பற்றி அவைகள் குறிப்பிடுகின்றன.

**புகழ்மிக்க கல்வெட்டு :**

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் வடக்குப் பக்கச் சுவரில் மனுநீதிச் சோழரின் வரலாறு, கல்வெட்டாகப் பதிக்கப் பெற்றிருக்கின்றது. இக் கல்வெட்டைப் படித்து ஆராய்ந்தே, இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலிருந்த சேக்கிழார் தமது பெரிய புராணத்தில், மனுநீதிச் சோழனின் வரலாற்றை விரிவாகப் பாடினர் என்று தெரிகின்றது. அதனல் இக்கல்வெட்டு மிக்க பழமையும் புகழும் வாய்ந்ததாகும்.

**திருப்பணி செய்தோர் :**

இக்கோயிலில் அவ்வப்போது பலர் சிறந்த திருப்பணிகளைச் செய்துள்ளனர். என்றுலும் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்க்ள் சிலர்.

(1) முதலாம் இராஜாதிராஜன், தனது பதினும் ஆட்சியாண்டில், இக்கோயிலின் பெரிய கோபுரத்தையும், சபாபதி மண்டபத்தையும் கட்டினுன்.

(2) செம்பியன் மாதேவியார், ஆரூர் அறநெறியப்பர் கோயிலை அமைத்தார்.

(3) இரண்டாம் இராஜேந்திரன், புற்றிடங் கொண்டார் கோயிலையும், வீதிவிடங்கர் கருவறையையும் பொன் வேய்ந்தான்.

**தேர்த் திருவிழா :**

திருவாரூருக்கே மேலும் சிறப்பு அளிப்பது அங்கு நடைபெறும் தேர்த் திருவிழாவாகும். ''திருவாரூர்த்தேர் அழகு, திருவிடைமருதூர்த் தெரு அகு'' என்பது பண்டைக் காலம் முதல் வழங்கி வரும் பழமொழியாகும். இதனல் இதன் சிறப்பு நன்கு விளங்கும்.

''ஆழித்தேர் வித்தகனை
நான் கண்டது ஆரூரே''

என்று திருநாவுக்கரசர், இத்தேரின் சிறப்பை வியந்து குறிப்பிட்டுள்ளார். அதனல் இத்தேருக்கு ஆழித்தேர் என்பது சிறப்புப் பெயராகும். திருவாரூரில் நடைபெறும் தியாகராஜ சுவாமியின் நடனம், அஜபா நடனம் எனப்படும். அந் நடனம் மிக்க கலைச்சிறப்பு வாய்ந்ததாகப் போற்றப்படுகின்றது. திருவாரூர்க்கு மிக்க சிறப்பும் புகழும் தருவது, இங்கு நடைபெறும் தேர்த்திருவிழாவேயாகும்.

திருவாரூர்த் தேர்த் திருவிழாவினை, இந்த ஆண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு, நமது தமிழக அரசு தகுந்த ஏற்பாடுகள் செய்தது. திருவாரூர்த் தேர்த்திருவிழா, இந்த ஆண்டு 15-9-78 முதல் 17-9-78 வரை மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. இத்திருவிழாவில் பொதுமக்கள் பெருந் திரளாகக் கூடி, தேர் இழுக்கும் திருத்தொண்டில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கலந்து கொண்டு, விழாவினை வெற்றிகரமாகக் குறுகிய காலத்தில், நல்ல முறையில் நிறைவேற்றிக் கொடுத்தமை, மிகவும் போற்றுதற்குரியது. இவ்வாறே தொடர்ந்து எதிர்காலத்திலும் இன்னும் மேன்மேல் மிக்க ஆர்வத்துடனும் அன்புடனும், மிக அதிக எண்ணிக்கையிலும், பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ளும்படி, விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மிகப் பெரிய அளவுடையதும், பற்பல சிரமங்கள் வாய்ந்ததும், பலர் திரண்டு கூடிச் சேர்ந்து ஒன்றுபட்டுச் செய்ய வேண்டுவதும் ஆகிய இந்த மகத்தான தேர்த் திருவிழாவினை, இக்கோயிலின் உள்துறைக் கட்டளை அறங்காவலர் திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்கள், தாமே நேரில் உடனிருந்து மிக்க சிரத்தையுடனும், பொறுப்புணர்வுடனும், ஒவ்வொன்றையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துச் செயற்படுத்தி நடத்தி வைப்பது, பெரிதும் பாராட்டுதற்குரியதாகும். இந்த அரிய கடினமான பணியில், உள்துறை அறங்காவலரோடு துணைநின்று ஒத்துழைக்கின்ற, பல திறப்பட்ட தொழிலாளி மக்கள் அனைவருக்கும், பொதுமக்களின் நன்றியும் பாராட்டுதலும் உரியனவாகும்.

திருவாரூர்த் தேர்த் திருவிழாவினை, நம் நாட்டின் சிறப்புமிக்க திருவிழாக்களில் தலைசிறந்த தொன்ருகச் செய்வதற்கான திட்டம் மிக விரைவில் மேற்கொள்ளப்பட விருக்கின்றது.

—ஆணையர்

# பக்தி சூத்திரமும் திருவாசகமும்

*'மும்மொழிக் கொண்டல்'*

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம், M.A., L.T., சென்னை.

ஆண்டவனை அடைவதற்குப் பல வழிகள் உண்டு என்று, பக்தி சூத்திரம்என்னும் நூலில் நாரதர் கூறுகிறார். காதலின் மூலம் கோபியரும், பகைமை பாராட்டுவதன் மூலம் சிசுபாலனும், அச்சத்தின் மூலம் கம்சனும், தோழமை மூலம் யுதிட்டிரரும், பக்தியின் மூலம் நாரதரும் கண்ணனை அடைந்தார்கள். இவற்றுள் பக்தி நெறியே சிறந்தது என்பதிலே எட்டுணையும் ஐயமில்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வடநாட்டிலும் தென்னாட்டிலும் பக்திநெறி பரவியிருந்தது என்பதற்கு இலக்கிய ஆதாரங்கள் உள்ளன. பாணினியும் பதஞ்சலியும் வாசுதேவனைப் பற்றியும், சிவ பாகவதர்களைப் பற்றியும், சிவன், கந்தன், விசாகன் முதலான தேவர்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழிலும் தொல்காப்பியம், பரிபாடல், திருமுருகாற்றுப்படை, கலித்தொகை போன்ற பண்டை இலக்கியங்களில் பல தேவர்களைப் பற்றியும், வழிபாட்டு முறை பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன என்பதை அனைவரும் அறிவர். பக்தி நூல்கள் பெருமளவில் தமிழகத்தில் தோன்றியுள்ளன என்பதை நாம் எண்ணி மகிழலாம்.

நாயன்மார்களும் ஆழ்வாராதியரும் இதில் பெரும் பங்கு கொண்டனரெனினும், சங்க இலக்கியத்திலேயே இச் செந்நெறியின் இயல்பை நாம் காண்கிறோம் ''யாம் இரப்பவை பொன்னும் பொருளும்போகமும் அல்ல, நின்பால் அன்பும் அருளும் அறனும்..'' என்று பரிபாடல் பகர்கிறது. 'கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்'' என்று திருக்குறள் கூறுகிறது. வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட'க் குன்று தோறாடும் குமரனை, 'உச்சிக் கூப்பிய கையினராய்', 'இனியவும் நல்லவும் நனிபல ஏத்திய' புலவரைத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. 'ஆறு அறி அந்தணர்க்கு அருமறைபல பகர்ந்து, தேறு நீர் சடைக் கரந்து, திரிபுரம் தீ மடுத்து, கூறாமல் குறித்ததின் மேல் செல்லும் கடுங்கூளி மாறாப்போர் மணி மிடற்று, எண்கையாய்!' என்று கற்றறிந்தார் பேசுங் கலித்தொகை பேசுகிறது.

பின்னர் ஜைனமும், பௌத்தமும் நிலைபேறுற்ற காரணத்தால், மக்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் அழுந்தியிருந்த பக்தி உணர்வு புறச் சமய வீழ்ச்சிக்குப் பின்னர், நாயன்மார் ஆழ்வாராதியர் அரும் பாடற்றிறத்தால் புத்துயிர் தழைக்கலாயிற்று. வடநாட்டிலும் புராணங்கள் பக்தி நெறியைப் பரப்பி வந்தன. பக்திப் பனுவல்கள் பல்கிப் பெருகின; இலக்கியத்திற்கேற்ப இலக்கணம் குறித்து நாரத பக்திசூத்திரம், சாண்டில்ய சூத்திரம், பத்திர சாயனம் போன்ற நூல்கள் அவ்வக் காலங்களில் எழலாயின.

பன்னிரு திருமுறைகளுமே உயர்ந்த பக்தி நூல்களாயினும், ஈண்டுத் திருவாசகத்தின் ஒரு சில பகுதிகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள வடமொழிப் பக்தி இலக்கண நூல்களோடு பொருத்திப் பாத்தல், பயன் தருவதாகும் என்னும் நோக்கத்தோடு, இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று வரிசைப்படுத்தி, ஞானமே முக்திக்குரிய இறுதி சாதனம் என்று, சைவ சமய நூல்கள் விரித்துரைத்த போதிலும், பக்தி நெறியின் இன்றியமையாத் தன்மையைச் சைவ நூல்கள் மட்டுமேயன்றி, வைணவ மத்வ நூல்களும் வலியுறுத்துவதை நாம் காணலாம். ஞானமே முக்தி சாதனம் என்று சங்கரர் கூறுவர்.... பக்தியே ஒருவகையில் ஞானம் என்று இராமானுஜர் கூறுவர். பக்தியே முக்தி சாதனம் என்று மத்வர் கூறுவர்.

பக்தி இருவகைப்படும். 'அபார பக்தி' பொருளையோ, போகத்தையோ, புகழையோ, முக்தியையோ ஏதோ ஒரு பயனைக் குறித்துச் செய்யப்படும் பக்தி. 'பரா பக்தி' என்பது பக்தி செய்ய வேண்டும் என்பதற்காகவே செய்யப்படுவது. உலகியலில் உழலும் மக்களுள் பெரும்பாலோர் செய்யும் பக்தி முதல்வகையைச் சார்ந்தது. மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள் செய்யும் பக்தி இரண்டாம் வகையைச் சார்ந்தது.

சைதன்யர் 'பொருளையும் சுற்றத்தையும் விரும்பேன், பெண்ணையும் பாட்டையும் விரும்பேன். பிறவிதோறும் உன் இணைபிரியாப் பக்தனாகவே இருக்க விரும்புகிறேன்.' என்று வேண்டுகிறார். பிறவாமை வேண்டிய காரைக்காலம்மையார் 'பிறப்புண்டேல் நினது திருவடி மறவாமை வேண்டும்' என்று வேண்டவில்லையா!

மாணிக்கவாசகரும் 'வேண்டும் நின் கழற் கணன்பு....மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின் வணங்கவே? (திருச்ச. 74) என்று கூற வில்லையா?

விஷ்ணு புராணத்தில் ஒரடியார் 'அச்சுதா? ஆயிரம் பிறவிகளில் நான் பிறந்தாலும் நின் மாட்டு என்றும் தளராதபக்தி உடையவனுக நான் இருக்க அருள வேண்டும்'' என வேண்டு கிருர். ''கண்டு எந்தை என்று இறைஞ்சிக் கைப்பணி யான் செய்யேனேல், அண்டம் பெறி னும் அது வேண்டேன்'' என்ற காரைக்காலம் மையாரின் வாக்கும் இங்கு நினைவு கூரத்தக் கது. ஆன்ம போதம் பெற்ற இத்தகையோரே பரா பக்தியில் அழுந்தியவர்கள்.

பகவத்கீதை (11.54) ''என்னை அறிவதற் கும், காண்பதற்கும், தத்துவ ரீதியில் என்னைப் போல் ஆவதற்கும் என்னிடத்துச் செலுத்தும் பக்தியே காரணம்'' என்று கண்ணபிரான் மொழிகின்ருர். பக்தியின் விளைவு ஈசனைத் தன்வயப்படுத்துதல் என்று, பக்தி மீமாம்சை கூறுகிறது. பாகவத புராணத்திலும் 'கற் புடை மங்கைக்குக் கணவன் எப்படியோ அப்படி பக்தனுக்கு ஆட்பட்டவன்நான்' என்று பகவான் கூறுகிருர்; 'பக்தி வலையிற் படுவோன் காண்க' என்று, திருவாசகத்தில் வரும் திருவண்டப்பகுதி வரியும் இக்கருத்தினைத் தாங்கி நிற்பதைக் காண்க.

'தூய பக்தி நிலையில் இருப்பவர், வேண்டு தல் வேண்டாமை இலாதாராய் இருப்பர். இன்ப துன்பங்களால் ஆட்படமாட்டார். ஆனந்த பரவச நிலையில் திளைப்பார்' என்று கூறுகிறது நாரத சூத்திரம். எல்லாம் ஈசன் செயல் என்று எண்ணியிருப்பர் பக்தர்கள். அவனருளின்றி உய்தி இல்லை என்று உறுதிப் பாடு உடையவர்கள் அவர்கள். 'போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும் (திருச்ச. 72) 'பருதிவாழொளியாய் பாதமே யல்லால் பற்று நான் மற்றிலேன் கண்டாய்' (வாழாப். 7) என்ற வரிகள், மணிவாசகரின் உள்ளத் திட்பத்தை உணர்த்துகின்றன. 'அன் பால் நீ அகம்நெகவே புகுந்தருளியாட் கொண் டது என்பாலே நோக்கிய வாறன்றே யெம் பெருமானே'' என்ற திருவேசறவுப் பதிகத்தி லும், பிற பல இடங்களிலும் இறைவன் அருட் டிறத்தை வியக்கின்ருர் அடிகள். பக்தி செய்வ தற்கும் அவனருளே வேண்டியுள்ளது என்பதை 'அடியேனை ஆண்டு கொண்டு பக்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி' என்ற திருவாசகமும், 'அவனருளே கண்ணுகக் காணினல்லால்' என்ற தேவாரமும் உணர்த்துகின்றன.

அவன் திருவுருவத்தையே காண்டலும், அவன் புகழையே கேட்டலும், அவனையே சிந் தித்தலும் பக்தன் இயல்பு என்று கூறுகிறது நாரதசூத்திரம். குருந்த மரத்தடியில் ஒரு முறை இறைவனின் திருக்கோலத்தைக் கண்ட அடிகள் அவ்வானந்த அநுபவம் மீண்டும் வாராமை குறித்து இரங்குகின்ற நிலையைப் புணர்ச்சிப் பத்தில் பார்க்கிறோம். 'பரிந்து வந்து பரமானந்தம் பண்டே அடியேற்கருள் செய்யப் பிரிந்து போந்து பெருமாநிலத்தில் அருமால் உற்றேனென்றென்று சொரிந்த கண் ணீர் சொரிய வுண்ணீர், உரோமம் சிலிர்ப்ப உகந்து அன்பாய்ப், புரிந்து நிற்பதென்று கொல்லோ? என் பொல்லாமணியைப் புணர்ந்தே'(புணர்ச்சி. 6) என்பது திருவாசகம்.

'ஈசுவரனிடத்தில் செலுத்தப்படும் மேலான அன்பு (பராஅநுரக்தி) தான் பக்தி' என்று சாண்டில்யர் இலக்கணம் வகுக்கிருர். இத்தகைய பராபக்தியின் பயன் 'மீண்டும் மீண்டும் ஒரே நோக்குடன் பக்தி செய்வதே' என்கிருர் நாரதர். 'நின்னைத் துன்னி வழிபடுவ தன் பயம் இன்னும் இன்னும் அவையாகுக' என்ற சங்கப் புலவர் கேசவனுரின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது.

பக்தி என்ருலே, பக்தன் பகவான் என்ற வேறுபாடு இயல்பாகவே எழுகிறது. இறைவன் வேறு ஜீவான்மா வேறு என்று கருதுகிற சித் தாந்த சமயத்திற்கு இது உடன்பாடே. சாண் டில்ய சூத்திரத்தில் பரம்பொருள் வேறு சீவன் வேறு என்ற உண்மை, காசியபரின் கூற்ருக எடுத்தாளப்படுகிறது. உலகியல் நிலையில் இவ் வேறுபாடு காணப்பட்டபோதிலும், முத்தி நிலை யில் பரம்பொருளின் தன்மையை அடையக் கூடிய ஆற்றல் ஆன்மாவுக்கு உண்டு என்பது, சாண்டில்யரின் கருத்து. மாணிக்க வாசகரும், 'பாவியேற்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து ஆவி யாக்கை யான் என தென்று யாது மின்றி யறுதலே' என்றும், 'பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா வொழி யாப் பிரிவில்லாமறவா நினையா அளவில்லா மாளா இன்ப மாகடலே' (பிரார்த்தனைப்பத்து) என்றும் கூறுவதனை நோக்குக.

பக்தியை 'ஆசக்தி' (ஒன்றுதல்) என்றும் வடநூலார் கூறுவர். இறைவனுடைய குணங் களில், உருவத்தில், பூசையில், நினைப்பில், பணி யில், தோழமையில், வாத்சல்யத்தில், நாயகி பாவத்தில், தன்னையே அர்ப்பணித்தலில், அவனேயாதலில், பாவனையில், பரமபிரேமை யில் ஈடுபடுதல் ஆகியவை, பக்தியின் பலநிலை களாக நாரத பக்தி சூத்திரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. 'பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே' என்பதில் அவன் குணமும், 'சோதியே சுடரே சூழொளி விளக்கே, சுரிகுழற் பணைமுலை மடந்தை பாதியே பரனே பால் கொள் வெண்ணீற்ருய்' என்பதில் உருவமும், 'முத்து நற்ருமம் பூமாலை தூக்கி முளைக்குடந் தூபம் நற்றீபம் வைம்மின்' என்பதில் பூசை யும், 'உருகிப் பெருகி உளங் குளிர முகந்து கொண்டு, பருகற் கினிய பரங் கருணைத் தடங் கடலை, மருவித் திகழ் தென்னன் வார்கழலே நினைந்தடியோம், திருவைப் பரவி நாம் தெள் ளேணங் கொட்டாமோ' என்பதில் பணியும் குறிப்பிடப் பெறுகின்றன.

''உற்றடியேன் மிகத் தேறி நின்றேன் எனக்குள்ளவனே'' என்பதில் தோழமையும் வெளிப்படக் காணலாம். இவ்வாறே 'சூடு வேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள் தோள்

கூடுவேன்' என்பதில் 'நாயகி பாவத்தையும், அடைக்கலப்பத்தில் தன்னையே அர்ப்பணித் தலையும், அடிகள் தில்லையில் எழுந்தருளியிருந்த காலத்தில் இறைவன் தன்னைச் சிவமாக்கி யாட்கொண்ட அருட்செயலில் அவனே யாதலை யும்' 'பலகால் உன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம்பலமென்றே ஒல்கா நிற்கும் உயிர்க் கிரங்கி அருளாயென்னை உடையனே' என்பதில் பாவனையையும், ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ பார்க்கோ பரம்பரனே என் செய்கேன்' என்பதில் பரமப்பிரேமையையும்' காண்கிறோம்.

அவன் புகழே பேசும் அடியவர்க்கு விரை வில் இறைவன் வெளிப்படுகிறான் என்கிறது மற்றுமொரு சூத்திரம். 'ஆராவமுதின்அருட் டாளிணைபாடி!, 'துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ் பாடி', -மாலுக்கரியானை வாயாரநாம் பாடி' உய்யும் வழியை மகளிருக்கு உணர்த்து கின்ற மணிவாசகரின் வாக்கு இதையே கூறு கின்றது.

சாதி வித்தை அழகு குலம் பொருள் தொழில் என்ற அடிப்படையில், உலகில் காணப்படும் வேறுபாடுகள் பக்தர்களுக்குக் கிடையாது என்று குறிப்பிடுகிறது, பிறிதொரு நாரத சூத்திரம். 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்.....' என்ற திருவாசக வரிகளில், ஞான நெறி நின்றார்க்கு இவை தடை என்பது உணர்த்தப்பட்டது.

பக்தி நெறியின் மேன்மையைக் கூறும் நாரத பாஞ்சராத்திரம், பக்தி 'பட்டத்து அரசி' எனவும், முத்தியும் பிற போகங்களும் அதன் 'பணிப்பெண்கள்' எனவும் கூறுமாற் றாற் பக்திநெறியின் பெருமையை உணரலாம். மாணிக்கவாசகர் போன்ற சீரடியார்களின் சிவானுபவங்கள், இந்நெறியின் சிறப்பினைப் பெரிதும் உணர்த்த வல்லன என்பது தெளிவு.

---

# "நீடு வாழ்வார்"

தெய்வ நம்பிக்கையும், தெய்வ சிந்தனையும், தெய்வ வழிபாட்டுத் தியானமும், மக்களாகிய நம் மனோரின் வாழ்க்கைக்கு மிக்க பயன் அளிப்பனவாகும். அதனாலேயே நமது தெய்வப் புலவர் திருவள்ளு வர்பெருமான்,

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.''

என்று அருளிச் செய்வாராயினர். இவ்வுண்மையினை உலகப் பேரறிஞர்கள் பலர், இந்நாளிற் பெரிதும் உணரத் தலைப்பட்டு வருகின்றனர். உலகப் புகழ்பெற்ற மன இயல்நூற் பேராசிரியரும், மனநோய் மருத்துவரும் ஆகிய கார்ல் கஸ்டாவ் யங் ( Carl Gustav Jung ) என்பவர் குறிப்பிடும் பின்வரும் செய்தி, இங்கு நாம் பெரிதும் கருதியுணர்தற்கு உரியது.

''கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். எத்துணையோ நூற்றுக் கணக்கான பிணியாளர்களுக்கு, யான் மருத்துவம் புரிந்துள்ளேன். அவர்களுள் மிகப் பெரும்பாலோர் 'புரொட்டஸ்டண்டுகள்'. ஒரு சிறுபான்மையினர் யூதர்கள். கடவுளை நம்புகின்ற கத்தோலிக்கர்களோ, ஐந்து அல்லது ஆறு பேர்களுக்கு, மேற்படாதவர் களே ஆவர்.''

''என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையில் இரண்டாம் பகுதியில் அதாவது முப்பத்தைந்து வயதுக்குமேல், தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய இறுதி வழியாகத் தமது வாழ்க்கை யிற் சமயவுணர்வு கைவரப் பெறுதலைக் கைக்கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை.''

''அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும், அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றி ஒழுகுகின்ற மக்கள் அனைவருக்கும் தருகின்ற மனநிறைவு,, ஆகிய வாழ்வியல் நல்லுணர்ச்சியினை, அவர்கள் பெற இயலாமல் இழந்து விட்டமையே யாகும். மீண்டும் சமய உணர்வு கைவரப் பெறாமல், அவர்களில் ஒருவராவது உண்மையில் தம்முடைய பிணிதீரப் பெற்றிலர்'' என்று குறிப்பிட்டிருப்பது. இங்கு நாம் கருதியுணரற்பாலது.

—ஆசிரியர்.

"During the past thirty years, people from all the civilized countries of the world have consulted me. I have treated many hundreds of patients, the large number being Protestants, a smaller number of Jews and not more than five or six believing Catholics.

Among all my patients in the second half of life that is to say, over thirtyfive years, there has not been one, whose problem in the last resort was not that of finding a religious out-look on life.

It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook"

—**Prof. Carl Gustav Jung,**
Modern Man in Search of Soul, p.264.

Also quoted by :

(1) **Dr. S. Radhakrishnan,**
Recovery of Faith, p.37.

(2) **C. A. Coulson, F. R. S.**
Science and Christian Belief, p.110.

# ஒன்றில் இரண்டு

திருமுருக.
கிருபானந்தவாரியார் அவர்கள்

சிவம், விஷ்ணு என்ற இரு பெருங் கடவுள்களை நமது பாரத நாட்டில் சான்றோர்கள் வணங்கி வழிபடுகின்றார்கள். சிவத்தை வழி படுகின்றவர்கள் சைவர்கள் ; விஷ்ணுவை வழி படுகின்றவர்கள் வைஷ்ணவர்கள்.

உண்மையறிதற்கு ஊழ் வேண்டும், உண்மை யுணராத சைவர்களும் வைஷ்ணவர் களும் வேற்றுமை மனம் படைத்து, ஒருவரை யொருவர் வைதும் வாதிட்டும் அமைதியும் சாந்தியும் இன்றி அல்லல் படுகின்றார்கள்.

சைவர்கள் விஷ்ணுவை நிந்திப்பதும், வைஷ்ணவர்கள் சிவத்தை நிந்திப்பதுமாக இருக்கின்றார்கள். இவர்கட்கு நிந்தனையில் ஒரு மகிழ்ச்சி. இது அறியாமையின் சிகரம். இந்த உலகை உற்று நோக்குங்கள் ; தட்பமும் வெப்பமும் சேர்ந்து எங்கும் காணப்படுகின்றன.

ஒரு மலர், மலராக இருக்க வேண்டுமாயின் தட்பமும், வெப்பமும் அதில் சமானமாக இருக்க வேண்டும். மலர் வாடுகின்றது ; காரணம் என்ன? அதில் சமமாக இருந்த குளிர்ச்சி குறைந்துவிட்டது. மலர் அழுகி விடுகின்றது; காரணம் என்ன? அதில் சமமாக இருந்த சூடு குறைந்துவிட்டது. எனவே சூடும் குளிர்ச்சியும் ஒன்றையொன்று விடாமல் கலந்து மலரில் இருப்பதனால்தான் மலர் அழகு செய்கின்றது.

நமது உடம்பிலும் தட்பமும் வெப்பமும் அமைந்திருக்கின்றன. சூடு குறைந்து விடுமானால் உயிர் உடம்பில் நிலை பெறுவதில்லை. சூடு குறையத் தொடங்கியவுடன் சுற்றத்தார் சுற்றி அமர்ந்து விடுகின்றார்கள். சூடும் குளிர்ச்சியும் எல்லையற்றிருக்குமானால், உயிர்கள் அங்கு தோன்றுவதில்லை. சூடு குறைந்த, வட துருவப் பிரதேசங்களிலும், குளிர்ச்சி குறைந்த சகாரா விலும் உயிர்கள் இடர்ப்பட்டுத்தான் வாழ்கின்றன. தட்பத்தின் சூக்கும ஆற்றல் திருமால்; வெப்பத்தின் சூக்கும ஆற்றல் சிவம். இந்த இரு பொருள்களும் ஒரே பொருளின் இரு பகுதிகள்.

அடியேன் 16 மாகாணங்கள் சுற்றியிருக்கின்றேன்; கடல் கடந்தும் பல நாடுகள் சென்றிருக்கின்றேன். இது வரை நான் ஒரே பக்கமுள்ள காகிதத்தைக் கண்டேனில்லை. ஒரு பக்கமுள்ள கடிதம் எங்காவது இருக்க முடியுமா? எத்துணை மெல்லிய கடிதமாயிருப்பினும் அதற்கும் இரு பக்கம் இருந்தே தீரும். ஒரு நாணயம் என்றால் அதற்கும் இரு பக்கங்கள் உண்டுதானே? இது போல் ஒரே கடவுளுக்கு இரு பக்கங்கள். ஒன்று சிவம்; ஒன்று விஷ்ணு.

சிவ மூர்த்தங்கள் அறுபத்து நான்கு என்று சிவாகமங்கள் கூறுகின்றன. இந்த அறுபத்து நான்கு மூர்த்தங்களில் கேசவார்த்தமூர்த்தி. பாதி சிவம், பாதி மால். சங்கர நாராயணர் திருக்கோயிலில் இந்த மூர்த்தி இன்றும் காட்சி தந்து இந்த உண்மையை உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

பேயாழ்வார் திருவேங்கடமலைக்குச் சென்றார். அங்குள்ள பெருமானைக் காண்கின்றார். ஒரு புறம் சடைமுடியும், மற்றொரு புறம் மணி முடியும், ஒரு கரத்தில் மழுவும், மற்றொரு கரத்தில் சக்கரமும், ஒரு பாதியில் நாகாபரணமும், மற்றொரு பாதியில் பொன்னுபரணமுமாக அவ் வுருவம் காட்சி தருகின்றது. அவர் அருட்கவி, உடனே பாடுகின்றார்.

தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னுணுந் தோன்றுமால்—சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

என்ன அருமையான காட்சி! இப்பாடலின் மாட்சிதான் என்னே! பேத புத்தியில்லாத பெருந் தகைமை. சிவத்தை வழிபடுகின்ற சிவனடியாரை நிந்திக்கின்ற திருமாலடியாரும், திருமாலை வழிபடுகின்ற திருமாலடியாரை நிந்திக்கின்ற சிவனடியாரும் இங்கு மாறுபட்டு வேறுபட்டாலும், வெந்தீ நரகில் ஒன்றுபட்டு விடுகின்றார்கள். நரகக் குழியில் இரண்டு பேருந் துள்ளித் துடித்து ''அண்ணே! உன்னை நிந்தித்து இந்தக் கதிக்கு நான் ஆளானேன்'' என்று இருவரும் அங்கு ஒற்றுமைப்பட்டு விடுவார்கள். அருணகிரியார் பாடுகின்றார்.

> ஈசர்விஷ்ணுவை சேவை
> செய்வோர்தமை இகழ்வோர்கள்
> ஈனர் இத்தனைபேர்களும்
> ஏழ்நரகு உழல்வாரே''

ஆகவே அடியவர்கள் சிவ நிந்தையும் விஷ்ணு நிந்தையும் புரிந்து நரக வெந்துயருக்கு இலக்காக வேண்டாம் என்று வேண்டுகின்றேன்.

தட்பத்தின் நிறம் பச்சை. குளிர்ச்சியை விரும்புகிறவர்கள் கண்களுக்குப் பச்சைக் கண்ணுடி புனைகின்றார்கள். படுக்கை வீட்டில் குளிர்ச்சியாக இருக்கும் பொருட்டு பச்சைக் கண்ணுடிக் கூடுடன் கூடிய விளக்கை எரிக்கின்றார்கள். குளிர்ந்த பயிர் பச்சைப் பசேல் என்று காட்சி தருகின்றது.

திருமாலின் நிறம் பச்சை. ''பச்சை மாமலைபோல் மேனி'.

வெப்பம் அதிகமானுல் கண் சிவக்கின்றது. நெருப்பின் நிறம் சிவப்பு ; சிவமூர்த்தி பவளம் போன்ற மேனியையுடையவர். குளிர்ச்சியான திருமால் நீரிடைத் துயில்கின்ருர். வெப்பமான சிவம் மயானத்தில் நடிக்கின்ருர். திருமால் கோயிலில் தீர்த்தப் பிரசாதம் வழங்கப்படுகின்றது. சிவாலயத்தில் வெந்த வெண்ணீறு வழங்கப்படுகின்றது. தட்பமான திருமாலுக்கு சூட்டை உண்டுபண்ணுகிற துளசி மாலே. வெப்பமான சிவத்துக்குக் குளிர்ச்சியைத் தருகின்ற வில்வ மாலே.

நமக்குச் சீதளம் உண்டாகி, நீர் கோர்த்துக்கொண்டு தொண்டை அடைத்து விட்டால் துளசி இலேயின் கஷாயத்தைத் தருகின்ருர்கள். பெரு நோய், தொழு நோய், மஹாரோகம் என்கின்ற கொடிய உஷ்ண வியாதியுடையோர் சிறந்த மஹாவில்வ இலேயை அதிகாலேயில் முறையே உண்பாராயின் அந்நோயின் கொடுமை தணியும். நமது முன்னேர்கள் அமைத்த இந்த அரிய நுட்பங்களே உன்னிப் பார்த்தால் பெருவியப்பு தோன்றுகின்றது.

மாதொருகூறன் (அர்த்தநாரி) என்று சிவமூர்த்தியை யுரைக்கின்றனர் ; ஒரு பாதி சிவம்; ஒரு பாதி உமை. இதுவும் முன் கூறிய உட்பொருளே உணர்த்துவதேயாகும். இதன் விளக்கம் வருமாறு.

சிவசக்தி பேதம் நான்கு. போர்ச் சக்தி, கோப சக்தி, இன்ப சக்தி, புருஷ சக்தி. போர் சக்தி—துர்க்கை, கோபசக்தி—காளி, இன்பசக்தி—உமை, புருஷசக்தி—திருமால்.

இறுதி செய்திடலே சீற்றம்
இன்பமே ஆண்மை யென்னு
அறைதரு சக்தி நான்காம்
அரன்தனக் கையை காளி
முறைதரு கௌரி யின்னேர்
மும்மையும் பெற்ருேர் ஏனேப்
பெறலருஞ் சத்தி யான்இப்
பெற்றியும் மறைகள் பேசும்

—கந்த புராணம்.

இது திருமால் கூறுகின்றதாக அமைந்த திருப்பாடல், ஆகவே உமையின் ஒரு வடிவே திருமால். ஆண்கள் இடப்பக்கம் கீழ் வைத்துச் சயனிக்க வேண்டும். பெண்கள் வலப் பக்கம் கீழ் வைத்துச் சயனிக்க வேண்டும். திருமால் எல்லா இடங்களிலும் வலப் பக்கம் கீழ்வைத்துப் பள்ளி கொண்டிருக்கும் தன்மையை நோக்குமின். அதனுல் அவர் சிவசக்தி என்பது விளங்குகின்றதன்ருே? ''அரியலால் தேவியில்லே ஐயன் ஐயாறனுர்க்கே'' என்கின்ருர் அப்பர். ''பிறை தங்கு சடையானே வலத்தே வைத்து'' என்கின்ருர் திருமங்கையாழ்வார். ''பாபயாத்வ மார் யாபமே'' என்கின்ருர் சங்கராச்சாரியார். சிவபெருமானே தேவர்களே நோக்கிப் பின்வருமாறு கூறுகின்ருர். ''திருமாலேயும் உமாதேவியையும் வேருக உரைப்பவர்கள் என் அன்புக்குப் புறம்பானவர்கள். ஒன்ருக உரைப்பவர்கள் அன்புக்கு உரியவர்கள் ஆவார்கள். உமாதேவியையும் திருமாலேயும் இகழ்பவர்கள் எரிவாய் நரகிடை வீழ்ந்து இன்னல் எய்துவார்கள்.

பூந்துழாய்ப் படலே மாலேப்
பூவைவண் ணனேயுஞ் செய்ய
மாந்தளிர் கவற்றும் மேனி
மலேமகள் தனேயும் வேருய்
ஓர்ந்துரைப் போர் என் அன்பில்
தீர்ந்தவர் ஒருவராக
ஆய்ந்துணர் கிற்போர் என்றன்
அன்பினில் சிறந்தா ரன்றே.

அலத்தகம் விளர்ப்பச் சேந்த
சீறடி யம்மெல் லோதி
சிலேக்கரும் புருவ வாட்கண்
உமையவள், தேறல் கக்கும்
மலர்த்துழாய் அலங்கல் பூவை
வண்ணனே இகழ்ந்துள்ளோர்கள்
உலப்பில் நாள் எரிவாய்த் தீய
நரகிடை உழப்பரன்றே.

—கூர்ம புராணம்.

ஒருவன் தன்னே இகழ்ந்தாலும் பொறுத்துக் கொள்வான் ; அவனது அன்புக்குரிய பத்தினியை இகழ்ந்தால் பொறுத்துக் கொள்ள மாட்டான். அதுபோல், சிவமூர்த்தி தனது சக்தியாகிய நாராயணரைச் சிறிதே இகழ்ந்தாலும் தண்டிப்பார். ஆகவே சிவத்துக்கு அன்னியமாகத் திருமாலேப் பிரித்து ஓதுதல் உணர்வு ஆகாது.

தன்னே இகழ்தல் பொறுத்திடினும்
தனதிற் கிழத்தி தனேஇகழின்
மன்னுஞ் சீற்றம் மிகும் எவர்க்கும்
மற்ருங் கதுபோல் மாயோனே
உன்னிச் சிறிதே இகழ்ந்திடினும்
ஒறுக்கும் ஈசன் ஆதலினுல்
கன்னித் துளவோன் இறைவன்எனப்
பிரித்தோதிடுதல் கடனன்றே.

—கூர்ம புராணம்.

திருமால் அறிதுயில் புரிகின்ருர் ; அம்பலவாணர் ஆனந்தக் கூத்தாடுகின்ருர். இதை நோக்க வேறு வேறு செயல் போல் தோன்றும். தூக்கம் ; ஆடல். இரண்டும் வேறு அன்று. தூக்கம் எப்போது வருகின்றது? கவலேயற்ற இடத்தில் உறக்கம். முற்காலத்தில் கடன்பட்டவர்கள் உறங்கமாட்டார்கள். கடனேத் தர வேண்டுமே என்று கவல்வார்கள்! இப்போது கடன் தந்தவர்கள் உறங்க மாட்டார்கள். எனவே கவலேயற்ற நிலேயை உணர்த்துகின்றது திருமாலின் அறிதுயில். மகிழ்ச்சி மிகுந்தால் ஆட்டம். அதிக சந்தோஷம் வந்தால் ஆடுகின்ருேம். களிப்பின் மிகுதியைத் தெரிவிக்கின்றது அம்பலவாணரது திருக் கூத்து. கவலேயற்ற இடமும், களிப்பு மிகுந்த இடமும் ஒன்றுதான். இருள் நீங்குவதும், ஒளி உண்டாவதும் வேறு வேறு சமயமா? இருள் நீங்கிய பின்னரா ஒளி யுண்டாகின்றது? ஒளி வந்த பின்னரா இருள் நீங்குகின்றது? இல்லே; இருளின் நீக்கமும் ஒளியின் ஆக்கமும் ஒரே சமயந்தான்.

இருள் நீக்கம் போல் கவலையற்ற நிலை ; ஒளியின் ஆக்கம் போல் களிப்புற்றநிலை. எனவே கவலையற்ற நிலையை மாயோன் திருப்பள்ளியும் களிப்புற்ற நிலையை சேயோன் திருநடனமும் நமக்கு உணர்த்துகின்றன. திருவரங்கத்தை யும் கோயில் என்ற சொல்லாலேயே கூறுவார் கள். பொன்னம்பலத்தையும் கோயில் என்ற சொல்லாலேயே கூறுவார்கள். பூவுலக வை குண்டம்—ஸ்ரீரங்கம். பூவுலகக் கைலாயம் — சிதம்பரம்.

ஆகவே ஒன்று திருவரங்கம்; ஒன்று கனக சபை; இரண்டையும் பொன்னரங்கம் என்றே ஆன்றோர்கள் அழைத்துள்ளார்கள். திருவரங் கத்தில் அரங்கராஜா ; ஞான சபையில் நட ராஜா. மார்கழி வைகுண்ட ஏகாதசியில் திரு வரங்கத்தில் சிறப்பு விழா ; கனக சபையிலும் திருவாதிரையில் சிறப்பு விழா.

இரு பெருந் தலங்கட்குஞ் சென்று சேவிக்க மாட்டாதவர்க்குச் சிதம்பரத்திலேயே ஒருசேர வைத்து ஒரே கும்பிடு இருவருக்கும் சேருமாறு திருமால் பள்ளி கொண்டிருக்கவும், கூத்தப் பெருமான் திருத்தாண்டவம் புரியவும் அமைந்த அமைப்பு எத்துணை இன்பத்தைத் தருகின்றது. ஒருவர் நடராஜா; இன்னொருவர் கோவிந்த ராஜா. பொய்கை யாழ்வார் கூறும் புனித வாக்கையும் ஈண்டு உணர்க.

பொன்திகழு மேனிப் புரிசடையெம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேனும் ஒருவன்
ஒருவனங்கத் தென்றும் உளன்.

ஆதலால் ஒரு பரம்பொருளின் இரு தன்மைகள் நன்மையும், நிறைவும். நன்மை : சிவம் ; நிறைவு : திருமால். (விஷ்ணு - வியாபகமா னது). ஒன்றில் இந்த இரண்டும் அமைந்துள் ளன. எனவே வேற்றுமை யுணர்ச்சியின்றி ஒன்றில் இரண்டையும் பார்த்து ஒன்றுபட்டு உலகம் உய்வு பெறுக.

---

# "வாழ்வியல் தெளிவு"

''வாழ்க்கை என்பது ஒருவகை நாடகமே, வெறும் நிழலே! உலகம் ஆகிய நாடகமேடையில் தோன்றி, ஒருகால எல்லை வரையில் ஓடி ஆடி உழன்று, அதன் பின்னர்ப் பிறிது எதுவும் கேட்கப்படாமல் மறைந் தொழிந்து, மாய்ந்து போகின்ற, ஓர் ஏழை நடிகனைப் போன்றவர்களே நாம்! இரைச்சலும் ஆரவமுராந் நிரம்புமாறு, ஒரு பொருட் குறிப்பும் இல்லாமல், அறிவிலி ஒருவனால் சொல்லப்படும் சுவையற்ற ஒரு கதையினைப் போலவே, நம்முடைய வாழ்க்கையும் உள்ளது''.

''உலக வாழ்க்கை என்பதுதான் உலவித் திரியும் வெறும் நிழலே;
நலமில் வறிய நடிகன்அவன், நடந்து குலுங்கி மேடையினில்
சிலவே நேரம் இருந்தொழிவான்; பின்னர்ச் சிறிதும் செவிக்கணுகான்;
இலகு சுவையின் றறிவிலிசொல் கதைபோற் பொருளில் வெற்றொலியே''

—தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்.

வாழ்க்கையின் பல்வேறு வகையான துன்பங்கள், தொல்லைகள், குற்றம் குறைகள், நிலையில்லாத தன்மை, வியத்தகு நிகழ்ச்சிகள், எதிர்பாரா விளைவுகள், எதிர்பார்த்து எய்தும் ஏமாற்றங்கள், விபரீத மான பற்பல மாறுதல்கள், ஆகிய நம்முடைய வாழ்வியல் நிகழ்ச்சிகளின் அனுபவங்களை எல்லாம், கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணருந்தோறும் உணருந்தோறும், நமக்குத் தெய்வம் ஒன்று உண்டு என்னும் உணர்வும் தெளிவும் ஏற்படாமல் இருத்தல் இயலாது. அதனாலேயே ஆசிரியர் இளங்கோவடிகள் ''தெய்வம்'' தெளிமின்: தெளிந்தோர்ப் பேணுமின்'' என்று அருளிச் செய்வாராயினர்.

—ஆசிரியர்

---

"Life is but a walking shadow; a poor player
That struts and frets his hour upon the stage,
And then is heard no more; it is a tale
Told by an idiot, full of sound and fury signifying nothing"

—**William Shakespeare, Macbeth.**

# ஒரே கல்வெட்டில் ஒரு நூறு கோயில்கள்

[பாகூர் சு. குப்புசாமி, புதுவை மாநிலம்]

**கல்வெட்டில் வேண்டுகோள் :**

ஐயனே! இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் சிறிதளவு நிலங்களே சொந்தமாக உள்ளன; அந்த நிலங்களுக்காக அரசுக்கு வரி செலுத்த வேண்டும்; நிலங்களிலிருந்து கிடைக்கின்ற ஆண்டு வருவாயோ மிகவும் குறைவு; வரிசெலுத்திய பிறகு எஞ்சி நிற்கும் நிதியோ அதைவிடவும் குறைவு; இந்நிலையில் கோயில் விழாக்களைக் கொண்டாட முடியவில்லை! ஏன்! ஒரு வேளைக்குக்கூட முறையான நிறைவான வகையில் இறைவனுக்குத்திருவமுது படைப்பதற்கும் வழியில்லை! இந்நிலை நீடிக்குமானல்-வெகுவிரைவில் கோயிற் காரியங்கள் தடைப்பட்டு நின்றுவிடக்கூடும்! அரசுக்கும் பழி; மக்களும் நெறி தவறிப் போவார்கள்! குறைகளைச் சொன்னேம்! இனி குறை களைந்து முறை செய்யவேண்டுவது தங்களின் பொறுப்பு.

இவ்வாறு கோரிக்கை விடுத்தவர்கள் திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஊரவை உறுப்பினர்கள்; அறநிலையங்கள், கோயிற் காரியங்கள் முட்டின்றி நடைபெற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர்கள்; கல்வியிற் சிறந்த பெரியவர்கள், ஆன்றவிந்த சான்றோர்கள்.

**நரலோகநாத மூவேந்த வேளார் :**

இக்குறைகளை எல்லாம் நிலையாக நீக்குதற்கு வழியேதும் இல்லையோ? நரலோகநாத மூவேந்த வேளாரின் கேள்வி இது. இவர் விழுப்பரைய நாட்டுச் சோழப் பேரரசின் அரசு அதிகாரி; நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதிலே நாட்டங் கொண்டவர். வின எழுப்பிஞர்-விடை இல்லை. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்; வீரநாராயண விண்ணகரில், உண்ணுழியில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானின் திருமுகத்தைப் பார்த்தார்; அவருடைய கண்கள், மண்டபம் முழுவதையும் ஒரு முறை வலம் வந்தன. செம்பியன் உம்பள நாட்டு மூவேந்த வேளார் கட்டிய அம்மண்டபம் இப்பொழுது மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. நடுவே ஊரவை உறுப்பினர்கள், ஒரு பக்கம் ஊர்ப் பொது மக்கள்; வேருெரு பக்கம் தள்ளாடும் முதியவர்கள், இன்னெருபக்கம் அறங்காவலர் குழுவினர்கள்-கூட்டமோ மிகப் பெரிது; கோரிக்கையும் பெரிது. கோரிக்கையும் கோயில்கள் பற்றியது. எவ்வாறேனும் குறைபோக்கி நிறை செய்தாக வேண்டும்! அதிகாரியின் உள்ளம் எண்ண அலைகளால் அலைமோதிக் கொண்டிருந்தது. ஊரவை உறுப்பினர்களை மீளவும் உற்று நோக்கினர். அவர் பார்வை ''வழி இல்லையோ?'' என்று வினவுவது போல் தோன்றியது.

கோயில் நிலங்கள் அளக்கப் பெற வேண்டும்! அவற்றின் எல்லைகளும் அளவுகளும் உறுதி செய்யப்பெற வேண்டும்! நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்! இறையிலி நிலங்களாக மாற்ற வேண்டும்! இவை உறுப்பினர்கள் சொன்ன வழி வகைகள்.

அதிகாரி ஆவன செய்வதாக உறுதி கூறிஞர். உடனடியாக முடிவு செய்து ஆணை பிறப்பிக்க அவருக்கு அதிகாரமில்லை. இவர் ஒரு நாட்டுக்கு மட்டுமே ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள அரசு அதிகாரி; வட்டாட்சி அலுவலர்; இன்றைய தாசில்தாரைப் போல.

**வீரநுளம்பராசர் :**

கங்கைகொண்டசோழவீரநுளம்பராசர் என்பவர், இராசேந்திர சோழ வளநாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த உயர் அதிகாரி. மாவட்ட ஆட்சித் தலைவர். இந்நாளில், பல வட்டங்களைக் கொண்ட நிலப்பரப்பை 'மாவட்டம்' என்கிறேம். அந்நாளில், பல நாடுகளைக் கொண்ட நிலப்பரப்பை 'வளநாடு' என்ருர்கள். எனவே, மாவட்டமும் வளநாடும் ஒன்றே.

விழுப்பரைய நாட்டு அதிகாரியான நரலோகநாத மூவேந்த வேளார், இராசேந்திர சோழவளநாட்டு உயரதிகாரியான வீரநுளம் பராசாரிடம் சென்ருர். திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஊர்ச்சபை உறுப்பினர்களின் கோரிக்கையை எடுத்துரைத்தார். ஆணை பிறந்தது! கோயில் நிலங்கள் அனைத்தும் இறையிலியாக மாறின! அளவுகள் வரையறுக்கப்பட்டன!

**சோழர் கால நிகழ்ச்சி:**

இது 927 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி. வில்லவர் மீனவர் வேள்குலச் சளுக்கியர், வல்லவர் கோசலர் வங்கணர் கொங்கணர்-என்று எண்ணற்ற அரசர்களை அடிபணியச் செய்தானே, அந்த இராசாதிராச சோழனின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. அப்பெருவேந்தன் ஆட்சிப் பொறுப்பேற்ற 33ஆவது ஆண்டிலேதான் (கி. பி. 1051) திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததாக அறி

கிறோம். இந்நிகழ்ச்சி கல்வெட்டாகக் காட்சி தருகிறது. இக்கல்வெட்டினைத் தாங்கி நிற்ப தால், வரதராசப்பெருமாள் கோயிலுக்கு ஒரு தனிப் பெருமை. இக்கோயிலைப் பெற்ற பெரும் பேறு திருபுவனைக்கு உண்டு. இன்றைய திரு புவனையே அன்றைய திரிபுவனமாதேவிச் சதுர் வேதி மங்கலம். இப்பொழுது பெயரும் குறுகி, ஊரும் குறுகி, புதுச்சேரி மாநிலத்துச் சிற் றூர்த் தொகுதியில் ஒன்றாகி விட்டது.

**கல்வெட்டில் பட்டியல் :**

இக்கல்வெட்டின் இடைப்பகுதி, இன்ன ஊரில், இன்ன பெயருடைய கோயிலுக்கு, இவ் வளவு நிலங்கள் இறையிலியாக மாற்றப்பட் டன என்பதைக் குறிக்கிறது. இப்பகுதியே இக் கல்வெட்டின் வரலாற்றுச் சிறப்புடைய சுவை யான உயிர்ப்பகுதி. இங்கு நீண்டதொரு பட்டி யல் காணப்பெறுகிறது. திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்தைச் சூழ்ந்த 75 ஊர் களின் பெயர்கள், அவ்வவ்வூர்களில் உள்ள கோயில்களின் பெயர்கள், அக்கோயில்களுக்குச் சொந்தமாக விளங்கிய தேவதான நிலங்களின் அளவுகள் - இவையெல்லாம் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

இவ்வூர்களெல்லாம் இன்றைக்கும் உள் ளன. சிலவற்றை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. வேறு பலவற்றின் பெயர்களோ மாறியும் சிதைந்தும் திரிந்தும் வழங்குகின்றன. கோயில்களிலும் சிலவே உள்ளன. பெரும் பான்மையான கோயில்கள் போற்றுவாரும் புரப்பாரும் இன்றிச் சிதைந்து சீரழிந்து போயின. அவற்றுள்ளும் சில சுவடற்று மறைந்துவிட்டன.

காலவெள்ளத்தை எதிர்த்து நிலைத்து நிற்கும் சில கோயில்களைப் பற்றிய செய்திகளை மட்டுமே நம்மால் உணர்ந்து கொள்ள முடி கிறது. அவற்றில், எண்ணற்ற வரலாற்று உண் மைகள் புதைந்து கிடக்கின்றன; பட்டியலின் துணைகொண்டு அந்தந்த ஊரிலும் அகழ்வாய்வு செய்தால் அருமையான கலைப்படைப்புகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இவை எல் லாம் வெளிவராத செய்திகள்; ஏன்! உள்ளூர் மக்களுக்கேகூட இக்கோயில்களைப் பற்றிய எந்தவொரு தகவலும் தெரிந்திருக்கவில்லை.

**விண்ணகரங்கள் :**

திருமால் கோயிலை விண்ணகர் என்று கூறு வது நம்மவர் மரபு. கல்வெட்டுக்களில் இப் பெயரைப் பெருவாரியாகக் காணலாம். சில சமஸ்கிருத கல்வெட்டுகள் இப்பெயரை 'விஷ்ணுக்ருஹம்' என்று குறிப்பதுண்டு. திரு புவனைக் கல்வெட்டுப் பட்டியலில் உள்ள சில விண்ணகரங்களின் பெயர்களைப் படிக்கும்போது அவற்றின் பழமையும் சிறப்பும் தெரிகின்றன.

அபராசித விண்ணகர், அருளாகர விண்ண கர், இராசேந்திர சோழவிண்ணகர், கரு மாணிக்க விண்ணகர், சோழ பாண்டிய விண்ண கர், திருநாராயணவிண்ணகர், முடிகொண்ட சோழ விண்ணகர், வீரநாராயண விண்ணகர்- இவையெல்லாம் சிற்சில ஊர்களில் பெரும்புக ழுடன் விளங்கிய விண்ணகரங்கள். இவற்றுள் அபராசித விண்ணகர் என்பது, பல்லவப் பெரு வேந்தன் அபராசித வர்மனின் (கி. பி. 879-897) பெயரால் விளங்கிய பெருமையுடையது. வீரநாராயண விண்ணகர், முதலாம் பராந்தகச் சோழனின் ( கி. பி. 907-953) சிறப்புப் பெய ரால் விளங்கிய பழமையுடையது. இராசேந் திர சோழ விண்ணகர், முடிகொண்ட சோழ விண்ணகர் ஆகிய இரண்டும், முதலாம் இராசேந்திரசோழனின் இயற்பெயராலும் சிறப்புப் பெயராலும் இருந்தவை. சோழ பாண்டிய விண்ணகர் என்பது, முதலாம் இரா சேந்திர சோழன் மகன் ஒருவனின் பெயரால் இருந்த விண்ணகர். இவ்விண்ணகரங்களில் சில இக்காலத்தில் மறைந்துவிட்டன. நம்முன் னோர் நமக்காக விட்டுச் சென்ற பெருமதிப் புடைய கருவூலங்களை இழந்துவிட்டோம்!

**ஆழ்வார்கள் :**

குறுங்குடி ஆழ்வார், சாறுக்கிராமத்தாழ் வார், சிங்கவேள் குன்றுடைய ஆழ்வார், திருமேற்கோயிலாழ்வார், திருவாய்ப்பாடி ஆழ்வார், திருவையோத்தி ஆழ்வார், தென் திருவேங்கடத்தாழ்வார், பள்ளிகொண்டாழ் வார், வீற்றிருந்தாழ்வார், வைகுந்தத்தாழ் வார், சீமத்துவராபதி ஆழ்வார் என, ஆழ் வார் என்னும் பெயரால் குறிக்கப்பெற்ற திருமால் கோயில்களின் எண்ணிக்கை 26. இவற்றுடன் இராகவதேவர், பள்ளிகொண் டார் என்னும் பெயருடைய மேலும் இரண்டு கோயில்கள். இப்பெயர்களில் சில எம்பெரு மானின் நின்ற இருந்த கிடந்த திருக்கோலங் களை நினைவூட்டுகின்றன. இன்னும் சில பெயர்கள், ஊரின் மேற்குப் பகுதியில் திருமால் கோயில்கள் நிலை பெற்றிருந்தமையைப் புலப் படுத்துகின்றன.

**ஈச்சுரங்கள் :**

அகத்தீச்சுரம், அனந்தீச்சுரம், ஆதித் தேச்சுரம், இராசராசேச்சுரம், காளீச்சுரம், பூமீச்சுரம்-இவை எல்லாம் சிற்சில ஊர்களில் ஈச்சுரம் (ஈஸ்வரம்) என்ற பெயருடன் திகழ்ந்த சிவன் கோயில்கள்.

இவற்றுள் ஆதித்தேச்சுரம் என்பது முத லாம் ஆதித்தசோழன் (கி. பி. 871-907) பெய ரால் இருந்த சிவன் கோயில். இராசராசேச் சுரம் என்பது, முதலாம் இராசராசசோழன் பெயரால் (கி. பி. 985-1014) இருந்த கோயில். 'ஸ்ரீகைலாசம்' என்பது இக்கோயிலின் இன் னொரு பெயராம். இங்கு 'மதுரையும் ஈழமும் கொண்டருளின பராந்தக தேவரின்' படிமம் நிறுவி (முதலாம் பராந்தகச் சோழனின், உருவம்), அத்தேவருக்கு நித்த நிவேதனங் களுக்காக நிலக்கொடையும் வழங்கினராம்! கல்வெட்டுக் காட்டும் செய்தி இது!

**மகாதேவர்கள் :**

ஊர்ப்பெயரோடு இணைத்துக் கூறப் பெற்ற சிவன்கோயில்கள்தாம் மிக அதிகம். அழிசுபாக்கத்து மகாதேவர், ஆழியூர்மகா தேவர், இலுப்பையூர் மகாதேவர், உருவாற் றூர் மகாதேவர், எயிற்றூர் மகாதேவர், ஏமலத்து மகாதேவர், ஒழுகரை மகாதேவர், கழுக்குளான்பாக்கத்து மகாதேவர், காப்பேற்று மகாதேவர், கீழைக்குமாரர் மங்கலத்து மகாதேவர், குண்டாங்குழி மகாதேவர், கோக் காட்டூர் மகாதேவர், சாத்தமங்கலத்து மகாதேவர், திருமுடவன்பள்ளி மகாதேவர், தெங்கம்பாக்கத்து மகாதேவர், நல்லாற்றூர் மகாதேவர், நெட்டைப்பாக்கத்து மகாதேவர், நேரியநல்லூர் மகாதேவர், பாலைப்பாடி மகாதேவர், புளியட்டிக்குளத்தூர் மகாதேவர் பெருங்களூர் மகாதேவர், வாசூர் மகாதேவர்- இவையெல்லாம் ஊர்ப்பெயரோடு இணைத்துக் கூறப்பெற்ற சிவன்கோயில்களில் சிலவே. குழகர், நக்கர், திருப்பயங்கேணிமுட்டம் என்று சிறப்புப் பெயரால் குறிக்கப்பெற்ற கோயில்களும் உண்டு. சிவன்கோயில்களின் எண்ணிக்கை 67.

இம்மாதேவரின் கோயில்களில் பல மறைந்து விட்டன. மூலவராகக் காட்சி நல்கிய இலிங்கங்கள், ஊர்களின் ஒதுக்குப் புறத்தே சிதைந்து கிடக்கின்றன. சில இடங்களில் இலிங் கத்தின் மகேச்சுரபாகத்தை, நிலத்துக்குரிய எல்லைக் கற்களாகப் பயன்படுத்தியுள்ளனர். இக்கொடுமையைக் காணும்போது, கண்களில் கண்ணீரல்ல செந்நீரே வழிந்தோடும்!

**வேறு சில கோயில்கள் :**

துர்க்கையார், மச்சணைந்த துர்க்கையார், பட்டுசத்திநங்கை, ஓங்கார சுந்தரியார், பிடாரி யார், ஐயனார், கணபதியார், சுப்பிரமணிய தேவர்-சில ஊர்களில் இக்கடவுளர்க்கும் கோயில்கள் இருந்தனவாம்; நிலங்களும் இருந் தனவாம். கல்வெட்டிலேதான் இக்கோயில் களைக் காண்கின்றோம்! காலவெள்ளம், இவற் றையும் விட்டுவைக்கவில்லை.

திருஞானசம்பந்தப் பெருமான் பாடிப் பரவிய திருவக்கரை என்னும் திருப்பதியில் இராசராசன் தண்ணீர்ப்பந்தல், இராசராசன் ஆதுலர்சாலை (மருத்துமவனை) ஆகியவையும் இருந்தனவாம். இவ்வற நிலையங்களுக்குக்கூட நிலங்கள் இருந்தனவாம்! கல்வெட்டுக் காட்டு கின்ற வரலாற்றுச் செய்தி இது!

**காப்பதே கடமை !**

முதலாம் இராசாதிராச சோழனின் ஆட்சிக்காலம்; திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஊர்ச்சபைக் கூட்டம்; உறுப்பினர் தம் கோரிக்கை; நரலோகநாத மூவேந்த வேளா ரின் ஆர்வம்; வீரநும்பளராசரின் ஆணை; கோயிற் காரியங்களில் அன்றைய மக்களுக் கிருந்த ஈடுபாடு; சிவன் திருமால் உள்ளிட்ட கோயில்களின் எண்ணிக்கை, அவற்றுக்குரிய அருமையான பெயர்கள், தமிழக வரலாற்றில் அக்கோயில்களுக்குரிய பங்கு-இவற்றையெல் லாம் ஒருமுறை வரிசையாக எண்ணிப் பார்க் கின்றோம்!

அக்கோயில்களில் பல இன்று இல்லாத நிலை; இருந்தும் சீரழிந்து உருக்குலைந்த நிலை; சிற்பங்கள் சிதைந்து சிதறிக்கிடக்கின்ற காட்சி- இவற்றையும் எண்ணிப் பார்க்கிறோம்! மூவேந்த வேளாரும் வீரநுளம்பரும் இந்நிலைக்கா இத் தனை பாடுபட்டார்கள்? உள்ளம் வேகின்றது; உடம்பு சிலிர்க்கிறது; கண்ணீர் வடிகிறது!

அழகுக் கலைக்கோயில்கள், அங்குள்ள கல் வெட்டுகள், அரிய திருமேனிகள்-இவை எல் லாம், நம் முன்னோரின் அறிவு மேம்பாட்டுக்கு- கலைத்திறனுக்கு-பக்திப் பெருக்குக்குச் சான்றாகத் திகழ்பவை! கிடைத்தற்கரிய கருவூலங்கள்! இவற்றை எல்லாம் காக்க வேண்டுவது நமது கடமையல்லவோ?

# கம்ப ராமாயணம்

'சிலம்புச் செல்வர்'
## திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்
மேலவைத் தலைவர்

(முற்றொடர்ச்சி)

ஆறு காண்டங்கள் கொண்ட இராம காதையைப் பன்னீராயிரம் செய்யுள்களால் பாடியருளிய கம்ப நாடர், உலகில் இன்னொருவரை இணை சொல்ல முடியாத மகா கவியாக அறிஞர்களால் கருதப்படுகிறார். ஆம்; அவர் மாகாப்பியம் பாடிய மகாகவிதான்! இதற்கு ஆராய்ச்சி தேவைப்படவில்லை. அத்துடன் இன்றி, வேறு கலைஞர்களிடமிருந்து பிரித்துப் பார்க்கத் தக்க வகையில் அரசியல் பேரறிஞராகவும் அவர் காட்சியளிக்கிறார்.

அவர் காலத்திலே தமிழினத்தாருக்கு உரிமைக்கு எல்லை வேங்கடமாகவும், உறவுக்கு எல்லை இமயமாகவும் இருந்து வந்தன. அந்த உரிமையும் உறவும் என்றென்றும் நிலைபெற வேண்டுமென்றும் கம்பர் விரும்பினார். உறவை நிலைக்க வைக்கும் நினைப்போடுதான் வடமொழியிலே—வடபுலத்தவரை நாயகனாகவும் நாயகியாகவும் கொண்டு வான்மீகியால் படைக்கப்பட்ட—இராமாயணத்திற்குத் தமிழிலே வழி நூல் செய்தார். அதுபோல, தமிழ் இனத்தாரை ஓரினத்தவராக ஒருமைப்படுத்துவதற்கான போதனைகளைத் தமது இராமாயணத்திலே புகுத்தி வைத்தார். அவர் தமிழினத்தாரைப் பிளவு படுத்திய மண்டல வேற்றுமைகளைக் கூறுவதை வேண்டுமென்றே தவிர்த்திருக்கிறார். அந்த மண்டல வேற்றுமைதான் களப்பிரர், பல்லவர் போன்ற வேற்று மொழியினரெல்லாம் தமிழகத்தில் புகுந்து, தமிழினத்தவர் மீது ஆதிக்கம் செலுத்தக் காரணமாக இருந்த தென்பதனைக் கம்பர் தெளிவாக அறிந்து வைத்திருந்தார்.

கம்பருக்கு முன் தோன்றிய புலவர்கள் ''சேர நாடு'' என்றும், ''சோழ நாடு'' என்றும், ''பாண்டிய நாடு'' என்றும் தமிழ் வழங்கும் திருநாட்டை மூவேறு நாடுகளாகப் பிரித்துப் பிரித்துக் கூறி வந்திருக்கின்றனர். அப்படிக் கூறுவது ''புலவர் மரபு'' என்றும் ஆகியிருந்தது. பண்டைப் புலவர்கள் 'நாடு' என்னும் பொருளிலேயே 'மண்டலம்' என்னும் சொல்லைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இந்தப் பிரிவினை உணர்ச்சியானது தமிழகம் முழுவதையும் தங்கள் தாய் நாடாகக் கருதும் ஒருமைப்பாட்டுணர்ச்சி தமிழரிடையே ஏற்படாமல் தடுத்து வந்திருக்கிறது. தெளிந்த அரசியல் ஞானியாகிய கம்பர் இதனை நன்றாக உணர்ந்திருந்தார் எனலாம். உணர்ந்ததனாற்றான், ''பொதிகை மலை''யைக் கூறுமிடத்து ''பாண்டி, நாட்டு அகன் பொதி'' என்று சொல்லாமல், ''தென்தமிழ் நாட்டு அகன் பொதி'' என்று சொல்லுகின்றார்.

இன்னும் ''தமிழுடைப் பாண்டிநாடு'' என்று சொல்லாமல், ''வண்டமிழுடைத் தென் திசை'', 'இனிய தென் தமிழ்நாடு' (நாடவிட்ட படலம்) என்றெல்லாம் சொல்லி, பாண்டி மண்டலத்தை நினைப்பூட்டுகின்றார். ஆம்; நேராகப் பாண்டிய நாடு என்று காப்பியத்தில் ஓரிடத்தில் கூட அவர் கூறவில்லை. அப்படியே, சோழ மண்டலத்தைச் சொல்லுமிடத்தும் ''அகன் பொன்னிநாடு'', ''பொன்னியகன் புனல் நாடு'' (ஆறு செல் படலம்) என்றெல்லாம் கூறுகின்றார். காப்பியம் முழுவதிலும் ஓரிடத்தில் கூட சோழ நாடு என்றோ, சோழ மண்டலம் என்றோ கம்பர் சொல்லவில்லை.

தமிழினத்தின் வரலாற்றிலே மிக நீண்ட காலம் மூவேந்தர் ஆண்ட தமிழ் நாட்டிற்குப் புறம்பான ஒரு பதியாகத் தொண்டை நாடு இருந்து வந்திருக்கிறது. அதன் ஒரு பகுதியான வடவேங்கடம் தமிழ் மொழிக்கு வரம்பாகவும், தமிழ் நிலத்தின் வடக்கெல்லையாகவும் வழி வழி தோன்றி வந்த புலவர்களால் சொல்லப்பட்டு வந்திருப்பினும், தொண்டை மண்டலத்தைத் தமிழகத்திற்குப் புறம்பான ஒரு பகுதியாகக் கருதியவர் போல, ''நீர் மேவு தொண்டை நாடு'' (நாடவிட்ட படலம்) என்றும், ''வார் புனல் தெண் திரைத் தொண்டை நல் நாடு'' (ஆறு செல் படலம்) என்றும் கம்பர் குறிப்பிட்டிருக்கிறார்.

கம்பர் வாழ்ந்த காலம் இதுவென்று வரையறுத்துச் சொல்லப்படவில்லை. பொதுவாகச் சொன்னால், 11ஆம் நூற்றாண்டு தொடங்கி, 13ஆம் நூற்றாண்டு முடிய உள்ள ஒரு கால கட்டத்தில்தான் கம்பர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுகிறது. இந்தக் காலக் கட்டத்திலே தமிழ் நாடு முழுவதிலும் சோழர் பேரரசே நிலவியது. வேற்று மொழிப் பாரம்பர்யத்தைச் சார்ந்தவரான பல்லவர்களின் ஆதிக்கத்திலிருந்தும் தமிழ் நாடு விடுபட்டிருந்த காலம் அது. இந்த அரசியல் ரீதியான ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டே

மண்டல வேறுபாடுகளை மறந்து அல்லது மறைத்துக் கம்பர் மாகாப்பியம் படைத்தார்.

தமிழ்ப் புலவர்கள் மண்டல வேறுபாடு களை வழி வழி வற்புறுத்தி வந்ததற்குக் காரணம், அவர்களுக்கிருந்த இராசபக்தியாகும். கம்பர் முடியாட்சிக் காலத்தில்தான் வாழ்ந்தார் என்றாலும், அவர் தமது காப்பியத்தில் எங்கும் தமிழ் மூவேந்தர்களில் எவரையும் வெளிப்படையாகக் கூறவில்லை. அவர் விரும்பியிருந்தால் தம் காலத்தில் வாழ்ந்த சோழப் பேரரசனை யேனும் தமது காப்ப்பியத்தில் எங்கேனும் இடம் பிடித்துச் சொல்லியிருக்கலாம். சடையப்ப வள்ளலைச் சொல்லவில்லையா? அவர் இராச பக்தியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட தேச பக்தராகவே வாழ்ந்தார் போலும்!

கம்பர் மிகச் சிறந்த ஜனநாயக வாதியாகக் காட்சியளிக்கிறார். முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்து கொண்டு, குடியாட்சி முறையைக் கூறியிருக்கிறார். மன்னனை உயிராகவும், அவனால் ஆளப்படும் மக்களை உடலாகவும் கொண்டு இயங்குகின்ற அரசு முறை ஒன்று உண்டு. அது, அப்பட்டமான கோனாட்சி முறை. மன்னனை உடலாகவும் மக்களை உயிராகவும் கொண்டு இயங்குகின்ற வேறொரு அரசு முறை உண்டு. அது குடி தழுவிய கோனாட்சி முறை.

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு''

என்னும் குறட்பாவிலே இரண்டாவதாகச் சொன்ன குடிதழீஇ நிற்கும் கோனாட்சி முறையை வள்ளுவர் வலியுறுத்துகிறார். இது தான் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் நிலவி வந்த ''அரசியல்''. இந்த அரசியலைத் தான் பால காண்டத்திலே வரும் அரசியல் படலத்திலே கம்பர் தயரதன் மீது ஏற்றிக் கூறுகின்றார்.

''வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாந் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்''

என்பது கம்பர் வாக்கு.

உயிருக்காக உடம்பே யொழிய உடம்புக் காக உயிர் அன்று. இது எல்லோருக்கும் தெரியும். உயிர் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப அதற்கு உடம்பு வந்து வாய்க்கிறது என்பர் ஞானியர்கள். இந்த ஆன்மஞானத் தத்துவத்தை அரசியலிலே பயன்படுத்துகின்றார் கம்பர். ஆம்; உயிர்களான குடிமக்களின் நல்வினைக்கேற்பச் செங்கோலனும், தீவினைக்கேற்ப கொடுங்கோலனும் வந்து வாய்க்கின்றனர். குடிமக்கள் விழிப்போடில்லையானால், செங்கோலனும் ஆணவத்தால் கொடுங்கோலனாக மாறி விடக்கூடும். அப்படித்தானே சிலம்பில் வரும் பாண்டியன் நெடுஞ்செழியன் மாறினான். ஆளுவோன், குடிமக்கள் வேறு; தான் வேறு என்றோ, தன்னை விடக் குடிமக்கள் தாழ்ந்தவர்கள், அவர்களை விடத் தான் உயர்ந்தவன் என்றோ எண்ணத் தொடங்கி விட்டால், அவன் செங்கோலனாக மாட்டான். ஆனால் கம்பர் காட்டும் அரசன் அப்படிப்பட்டவன் அல்லன்.

உயிரெலாந் தன்னுயிர் ஒப்ப ஓம்புகின்றான் ஆதலால், ''உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்'' என்கின்றார். கதைக்குப் பொருந்தும்படியாக இந்தச் செங்கோன்மையைத் தயரதன் மீது ஏற்றிக் கூறுகின்றாரென்றாலும், தம் தாயகமான தமிழகத்திலே அத்தகைய செங்கோலரசு நின்று நிலவ வேண்டும் என்று கம்பர் விரும்பினார்.

இன்றைய கட்சி வழிபட்ட அரசியல்வாதிகளுக்குக் கலைஞானமும் இலக்கிய அறிவும் தேவையற்றவையாகி விட்டன. ஆனால், கம்பர் காட்டும் ஆட்சித் தலைவன் இந்த அறியாமைக் கோ, ஆணவத்திற்கோ ஆட்பட்டவன் அல்லன். அவன் கலைஞானம் உடையவன். நல்ல இலக்கியங்களை ஆய்ந்து தெளிந்த நூலறிவு படைத்தவன். இதனை,

''எண் இல் நல்நூற் கலை என்னும்
அளக்கர் ஆய்ந்தே கடந்தான்''

என்னும் வாசகத்திலே கம்பர் தெளிவுபடுத்துகின்றார். ஆம்; தயரதன் கலைக் கடலை ஆய்ந்தே கடந்தவன் என்கிறார்.

திருமூலரும் தாம் படைத்த திருமந்திரத்திலே ''ஆன்ம ஞான நூற்களைக் கற்றறியாமல் அதிகார பீடத்தில் ஏறிவிடுவோர் காலனுக்கு நிகரானவர்'' என்று சொல்லுகின்றார்.

''கல்லா அரசனும் காலனும் நேரொக்கும்''

என்பது திருமூலர் வாக்கு. இப்படிச் சொன்னவர் அடுத்த வரியிலே, ''கல்லா அரசனின் காலன் மிக நல்லவன்'' என்கின்றார். கல்லா அரசன் காலனை யொத்தவன் என்று முதலில் கூறியவர், அதுகூடத் தவறு என்பதை உணர்ந்தவர்போல, ''கல்லா அரசனிற் காலன் மிக நல்லவன்'' என்று கூறுகின்றார்.

இங்கே கல்வி என்று திருமூலர் சொல்வது, ஆன்ம ஞானக் கல்வியையேயாகும். ஓர் ஆட்சியின் தலைவன் எந்த நாட்டை ஆளுகின்றானோ அந்த நாட்டின் மொழியிலுள்ள இலக்கியங்களை —அதாவது, அந்த நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தை யொட்டிப் படைக்கப் பட்டுள்ள மெய்யறிவு நூல்களைக் கற்றறிந்தவனாக இருக்க வேண்டுமென்பது திருமூலர் கருத்து.

''கல்வி'' என்னும் அதிகாரத்திலே திருவள்ளுவரும் இதையே கூறியுள்ளார். அந்த அதிகாரத்தையும் அரசியலைக் கூறும் பொருட்பாலிலே—அங்கும் அரசனைப் பற்றியதாக உள்ள ''இறைமாட்சி'' என்னும் அதிகாரத்தை அடுத்து வைத்திருப்பது நினைவிற் கொள்ளத் தக்கதாகும். ஆன்ம ஞானக் கல்வியானது அரசருக்கேயன்றி, அவர் கருத்து வழிச் செயல் படும் அமைச்சருக்கும் தேவைப்படும் என்பது

கம்பர் கருத்தாகும். இதனை அயோத்தியா காண்டத்தில் வரும் ''மந்திரப் படலத்''துள் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் அரசனுக்குரிய அல்லது அரசுக்குரிய அமைச்சனுனவன், அந்த நாட்டின் ஒழுக்கம், கலை, நாகரிகம், அறநெறி ஆகிய வற்றையெல்லாம் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பது கம்பரின் கருத்தாகும். இதனை அவர்,

''குலமுதல் தொன்மையும் கலையின் குப்பையும்
பலமுதல் கேள்வியும் பயனும் எய்தினர்
நலமுதல் நலியினும் நடுவு நோக்குவார்
சலமுதல் அறுத்து அரும் தருமம் தாங்கினர்''

என்ற செய்யுளில் கூறுகின்றார்.

அமைச்சர்களானேர் அரும் தருமங்களை அறிந்து, அதன் வழி ஒழுகி ஆட்சி புரிய வேண்டுமாம். எந்த நாட்டினை ஆள்கிறார்களோ, அந்த நாட்டிற்கே யுரிய கலைகள் அனைத்திலும் பொது அறிவேனும் பெற்றவர்களாக இருக்க வேண்டுமாம். கல்வி ஞானத்தால் அறிந்து கொள்ள முடியாத கலைகளைக் கேள்வி ஞானத்தாலேனும் அறிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டுமாம். தங்களுக்குக் கேடு நேர்வதாயினும் நடுவு நிலைபிறழாமல் நாடாளு மன்னனுக்கு ஆலோசனை கூறுபவர்களாக இருக்க வேண்டுமாம். இவ்வளவு தகுதிகளை அமைச்சருக்குக் கூறிய கம்பர் பெருமான், ''குலமுதல் தொன்மை'' என்ற ஒன்றையும் சேர்த்துக் கூறியுள்ளார்—இல்லை, அதை அமைச்சருக்குத் தேவைப்படும் தலையான தகுதியாகவும் வலியுறுத்தியுள்ளார். 'குல முதல் தொன்மை' என்பது செய்யுளிலே மட்டும் முதலில் இருப்பதாகக் கருத வேண்டாம். செயலுக்கும் அது தான் முதலில் இருக்க வேண்டும் என்று அந்த அரசியல் ஞானி கருதியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

''குல முதல் தொன்மை'' என்னுஞ் சொல் ''க்ஷத்திரிய வருணத்தைக் குறிப்பதாகாதோ?'' என்றால், ''ஆகாது'' என்று துணிந்து பதிலளிக்கலாம். மேலே தந்துள்ள செய்யுளிலே கம்ப நாடர் அரசருக்குரிய தகுதிகளைக் கூறவில்லை. அரசரைச் சார்ந்தொழுகும் அமைச்சர்களுக்கு உரிய தகுதிகளையே கூறுகின்றார். அமைச்சரானவர் அரச (க்ஷத்திரிய) வருணத்தினராகத் தான் இருக்க வேண்டுமென்று அரசியல் சாத்திரம் கூறவில்லை. அரச மரபினரிலிருந்துதான் அமைச்சர்களானேர் வழி வழி தேர்ந்தெடுக்கப் பட்டு வந்தார்கள் என்று தமிழ் நாட்டின் அரசியல் சரித்திரமும் கூறவில்லை.

கம்பருக்கு முற்பட்ட காலத்திலேயே அந்தண வருணத்தவரான மாணிக்க வாசகர் பாண்டி வேந்தனுக்கு அமைச்சுத் தொழில் புரிந்ததாக வரலாறு கூறுகிறது. நான்காம் வருணத்தவரான வேளாண் குலச் சேக்கிழாரும் சோழ நாட்டின் பிரதமராக இருந்தாரல்லவா!

சிலம்பில் சொல்லப்படும் ஐம்பெரும் குழுவினரும் எண்பேராயத்தினரும் அரச (க்ஷத்திரிய) வருணத்தவர் அல்லர் என்பது வெளிப்படை. ஆகவே, ஒரு நாட்டின் தொல்குடி மக்களுக்குத்தான் அந்த நாட்டின் அமைச்சர் பொறுப்புக்கு வரும் உரிமை உண்டெனக் கம்பர் கூறியதாகக் கொள்ளலாம். இது வலிந்து கூறும் பொருள் அல்ல; தமிழகத்தின் வரலாற்றை யொட்டிய வாய்மையுரை.

குலமுதல் தொன்மையை வலியுறுத்த வேண்டிய அவசியம் கம்பருக்கு ஏற்பட்டது ஏனே? இந்த வினவுக்குத் தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலே சிந்தை செலுத்தி விடை காண முயல்வோம். ஒரு நாட்டின் அமைச்சராக வருவோர் அந்நாட்டின் பழங்குடியினராக இருக்க வேண்டுமென்று திருவள்ளுவர் கூறவில்லை. வரலாற்றின் வழித் தமிழகத்தின் அரசியல் நடப்பை வைத்துக் காப்பியம் படைத்த இளங்கோவும் சொல்லவில்லை. இந்த உண்மையை நானும் மறந்திடவில்லை. அவர்கள் சொல்லாததற்குக் காரணம் உண்டு.

வள்ளுவர் காலத்திலே தமிழகத்தைத் தமிழரே ஆண்டனர். இளங்கோ காலத்திலும் அதுதான் நிலைமை. அவர்கள் காலத்திலே தமிழினத்தை ஊடுருவும் வகையில் மொழி வழிச் சிறுபான்மையினர் தமிழக மெங்கணும் திட்டுத் திட்டாக, தீவு தீவாகக் குடியிருப்புக்களைக் கொண்டிருக்கவில்லை. வாணிபத்தின் பொருட்டு, தங்கள் நாட்டுப் பண்டங்களைக் கொண்டு வந்து கொடுத்து, அவற்றிற்கு ஈடாகத் தமிழ் நாட்டுப் பண்டங்களை வாங்கிச் செல்வதற்காக அயல் நாட்டு வணிகர்கள் இந்தத் தமிழ் நாட்டின் துறைமுக நகரங்களிலே மட்டும்—அங்கும், கடற்கரை யோரங்களிலே மட்டும் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டிருந்தனர். அவர்களை, ''பதினெண் பாடையினர்'' என்னுஞ் சொல்லால் சுட்டிக் காட்டுகின்றார் இளங்கோவடிகள். ''மொழி பெயர் தேயத்தினர்'' என்றும் சொல்லுவார்கள். அவர்கள் போக்குவரத்தாக இருந்தவர்கள் தானே! அதனால், தமிழ் நாட்டு அரசியலிலே அந்த அயல் நாட்டு வணிகர்கள் ஆதிக்கம் பெற முயன்றது இல்லை. ஆகவே, அமைச்சர்களுக்குக் ''குல முதல் தொன்மை'' இன்றியமையாத தேவை என்று வள்ளுவரும் வற்புறுத்தவில்லை. இளங்கோவும் எடுத்துரைக்கவில்லை.

கம்பர் காலத்து நிலைமை வேறு. கி.பி. 3-ஆம் நூற்றுண்டு தொடங்கி 6-ஆம் நூற்றுண்டு வரை தமிழகத்திலே ''களப்பிரர்'' என்னும் வேற்று மொழியினரான ஒரு கூட்டத்தார் அரசோச்சினர். அவர்களுடைய ஆட்சி 6-ஆம் நூற்றுண்டிலே பாண்டி வேந்தன் கடுங்கோன் என்பவனுலும், பல்லவ வேந்தராலும் வீழ்த்தப் பெற்றது. திரும்பவும் களப்பிரர் தலையெடுக்கவேயில்லை. ஆயினும் அவர்கள் இந்த நாட்டை விட்டே வெளியேறி விட்டார்கள் என்று வரலாறு சொல்லவில்லை. 300 ஆண்டுக் காலம் தமிழகத்தில் தங்கித் தமிழரோடு கலந்து விட்டவர்கள் திரும்பவும் வெளியேறுவது எங்ஙனம்? ஆம்; அவர்கள் தமிழகத்தின் குடிமக்களாகவே மாறியிருக்கலாம்.

சுமார் 600 ஆண்டுக் காலம் தமிழகத்திலே ஆட்சி புரிந்த வேற்று மொழியினரான பல்லவர்களின் நிலையும் இதுதான். அவர்களுள் 9-ஆம் நூற்றாண்டிலே அரசியல் அதிகாரத்தைச் சோழத் தமிழர்களிடம் இழந்துவிட்டார்கள் என்றாலும், இந்த நாட்டை விட்டு வெளியேறி விடவில்லை, அவர்களும் தமிழ் நாட்டின் குடி மக்களாக மாறியிருக்கக் கூடும். இதனால், தமிழ ரல்லாத சிறுபான்மையினர் என்பதாகப் புதிதாகச் சில கூட்டத்தார் தமிழகத்தில் தோன்றியிருக்க வேண்டும். அவர்கள் ஆட்சி புரிந்த மரபினராதலால் செல்வத்திலும் செல்வாக்கிலும் பழங்குடித் தமிழர்களை விடவும் மேம்பட்டவர்களாகவும் இருந்திருத்தல் கூடும். அதனால், அவர்களை அமைச்சராக்குவதைத் தமிழ் மன்னர் தவிர்க்க வேண்டும் என்று கம்பர் சொல்லாமல் சொல்லுகின்றார். இனங்கண்டு கொண்டு கம்ப ராமாயணம் முழுவதையும் ஆழ்ந்து படித்துப் பொருள் காண்போர், ''குல முதல் தொன்மை'' என்னும் சொல்லுக்கு யான் தரும் விளக்கத்தை மறுக்க மாட்டார்கள். நாம் வாழ்வது கம்பர் காலத்திலல்ல என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

கம்பர் வாழ்ந்த காலத்திலே 'கம்யூனிசம்' —சோஷலிசம்'—'காந்தியிசம்' என்று இந்நாளில் பேசப்படும் நவீன 'இசங்'களெல்லாம் தோன்றியிருக்கவில்லை. ஆனால், 'மனித தருமம்' என்னும் அறநெறி தமிழர் சமுதாயத்திலே ஆழமாக வேரூன்றியிருந்தது. ஒரு உயிருக்கும் தீங்கிழைக்கக் கூடாது என்பது தமிழர் நாகரிகமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அரசன் என்போன் ஆறறிவு படைத்த மனிதர்களிடம் மட்டுமல்லாமல், ஓரறிவு படைத்த தாவரத்திடமும் கருணை காட்டக் கடமைப்பட்டிருக்கிறான் என்பது அரசியல் உலகில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதனாற்றான், முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்தான் பாரி! ஒரு புறாவின் உயிர் காக்கத் தன் உடலில் இருந்து தசையைக் கொடுத்தான் மன்னன் சிபி! கன்றை யிழந்த தாய்ப் பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தன் மகன் மீது தேரைச் செலுத்தினான் மனுநீதிச் சோழன்.

இந்தத் தருமவான்களின் வழியில் வந்த கம்ப நாடர் சுரண்டலற்ற ஒரு சம தர்ம சமுதாயத்தைதமது காப்பியத்திலே கற்பனை செய்து காட்டுகின்றார். தமிழ் நாட்டின் மீது அடங்காக் காதல் கொண்ட தமிழரான அந்த மகாகவி வருங்காலத் தமிழகம் எப்படிஅமைய வேண்டுமென்பதனைச் சொல்லாமல் சொல்லுகின்றார். கதைப் போக்கின்படிச் சொல்ல வேண்டுமாதலால் கோசல நாட்டின் மேலேற்றிச் சொல்லுகின்றார்.

கோசலத்திலே 'வண்மை' என்பதே இல்லையாம். காரணம் 'வறுமை' இல்லாததுதான். 'ஏழை' யென ஒருவன் இருப்பதே 'பணக்காரன் என்னும் ஒருவன் இருப்பதால்தானே! பணக்காரன் இல்லாத நாட்டிலே ஏழை யென்றும் ஒருவன் இருக்க முடியாதுதானே! இதனை உணர்த்தத்தான் ''வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்'' என்கின்றார்.

கோசலத்திலே 'அறியாமை' என்பதே இல்லையாம். காரணம், ஏட்டுக் கல்வியின் மூலமாக மட்டுமின்றி, செவிச் செல்வமாகவும் மக்கள் எல்லோரும் அறிவுச் செல்வத்தைப் பெற்றிருப்பதுதான். இதனை, 'வெண்மை இல்லை பல்கேள்வி மேவலான்' என்னும் வாசகத்தான் அறிவிக்கின்றார்.

'உண்மை' என்பதாகவும் ஒன்று இந்த நாட்டிலே இல்லையாம். ஏனெனில், 'பொய்' என்பதாக ஒன்று இல்லாததால். பொய் வாழ்ந்தால்தானே உண்மையும் தேவைப்படும். பொய் வாழாத நாட்டிலே உண்மைக்கு வாழ்வேது?

நாட்டிற்குப் பகைவரே இல்லாததால் திண்தோள் படைத்த ராணுவத்தினரே இல்லையாம்! இனி, கம்பருடைய பாடல் முழுவதையும் பார்ப்போம் :

வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை யில்லைபொய், யுரையிலாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.

கோசல நாடு இத்தகையதென்றால், அதன் தலைமையிடமான அயோத்தி மாநகர் எத்தகையதோ? அதையும் கூறுகின்றார் கம்பர்.

கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்வி முற்ற
வல்லாரு மில்லை; அவை வல்லார் அல்லாரு மில்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லைமாதோ!

கல்வியை விரும்பாதவர்களே இல்லையாதலால், கல்வி கற்றுத் தேர்ந்தார் என யாரும் இல்லையாம். உழைத்துப் பிழைப்பதை மதமாகக் கொண்டு மக்கள் வாழ்வதால், அத்தியாவசியத் தேவைகள் அனைத்தையும் அனைவரும் பெற்று வாழ்கிறார்களாம். அதனால் செல்வம் உடையாரென்று சிலரும், அஃதில்லாத ஏழையரென்று பலரும் அயோத்தி நகரில் இருக்கவில்லையாம்.

இன்னுஞ் சொல்லுகிறார் : அயோத்தி நகரிலே ஊர்க் காவலர்களே இல்லையாம் ! காரணம் கள்வர்களே இல்லாததுதான்! ஆம்; ராணுவமும் போலீசும் இல்லாத சமுதாயத்தையே கம்பர் காட்டுகின்றார்.

இதை விடவும் வியப்புக்குரிய செய்தி என்னவென்றால், வள்ளல்களே அயோத்தி நகரில் இல்லாததுதான். ஏனெனில், கையேந்திப் பெறுவதற்கு ஏழைகளும் இல்லையல்லவா! இதனை,

''கள்வாரி லாமைப் பொருள்
காவலும் இல்லை, யாதும்
கொள்வாரிலாமைக் கொடுப்
பார்களு மில்லை மாதோ!''

என்னும் வரிகளில் கூறுகின்றார். ஒரே வாசகத்தில் சொல்வதானால், வர்க்க பேதமற்ற சமுதாயத்தைத் தமது காப்பியத்திலே கம்ப நாடர்

கற்பித்துக் காட்டுகின்ருர். தாம் காணும் சமுதாயத்தை ஒரு பாடலில் முழுமையாகக் காட்டுகின்ருர் கம்பர். அதையும் பார்ப்போம்;

ஏகம் முதல்கல்வி முளைத்தெழுந்து
எண்ணில் கேள்வி
ஆகும் முதற்றிண் பணை போக்கி,
அருந்த வத்தின்
சாகந் தழைத்து அன்பு அரும்பித்,
தருமம் மலர்ந்து,
போகங் கனியொன்று பழுத்தது
போலும் அன்றே!

ஆம்; மெய்ஞ்ஞானக் கல்வியை வித்தாகக் கொண்டு, அதிலிருந்து முளைத்தெழுந்து அளவிறந்த கேள்விகளாகிய கிளைகளைப் படைத்து, அரிய தவமாகிய இலைகளைப் பெற்று, அன்பாகிய அரும்புகளை விட்டு, அதிலிருந்து தருமம் என்னும் மலர் மலர்ந்து, போக வாழ்வு என்னும் பழுத்த கனி போன்று விளங்குகின்றது அயோத்தி. கம்பர், தம் காலத்தில் நிலவிய குறுகியதான மண்டலப் பற்றுக்களிலிருந்து விடுபட்டவர். மதக் காழ்ப்புக்களிலிருந்தும் விலகி வாழ்ந்தவர். சாதிப் பூசல்களுக்கும் புறம்பாக இருந்தவர். அரச பக்தியை விடவும் பெரியதான தேச பக்தியை மதமாகக் கொண்டவர். அதனை அடிப்படையாகக் கொண்டு பாரதத்தின் கலாச்சார ஒருமைப்பாட்டைக் காப்பாற்றப் பாடுபட்டனர். இந்தத் தேச பக்திக்கும் ஒருமைப்பாட்டிற்கும் கேடற்ற வகையிலே உலகம் எங்கணும் பரவியிருக்கும் உயிர்க் குலம் அனைத்தையும் நேசித்தவர். இதனுற்ருன், இந்த இருபதாம் நூற்ருண்டில் பேசப்படும் 'இசங்'களையெல்லாம் தன்னுள் அடக்கிய' தமிழரிசத்'தைப் பாடியுள்ளார். அந்த இசத்தின் வழி உரிமையுள்ள தமிழகத்தையும், ஒருமைப்பாடுடைய பாரதத்தையும், சுரண்டலற்ற சமுதாயத்தையும் படைத்துக் காட்டியிருக்கிருர். ''கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகுத்தியவர்'' என்ருெரு பெருமை வள்ளுவருக்கு உண்டு. அதுபோல, வான்மீகி ராமாயணத்தைத் துளைத்துத் துளைத்து அதிலே தமிழ் இனவுணர்ச்சியைப் புகுத்தியவர் கம்பர்.

---

# கடவுளுணர்ச்சி

கடவுளுணர்ச்சி பெறுவதற்கு நாம் வேறு பிற சாதனங்களோ, சான்றுகளோ தேட வேண்டுவதில்லை. நம்முடைய உடம்பின் அமைப்பினை ஒரு சிறிது உன்னிப் பார்த்து உணர்ந்தாலும்கூட, நமக்குக் கடவுளுணர்ச்சி ஏற்படுதல் திண்ணம்.

''நமது மனித உடம்பில் 600 தசை நார்கள், 1,000 மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள், 550 இரத்த நாளங்கள், 16 சதுர அடிப் பரப்புடைய மென்தோல், 15 லட்சம் வியர்வைக் கோளங்கள், மூச்சுப் பையில் தேன்கூடு போன்ற 70 கோடி கண்ணறைகள், $3 \times 10^{12}$ நரம்புச் செல்கள், 300 லட்சம் வெள்ளையணுக்கள், $18 \times 10^{13}$ சிவப்பணுக்கள், 2,50,000 தலைமயிர்கள் ஆகியவை உள்ளன. 70 ஆண்டுகளில் நமது இதயம் 250 கோடி தடவைகள் துடிக்கின்றன. 5,00,000 டன் இரத்தத்தை வெளியேற்றி உடம்பிற் பரவச் செய்கின்றது. நாள்தோறும் 36 அவுன்சு அளவு உமிழ்நீர் சுரந்து விழுங்கப் படுகின்றது. 120 முதல் 240 அவுன்சு வரை வயிற்றிற் செறிநீர் ஊறி, உணவைச் செறிப்பித்துக் கிருமிகளைக் கொல்லுகின்றது.''

இதுபோன்ற எத்துணையோ பல வியத்தகு செயல்களை யெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, நாம் கடவுள் உணர்ச்சி அடையப் பெறுதல் திண்ணம்.

—லூயி லெகுவென்

—தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்

"There are in the human body 600 muscles, 1000 miles of blood vessels, 550 arteries, 16 square feet of skin, $1\frac{1}{2}$ million sweat glands, 700 million cells in honeycomb fashion in the lungs, $3 \times 10^{12}$ nerve cells, 30 million white corpusls, $18 \times 10^{13}$ red corpusles, and 2,50,000 hairs on the head. In 70 years, the heart beats 2,500 million times and lifts, 5,00,000 tons of blood, 3 pints of saliva are swallowed daily and the stomach generates 5 to 10 quarts of gastric juice daily which disgests the food and destroys the germs".

—LOUIS LEGUEN.

---

# பேய் முதல் கடவுள் வரை

''செந்தமிழ்ச் செல்வர்''

**திரு. கி. வா. ஜகந்நாதன்,** எம். ஏ.,

உலகில் தோன்றிய பிராணிகளில் மனித வளர்ச்சிக்கும் மற்ற விலங்கினங்களின் வளர்ச்சிக்கும் ஒரு வேறுபாடு உண்டு. விலங்கு வளர்ந்தால் அது குறுக்கே வளரும். விலங்கு என்ற சொல்லுக்கே குறுக்கு என்று பொருள். வடமொழியில் திர்யக் என்று சொல்வார்கள். மனிதனே நெட்டையாக வளர்கிறான். அவன் உடம்பு மேல் நோக்கி வளர்கிறது. உடம்பு மட்டும் மேல் நோக்கி வளர்ந்தால் போதாது; உள்ளமும் மேல் நோக்கி வளர வேண்டும். அப்போதுதான் அவன் உண்மையான மனிதன் ஆக முடியும்.

தோற்றத்தில் மனித உருப் பெற்றிருந்தாலும், பலருக்கு உள்ளம் அதற்கு ஏற்ப வளர்வதில்லை; உயர்வதில்லை. மனிதன் உயர உயர அவன் பார்வை விரியும். வீட்டின் கூரையில் ஏறினவனுக்கு வீதி முழுவதும் தெரியும். மலையின் மேல் ஏறியவனுக்கு ஊர் முழுவதும் தெரியும். குணமென்னும் குன்று ஏறி நிற்பவர்களுக்கு விரிந்த பார்வை, பிறருடைய நன்மை தீமைகளையும் அறியும் நிலை உண்டாகும்.

மனிதர்களில் உள்ளத்தால் உயர்ந்தவர்களிலும் பல வேறுபாடு உண்டு. அந்த உயரத்துக்கு ஏற்றபடி அவர்களுடைய அகப் பார்வை விரியும். மனித வடிவத்தில் விலங்குணர்வோடு வாழ்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள்.

மேல் நாட்டில் ஒரு தத்துவ ஞானி பட்டப் பகலில் கைவிளக்கை ஏந்திக் கொண்டு திரிந்தாராம். ''ஏன் ஐயா, இப்படித் திரிகின்றீர்?'' என்று ஒருவன் கேட்டான். ''இத்தனை பேரில் மனிதன் யாராவது இருக்கிறானா என்று தேடிப் பார்க்கிறேன்'' என்றாராம் அந்த ஞானி.

சென்னையில் லிங்கி செட்டி தெருவில் ஒரு வீட்டின் திண்ணையில் ஒரு ஞானி அமர்ந்திருந்தார். அவர் பெயர் சுரைக்காய் சுவாமிகள் என்று நினைக்கிறேன். அந்த வழியே யாரேனும் போனால், ''அதோ ஒரு நாய் போகிறது'', ''அதோ ஒரு கழுதை போகிறது'' என்று சொல்வாராம். ஒரு சமயம் இராமலிங்க சுவாமிகள் அந்த வழியே போனாராம். அப்போது அவர் ''இதோ ஒரு மனிதர் போகிறார்'' என்றாராம். மனித வடிவத்தில் உலவுகிறவர்கள் யாவருமே உள்ளத்தால் மனிதப் பண்புடையவராக இருப்பதில்லை என்பதை இந்த நிகழ்ச்சி காட்டுகிறது.

திருவள்ளுவர் உலகத்தை நன்கு பார்த்தவர். அவருடைய புறப் பார்வையும் அகப் பார்வையும் மிக விரிந்தவை; மிகக் கூர்மையானவை. அவர் உள்ளங்களில் விரிவையும் சுருக்கத்தையும் பார்த்தவர். மனிதப் பண்பின் உயர்வையும், தாழ்வையும் பார்த்தவர். குணத்தால் உயர்ந்த மலைகளையும் குணத்தால் தாழ்ந்த குட்டைகளையும் கண்டறிந்தவர்.

அவர் மனித வடிவில் யார் யார்இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து சொல்லியிருக்கிறார். அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்.

பேய்கள் உண்மையில் இருக்கின்றனவா? அல்லது வெறும் கற்பனையா? இதைப் பற்றிப் பல வேறு வகையான கருத்துக்கள் இருக்கின்றன. ''கட்டுக் கதைகளில்தான் பேயைக் காணுகின்றோமேயன்றி, உண்மையில் பேய் என்பதே இல்லை; அது வெறும் கற்பனை'' என்று உறுதியாக நம்புகிறவர்கள் இருக்கிறார்கள்.

திருவள்ளுவர் பேய்கள்இருக்கின்றனஎன்று சொல்கிறார். 'அவர் மூடநம்பிக்கை உள்ளவரா? சிறந்த அறிவாளியாயிற்றே! அவர் கூடப் பேய்களை நம்புகிறாரா?' என்று நீங்கள் கேட்கலாம். அவர் நாம் கண்ணால் பார்க்கத் தக்க பேய்களை இனம் காட்டுகிறார்.

அவர் காட்டுவது மனிதப் பேய்களைத் தான்; அதாவது மனித வடிவத்தில் திரியும் பேய்களையே அவர் சொல்கிறார்.

உலகத்தில் ஒழுக்க சீலர்கள், சான்றோர்கள் சில கருத்துக்களை ஒரே மாதிரி சொல்லியிருக்கிறார்கள். கடவுள் உண்டு; புண்ணிய பாவம் உண்டு, கர்ம பலன் உண்டு என்றெல்லாம் பலகாலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அவற்றை ஒப்புக் கொள்ளாமல், ''அவை எல்லாம் பொய்யுரை, கடவுள் இல்லை, கர்ம பலன் இல்லை'' என்று சொல்லும் பேர்வழிகள் யாரோ, அவர்களே மனித வடிவத்தில் உலவும் பேய்களாம்.

''உலகத்தார் உண்டென்பது இல்என்பான், வையத்து
அலகையா வைக்கப் படும்''.

ஒழுக்கத்திலே உயர்ந்து நிற்பவர்கள் உண்டு என்று சொல்வதை மறுத்து இல்லை என்று சொல்கிறவன்; உலகத்தில் கண்கூடாகக் காணும் பேயாக வைத்து எண்ணப்படுவான். உலகத்தார்—உயர்ந்தவர்கள். அலகை--பேய்.

மனிதர்க்குள்ளே விலங்குகளையும் பார்க்கிறார் திருவள்ளுவர். கல்வி கற்றவர்கள்தாம் மனிதர்களாம்; மற்றவர்கள் விலங்குகளாம்.

''விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்''.

என்பதில் அதைத் தானே சொல்கிறார்? விலங்குக்கு அறிவுக்கண் இல்லை. கண்ணால் காண்பதை அப்படியே நம்பும். பின்னால் வருவதை எண்ணிப் பார்க்காது. கல்வியறிவு இல்லாதவனும் பொருள்களின் உண்மையை உணர மாட்டான். இதனால் இன்ன நேரும் என்று ஆய்ந்து பார்க்க மாட்டான். ஆகையால் கல்லாதவனை விலங்கு என்று சொன்னார்.

மனிதர்களிலே மாடுகளும் உண்டு; புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு நம்மை ஏமாற்றும் மாடுகள் என்று சிலரை அவர் இனம் காட்டுகிறார். துறவுக் கோலம் பூண்டு, செய்யத் தகாத செயல்களைச் செய்யும் போலிகளையே அவர் அப்படிச் சொல்கிறார்.

''வலியில் நிலைமையான் வல்உருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்து மேய்ந் தற்று''.

என்று அவர் கூறுகிறார்.

ஒரு மாடு வயலில் புகுந்து மேய்கிறது. வயலுக்குடையவன் அதைக் கண்டால் அடித்து ஓட்டி விடுவான். ஆனால் வயலுக்குள்ளே புலி புகுந்தால் அவன் அஞ்சி ஓடிப் போவான். ஒரு பசு மாடு புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு பயிரை மேய்கிறது. வயல் காரன் புலியென்று பயந்து ஓடி விடுவான். அது பயிரை மேய்கிறதைக் கவனிக்கும் அளவுக்குஅவனுக்குப் பொறுமை இராது. அச்சத்தால் அவன் அறிவு தடுமாறி ஓடி விடுவான். பசு மாடு வயிறாரப் பயிரை மேயும்.

ஆனால் எத்தனை நாளைக்கு இது நடைபெறும்? பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம். பலரையும் பலகாலம் ஏமாற்ற முடியாது. பசு மாட்டின் திருட்டுத் தனம் ஒரு நாள் வெளிப்பட்டுவிடும். அப்போது அதற்கு என்ன கதி வாய்க்கும் என்பதையும் சொல்ல வேண்டுமா? பயிரை மேய்கிறதே என்ற கோபத்தோடு, இவ்வளவு நாள் நம்மை ஏமாற்றிக் கொண்டல்லவா திரிகிறது என்ற உணர்ச்சியும் சேர்ந்து கொண்டபோது மாட்டுக்குக் கிடைக்கும் தண்டனை சிறிதாகவா இருக்கும்?

மனிதர்களில் புழுவும் கூட உண்டு. உள்ளத்தினால் புழுப் போன்றவர்கள் அவர்கள். புழுவுக்கு எலும்பு இல்லை. வெயிலில் போட்டால் அது வெப்பம் தாங்காமல் சுருண்டு மடிந்து விடும். அறக் கடவுள் என்ற கதிரவன் தன்னுடைய அறஆணை என்ற கதிர்களை வீசிக் கொண்டிருக்கிறது. அன்பு என்னும் எலும்புப் பலமுடையவர்கள் அந்தக் கதிர்களை ஏற்றுக் குளிர் காய்கிறார்கள்; இதமாக அனுபவிக்கிறார்கள். ஆனால் அன்பு என்ற என்பைப் பெறாத புழுப் போன்ற மனிதர்கள், அறக் கடவுளின் அருளையே கொடுமையாக அனுபவிக்கிறார்கள். கதிரவன் கதிரின் முன் மனிதன் குளிர் காய்கிறான்; புழு சுருண்டு மடிகிறது. அன்பு என்னும் என்பை உடையவன் மனிதன். அவனுக்கு அற வடிவமாக இருக்கும் இறைவனுடைய செயல் இதமாக இருக்கும். அந்த அன்பாகிய என்பைப் பெறாதவன் புழுவுக்குச் சமானம். அறக் கடவுளின் செயலை அவன் வதமாகக் காண்பான். இதமும் வதமும் கதிரில் இல்லை. ஏற்றுக் கொள்ளுவோனுடைய என்புப் பலத்தைப் பொறுத்தவை அவை. இப்படியெல்லாம் விரிவாக எண்ணமிடும்படி ஒரு திருக்குறளைச் சொல்கிறார்.

''என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்''.

(எலும்பு இல்லாத புழுவைக் கதிரவனுடைய வெயில் துன்புறுத்திக் கொல்வது போல, அன்பு இல்லாத உயிரை அறக் கடவுள் தண்டிக்கும்).

'அறக் கடவுள் காயும்' என்று சொன்னாலும், அறக்கடவுள் நடுநிலை பிறழ்ந்து செயற்படும் என்று கொள்ளக் கூடாது. புழுவின் என்பு இல்லாத மெலிவு காரணமாகக் கதிரவன் கிரணத்தைத் தாங்க மாட்டாமல் இறப்பது போல, மனிதனின் அன்பு இல்லாத குறையே அறக்கடவுள் அருளைத் துன்பமாக அனுபவிக்கச் செய்கிறது என்று கொள்ள வேண்டும்.

இது வரையில் பேயையும், விலங்கையும், மனிதனையும்; புழுவையும் பார்த்தோம். பேயை விட விலங்கு சிறந்தது; விலங்கை விட மனிதன் சிறந்தவன். அவனை விடத் தேவன் சிறந்தவன்.

விண்ணுலகத்தில் தேவர்கள் வாழ்கிறார்கள் என்று நூல்கள் சொல்கின்றன. ஆனால் அவர்களை நாம் கண்ணால் கண்டதில்லை. திருவள்ளுவர் உலகத்தில் தேவர்களைப் பார்க்கிறார்; நமக்கும் காட்டுகிறார். 'எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்கிறவன் மண்ணுலகத்திலே இருந்தாலும் வானுலகில் வாழும் தேவனாகவே எண்ணுவதற்குரியவன்' என்று அவர் சொல்கிறார்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

வாழ்வாங்கு வாழ்வது எப்படி? அதைத்தான் திருக்குறளில் 1330 அருங் குறளால் நமக்கு எடுத்துச் சொல்கிறார். எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது என்பவற்றையெல்லாம் அவர் அறிவுறுத்துகிறார். விலக்க வேண்டியதை விலக்காமல், செய்ய வேண்டியதைச் செய்யாமல் போனால் வாழ்க்கையே வீணாகிப் போய்விடும் என்று சொல்கிறார்.

''செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்''

செய்தக்க, செய்தக்க அல்ல ஆகிய இரண்டையும் வேதம் சொல்கிறது. அவற்றை விதி நிஷேதங்கள் என்று சொல்வார்கள். திருக்குறளும் அவற்றைச் சொல்வதனுல் அதை வேதம் என்றே நாம் போற்றுகிறேம்.

மனிதனுகப் பிறந்தவன் விதித்தனவற்றைச் செய்து விலக்கியவற்றைச் செய்யாமல் வாழ்ந்தால் அவன் மனிதனுள் மாணிக்கமாக, நிலத்தில் உலாவும் தேவனுகி விடுவான். இதை வள்ளுவர் கூறியதைப் பார்த்தோம்.

இறுதியில் மனிதன் தெய்வத்தோடொட்டிய தெய்வமே ஆகிவிடலாம். மனிதர் உலகத்தைவிட உயர்ந்தது தேவருலகம். அதைவிடச் சிறந்தது மோட்ச உலகம். இந்த உலகில் பிறந்தவர்கள் இறந்து பிறந்து உழலுவார்கள். தேவ லோகத்தில் வாழ்பவர்களுக்கும் இறப்பும் உண்டு; பிறப்பும் உண்டு. வீட்டுலகத்தை அடைந்தவர்கள், மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சார மாட்டார்கள். அவர்கள் தெய்வத்தோடு கலந்து தெய்வமே ஆகிவிடுவார்கள். இந்த இறுதியான உயர்நிலையையும் வள்ளுவர் சொல்கிருர்.

''யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானேர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''

[யான் என்னும் அகங்காரத்தையும், எனது என்னும் மமகாரத்தையும் அறுப்பவன், வானவர்களுக்கும் எட்டாமல் உயர்ந்ததாகிய வீட்டுலகத்தை அடைவான்.]

இப்படிச் சொன்னதோடு அவர் நிற்கவில்லை. இந்த உலகத்திலேயே, மோட்ச ஆனந்தத்தைப் பெறும் நிலையை மனிதன் பெறலாம் என்றே சொல்கிருர்.

''ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்''

என்பது ஒரு குறள். ''எதனுலும் திருப்தியடையாத இயல்பையுடைய ஆசையை அடியோடு ஒழித்து விட்டால், அத்தகைய உயர்ந்த நிலையே என்றும் மாருத இயல்புடைய முத்தியின்பத்தைக் கிடைக்கச் செய்யும்.

ஆகவே அத்தகையவன் மனித உலகத்தில், நடமாடும் தெய்வமே ஆகி விடுகிருன். அவனைச் சீவன் முக்தன் என்று நூல்கள் சொல்லும். ஆகவே திருவள்ளுவர் மனிதர் கூட்டத்தில் பேயைக் காட்டினர். விலங்கைக் காட்டினர்; மனிதனைக் காட்டினர்; தேவனைக் காட்டினர்; தெய்வத்தையே காட்டி விட்டார்.

மனிதன், உலகத்தார் உண்டென்பதை உண்டென்று நம்பிப் பேய்க் கோலம் மாறி, கல்வி கற்று விலங்குத் தன்மை மாறி மனிதனுகி, வாழ்வாங்கு வாழ்ந்து தேவனுக உயர்ந்து, அவாவை அறுத்துக் கடவுள் நிலைக்கு உயர்ந்து நிற்க வேண்டும் என்று திருவள்ளுவர் நமக்கு அறிவுரை கூறுகிருர். அவரே அப்படி உயர்ந்து நின்றவர் அல்லவா!

# "கடவுள் ஒருவர் உண்டு"

''கடவுள் ஒருவர் உண்டு என்பது, நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல்களை ஒரு சிறிது உன்னிப் பார்த்தாலே நமக்குப் புலனுகும். நமக்கு மேற்பட்ட இயற்கைச் சட்டம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதுதான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி, ஒழுங்குபடுத்தி வருகின்றது. ஏதோ நம்மால்தான் எல்லாம் நடப்பது போலக் கருதிக் கொண்டு, நாம் மேற்கொள்ளும் முனைப்பு மிக்க செயல்கள் ஒருவகையில் தேவையில்லாதனவும் பயனற்றனவுமே யாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல் நிலையில்தான், நாம் வன்மையுடையவர்களாகிறேம். செருக்கற்ற பணிவுடைமையினுல்தான், நமக்குத் தெய்விக நிலை கிடைக்கின்றது. நம்பிக்கையும் அன்புமே நம்முடைய ஏராளமான கவலைச் சுமைகளினின்று நம்மை விடுவித்து, நமக்கு நலம் விளைவிக்கின்றன. ஓ! என் அன்பிற் சிறந்த உடன்பிறப்பாளர்களே! கடவுள் இருக்கின்ருர்''

''இயற்கைப் பொருள்களினுள்ளும், ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திற்கு மேலும், கடவுள் என்ற ஓர் உயிர்ப் பொருள் உலவி நிலவி வருகின்றது. அதுவே நம்மை இயக்கி நிற்கின்றது. உலக அமைப்பை, நாம் ஏதும் பிறழச் செய்துவிடாதபடி, அதுதான் கவனித்துக் கொள்ளுகின்றது. உலகப் பொருள்களி லெல்லாம், அது தன்னுடைய ஆற்றல் மிக்க கவர்ச்சித் திறனைப் பாய்ச்சி, ஊடுருவச் செய்துள்ளது. அதன் அறிவுரையை உடன்பட்டு ஒழுகும்போது, நாம் வளர்ச்சியும் செழிப்பும் அடைகின்றேம். அதன் சிற்றுயிர்களை நாம் வருத்தமுறப்படும்போது, அது நம் கைகளைப் பிணித்து விடுகின்றது. அல்லது நம்மையே தாக்குமாறு செய்கின்றது. உலகப் பொருள் அமைப்புகள், செயல்கள், யாவுமே, கடவுள் ஒருவர் உண்டு என்று நமக்கு உணர்த்தி, நம்பிக்கை கொள்ளச் செய்யும் வகையிலேயே அமைந்திருக்கின்றன''

—எமர்சன், தமிழாக்கம் ந. ரா. முருகவேள்.

"A little consideration of what takes place around us every day would show us that a higher law than that of our will, regulates events; that our painful labours are very unnecessary, altogether fruitless; that only in our easy, simple, spontaneous action are we strong, and by contenting ourselves with obedience we become divine. Belief and love will relieve us of a vast load of care. O! My brothers! God exists.

There is a soul at the centre of nature and over the will of every man, so that none of us can wrong the universe. It has so infused its strong enchantment into nature that we prosper when we accept its advice; and when we struggle to wound its creatures, our hands are glued to our sides, or they beat our own breasts. The whole course of things goes to teach us faith".

—RALPH WALDO EMERSON.

# எம்பெருமானாரும், திவ்வியப் பிரபந்தமும்

158635

'மகாவித்வான்'

திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்

ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்கள் எல்லாம் உலகில் மலினமாகி மறைந்திருந்த காலத்தில், நாதமுனிகள் மிகவும் பாடுபட்டு, நம்மாழ்வாரை யோக தசையில் தரிசித்துத் திவ்வியப் பிரபந்தங்களை எல்லாம் பெற்று, விசேடப் பிரச்சாரம் செய்தருளினதாக வரலாறு உள்ளது. இது பின்புள்ளவர்கள் கற்பனையாக எழுதி வைத்தது என்று சொல்வதற்கு இடமில்லாதபடி வேதாந்த தேசிகர் முதலிய முன்னோர்களும் குருபரம்பரைச் சாரம் முதலிய அரும்பெரும் நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள். இதில் ஐயங் கொள்ளுவதற்குச் சிறிதும் இடமில்லை.

இவ்வாறு இருக்கத் ''திவ்வியப் பிரபந்தங்களை வளர்த்தவர் எம்பெருமானார்'' என்று பிரசித்தி வந்திருக்கின்றது. எம்பெருமானார்க்கு வாழித் திருநாமம் அருளிச் செய்தவர், மணவாள மாமுனிகள். ஆர்த்திப் பிரபந்தத்தில் அஃது உள்ளது. அதில் ''மாறன் உரைசெய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே'' என்று உள்ளது. இச் செய்தியை எம்பெருமானாருடைய சம காலத்தவர்களான பெருமக்களின் அருள்மொழிகளினாலும் நன்கு உணர்கின்றோம்.

ஆழ்வார்கள் அருளிச் செய்த சகல திவ்வியப் பிரபந்தங்களுக்கும் தனியன்கள் அனாதி காலமாகவே அநுசந்திக்கப்பட்டு வருகின்றன. சில பிரபந்தங்களுக்கு ஒன்றிரண்டு தனியன்களும், சில பிரபந்தங்களுக்கு ஐந்தாறு தனியன்களும் அமைந்திருக்கின்றன. நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஆயிரத்திற்கு, வடமொழித் தனியன் ஒன்றும், தமிழ்த் தனியன்கள் ஐந்துமாக ஆறு தனியன்கள் உலகமெங்கும் அநுசந்திக்கப்பட்டு வருகின்றன. மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி ஆயிரத்திற்கு, வடமொழித் தனியன் ஒன்றும், தமிழ்த் தனியன்கள் மூன்றுமாக நான்கு தனியன்கள் அநுசந்திக்கப்பட்டு வருகின்றன.

பெரும்பாலும் தனியன்களில் அந்த அந்த திவ்வியப் பிரபந்தங்களின் பெருமை, அவற்றை அருளிச் செய்தவர்களின் பெருமை, அவர்கள் அவதரித்த தலத்தின் பெருமை முதலியன சொல்லப்படுகின்றன. திருவாய்மொழித் தனியன்களில் ஒன்றும், பெரிய திருமொழித் தனியன்களில் ஒன்றும் மிக்க சிறப்புடன் அவதரித்திருக்கின்றன. திருவாய் மொழித் தனியன்களில்,

''ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமாநுச முனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்—
ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வேதந் தரிக்கும்
பேராத வுள்ளம் பெற''

என்கிற தனியனானது, எம்பெருமானார் திருவடிகளிலே பண்ணுகின்ற ஒரு பிரார்த்தனையாக அமைந்திருக்கின்றது. இந்த வெண்பாவின் பொருளாவது: மிகச் சிறந்த கல்யாண குணசாலியான நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி ஆயிரத்தை, நன்கு தரித்துக் கொள்ள வல்ல நெஞ்சத்தைப் பெறுவதற்காகப் பெரும் புகழ் படைத்த எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை வணங்குகின்றேன் என்பதாம். சுவாமி! எம்பெருமானாரே! திருவாய்மொழி ஆயிரத்தையும் மறவாமல் தரிக்கத் தக்க அறிவாற்றலை வரமாக வழங்கியருள வேணும் என்று, அவர் தம்மையே நோக்கிப் பிரார்த்திக்கிறபடியாகத் தேறுகின்றது. பெரிய திருமொழித் தனியன்களுள்,

''எங்கள் கதியே இராமாநுச முனியே!
சங்கை கெடுத்தாண்ட தவராசா! பொங்குபுகழ்
மங்கையர்கோன் ஈந்த மறையா யிரமனைத்தும்
தங்குமனம் நீயெனக்குத் தா''

என்கிற இந்தத் தனியனும், இதே முறையில் அமைந்திருக்கின்றது. இது எம்பெருமானாரை முன்னிலைப்படுத்தியே கூறியுள்ளது. திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழி ஆயிரத்தையும் தரிக்க வல்ல மனத்தைத் தந்தருள வேணும் என்று, எம்பெருமானாரை நோக்கிப் பிரார்த்தித்திருக்கிறது.

ஆக இவ்விரண்டு தனியன்களையும் விசேடித்து மனத்தில் மனனம் செய்யுங்கால், தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு பரமானந்தம் விளைவதோடு, எம்பெருமானாருடைய ஒப்பற்ற ஒரு பெருமையும் அறியலாகிறது. பிரபந்தங்களைத் தரிக்கும்படியான நெஞ்சைத் தந்தருள வேணும் என்கிற பிரார்த்தனையை அந்தந்த ஆழ்வார்களை நோக்கியே செய்திருக்கலாம்! அவர்களுக்கு அந்தரங்கர்களான மதுரகவிகள், நாதமுனிகள் போல்வாரை நோக்கியாவது செய்திருக்கலாம். பரம உதாரனான பெருமாளை நோக்கிச் செய்திருக்கலாம். எல்லா வகையான

செல்வங்களையும் அளிக்க வல்ல பெரிய பிராட்டியாரை நோக்கிச் செய்திருக்கலாம். இராமாநுச நூற்றந்தாதியின் ஈற்றுப் பாசுரத்தோடு இது மிகவும் பொருந்தும்.

இப்படிப்பட்ட வழிகளை விட்டு, எம்பெருமானுரை நோக்கி இந்தப் பிரார்த்தனையைச் செய்திருப்பது எதனுல் என்று, ஆராய வேண்டுவது அவசியமானதாகுமன்ருே? புதிதாக நாம் என்ன ஆராயப் போகின்ருேம்? அக்காலத்தில் ஆழ்வார் அருளிச் செயல்கள் எல்லாம், எம்பெருமானுர் இட்ட வழக்காகவே இருந்தன என்பது, ஐயத்திற்கு இடமின்றி அறியக்கிடக்கின்றது. மிகப் பாடுபட்டு அதிகரித்துப் பலகால் உருச்சொல்லித் தரிக்க வேண்டிய இந்த மகத்தான பிரம்ம வித்தையைச் சுவாமி எம்பெருமானுர் ஒருவரே, ''கலியும் கெடும் கண்டு கொள்மின்'' என்று ஆசி அருளிய ஆழ்வாருடைய மேலான அருளாலும், ''ஆம் முதல்வன் இவன்'' என்று அனுக்கிரகித்த ஆளவந்தாருடைய அற்புதமான அனுக்கிரகத்தின் அதிசயத்தினுலும், முயற்சி இன்றியே எளிதாகக் கற்றுத் தேர்ந்து ஓரிடத்திலும் ஒரு விதமான ஐயப்பாடும் மயக்கமும் இல்லாதபடி தரித்தருளியிருந்தார் என்பது நன்கு இனிது தெளிவாகின்றது. இல்லையேல் இந்தத் தனியன்கள் இவ்வண்ணமாக அவதரிக்க அவகாசம் இல்லையன்ருே?

அன்றியும், ''ஏய்ந்த பெருங்கீர்த்தி'' என்கிற தனியனுக்கு அடுத்ததான ''வான் திகழும் சோலை'' என்று தொடங்கும் தனியனில், ''தமிழ் மறைகள் ஆயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்'' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

திருவாய்மொழியைப் பெற்ற தாயார் நம்மாழ்வார் என்றும், வளர்த்த செவிலித்தாயார் எம்பெருமானுர் என்றும், அக்காலத்தில் இருந்த ஆப்ததமர்கள் ஆன நம்முடைய முன்னேர்களான ஆசிரியர்கள் அருளிச் செய்தார்கள் என்ருல் திவ்வியப் பிரபந்தங்களிலே எம்பெருமானுர் எவ்வளவு ஈடுபாடு கொண்டவராக இருக்க வேண்டும்! திவ்வியப் பிரபந்தங்களைக் கற்க ஆர்வம் இல்லாமல் இருந்தவர்களை வலிய அழைத்து, எம்பெருமானுர் அவர்கள் அவற்றைக் கற்கும்படி நியமித்தருளினுர். வியாக்கியானங்கள் அவதரிக்க நியமிமனம் தந்தருளினுர். ஆங்காங்கே அருமை பெருமை வாய்ந்த நயம் மிக்க சிறப்புரைகள் ஆகிய நிர்வாகங்களை வெளியிட்டருளினுர்.

திவ்விய தேசங்களில் அருளிச் செயல் பிரச்சாரங்களைப் பிரபலப்படுத்தி அருளினுர். இவ்வண்ணமாகச் செய்தருளின செயல்களைக் கொண்டே ''மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்'' என்று பணித்தார்கள். அக்காலத்தில் எம்பெருமானுர் அவ்வளவு சிரத்தை கொண்டருளியிராவிடில், திவ்வியப் பிரபந்தங்கள் நாதமுனிகளின் காலத்திற்கு முன்னேயிருந்த படியாகவே மறைந்து போயிருக்கக் கூடும். அவ்வாறு ஆகாதபடிக்குச் சுவாமி எம்பெருமானுர் ஆகிய இராமாநுசர் செய்தருளிய சேமக்காப்பு, வாயினுல் அளவிட்டுச் சொல்லும் தரத்ததன்று.

## கடவுள்நல் லுணர்ச்சிகொண் டுய்வோம்!

ஒவ்வொரு வரும்,நம் வாழ்வினில் உற்ற
உயர்ச்சிகள் தாழ்ச்சிகள் ஓர்ந்து,

செவ்விதின் எண்ணித் திறன்தெரிந் துணரின்,
''சிறிதும்நம் வயம்இலை, எல்லாம்

மெய்திகழ் ஒருநல் வியன்பெரும் ஆற்றல்,
விளைத்திடும் பயன்கள்ஆம்'' என்றே

கைதிகழ் நெல்லிக் கனிஎனக் காண்போம்!
கடவுள்நல் லுணர்ச்சிகொண் டுய்வோம்!

—தமிழாக்கம், ந. ரா. முருகவேள்

"There is a Divinity that shapes our ends
Rough—few them how we will." —Shakespeare, Hamlet.

# வள்ளலாரின் உள்ளத்துடிப்பு

கவியோகி சுத்தானந்த பாரதியார்

(முற்றேடர்ச்சி)

**அருட்சித்தி:**

நமது சித்தரைக் காணச் சித்தர்கள் வந்து செல்வதுண்டு. இராமலிங்கர் எப்படிச் சித்த ரானர். என்ன தவம் செய்தார்? ஓர் அனுபவப் பாட்டிலே எல்லாம் அறிகிறேம். திருவாசகத் திற்கு ''இன்றெனக்கருளி'' என்ற பாடலைப் போலத் திருவருட்பாவுக்கு இதுவே உள்ளமாக விளங்குகிறது.

கடல் கடந்தேன்; கரையடைந்தேன்;
கண்டு கொண்டேன் கோயில்
கதவுதிறந் திடப் பெற்றேன்
காட்சி யெலாங் கண்டேன்;
சுடர்கடந்த திருஅமு துண்டு
அருளாலே அனைத்தும்
அறிந்து தெளிந்திடப் பெற்றேன்;
அழியாமை அடைந்தேன்
உடல் குளிர்ந்தேன்; உயிர் கிளர்ந்தேன்
உள்ளமெல்லாம் தழைத்தேன்
உள்ளபடி உள்ளபொருள்
உள்ளவனுய் நிறைந்தேன்;
இடர்தவிர்க்கும் சித்தி யெல்லாம்
என்வசம் ஆயினவே
இத்தனையும் பொதுநடஞ் செய்
இறைவன்அருட் செயலே

காற்றுலே கூற்றுலே வேற்றுலே அழியாத மெய் அளிக்க வேண்டினுர், வள்ளற் சித்தர். அளித் தான் இறைவன். அப்படிப்பட்ட அழியாப் புகழுடல் எது? அருட்பாதான். காலம் உள் ளளவும் அருட்பா முழங்கி வரும்.

இத்தனை நித்திய சித்துக்கள் அடைந்த பிறகும் வள்ளலார் மிகத் தாழ்வுடன் சொல்லு வதென்ன? ''நான் சித்தன்; எல்லாரும் என் காலில் விழுங்கள் என்றுரா? தானே முருகன் சிவன் என்று அவதாரத் தம்பட்டம் அடித் தாரா? இல்லை, இல்லை. கேளுங்கள்.

**வணக்கம் இறைவனுக்கே:**

சன்மார்க்க சங்கத்தீர்
சிற்றடியேன் உமது
தாள்பணிந்து சாற்று கிறேன்
தயவி னுெடுங் கேட்பீர்
என்மார்க்கத் தெனை நுமக்குள்
ஒருவன்எனக் கொள்வீர்
எல்லாமும் வல்லநமது
இறைவனையே தொழுவீர்!

இது முகம்மது நபி மணியின் வாக்குப்போல் இருக்கிறது. ''வணங்கத் தக்கது கடவுள் ஒன்றே''. 'இலா இலாஹி இல்லல்லா'' (அல்லா விற்கு மிஞ்சிய இறைவன் இல்லை) ஸுபான ரப்பில்லால் அஸீம் (பெரிய சாமிக்கே எல்லாச் சிறப்பும் வணக்கமும்) என்று அழுத்தமாகக் கூறுகிறது குரான். மாணிக்கவாசகரும் ஒரு வனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி என்று வணங்குகிறுர். வள்ளலார் இன்னும் ஒருபடி செல்லுகிறுர்.

**சுத்தசிவம் :**

புன்மார்க்கத்தவர் போலே
வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர்,
பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய் விளங்கும்
சுத்தசிவம் ஒன்றே
தன் ஞணை என்ஞணை
சார்ந்திடுமின் ஈண்டே

இங்கே சத்திய ஞான சபைக்கு வருவோர் அருட்பெருஞ் சோதி ஆண்டவனுக்கு வணக்கம் செலுத்துவீர் என்று அழுத்தமாகச் சொன்னுர் அருட் பெருமான்.

**சாதிமதங் கடந்த சன்மார்க்கம் :**

சாதிமத சாத்திரகோத்திர மனவிகாரங் களை யெல்லாம் எருக்குழியிலே தள்ளிவிட்டு, எல்லாருக்கும் பொதுத் தந்தையான இறைவ னையே வணங்கீர். எங்கே? ''இந்தத் தேகத் தின் புருவமத்தியில் நமது ஆன்ம அறிவென்கிற கற்பூரத்திலே கடவுள் அருள் என்ற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்துப் பார்த்து அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையான அன்பையும், ஜீவர்களிடத்தே உண்மையான காருணியத்தையும் இடைவிடா மல் வைத்து ஓங்கார பஞ்சாட்சர ஜபம் செய்தல் வேண்டும் (ஓம் சிவ ஓம் அ உ ம் சிவ ஐந்து எழுத்து). இதுதான் அருட்பா சாதனை. நான் ஒவ்வொரு மூச்சுடனும் செய்கிறேன். நீங்களும் செய்யுங்கள் என்கிறுர்.

பாட்டு மட்டுமன்று; வள்ளலார் வசன நடையில் எழுதிய தெல்லாம் உடலுயிர் வாழ்விற்கு அமுதமாகும். நல்ல உடலும் நல்ல மனமும் நல்ல ஒழுக்கமும் கூடி நல்வாழ்வு வாழவே வள்ளலார் உலகை அழைக்கிறார். உலகை அல்லற்படுத்திப் பிரித்தலைக்கும் சாதி சமய சாத்திர கோத்திரத்தில் அலைந்து வீணுகாதீர். தூய மெய் வழியில் வாழ்வீர்.

''துரிய மேற்பர வெளியிலே
சுகநடம் புரியும்
பெரியதோர் அருட் சோதியைப்
பெறுதலே எவர்க்கும்
அரியபேறு; மற்றவையெல்லாம்
எளியவே அறிமின்
உரிய இம்மொழி மறைமொழி
சத்தியம் உலகீர்''

இந்த உயர் பெரும் மகாதுரிய சித்தி சாதனம் எங்கே; உலகோர் போகிற போக்கெங்கே!

**எல்லாச் சமயமும் வருக!**

வள்ளலார் எல்லாச் சமயத்தவரையும் ஒருமையுற அழைத்தார். ''நீர் பிறரோ? நான் உமக்கு நேயவுறவலனோ'' என்று மனங் குழைந்து அனைவருடனும் நெருங்கிப் பழகினார். வேட்ட வலத்திற்கு அண்மையிற் சென்று வள்ளலார் உள்ளம் பற்றிப் பேசினேன். ''ஜமீந்தார் அரண்மனையில் வள்ளலார் தங்கியிருந்த மாடியிலேயே நாள் முழுதும் நிட்டை கூடியிருந்தேன். ''எம்பெருமான் என்னுள்ளம் புகுந்த இன்பத்தை நுகர்ந்தேன்.'' மனோன் மணி கோயிலில் அந்தக் காலம் ஆடு கோழி வெட்டிப் பலியிட்டனர். வள்ளலார் அதை நிறுத்தினார். ஜமீந்தார் மகளைப் பிடித்த பேயை ஓட்டினார்; அவர் சைவ உணவே உண்ணச் செய்தார். இன்றும் அந்தக் குடும்பம் சைவ உணவே கொள்கிறது. அமாவாசை என்ற ஏழைத் திருக்குலத்தானுக்குத் தினம் உணவு தந்தார் வள்ளலார். ''அரவணைத்துத் தூய மெய்வழியில் சேர்த்தார். எண்கோண மாகிய வடலூர் உண்மையறிவு மன்றிலே எல்லாச் சமயத்தவரும் வணங்க அழைத்தார் வள்ளலார்.

கொலையும் புலையும் வேண்டாம்
பலியும் பாபமும் வேண்டாம்

என்று வள்ளலார் கருணைக் குரலெடுத்தார். அருணாசலப் படையாட்சியும், வேங்கடாசலப் படையாட்சியும் புலையுணவை விட்டுச் சைவராயினர். அலென் சாமுவேல் என்ற கிறித்தவர் ஊனுணவை மறுத்தார். உணவுக்காக ஆடு கோழிகளைக் கொன்று உண்ணும் கொடுமைகளைத் தாங்காமல் இவர் தூக்குப் போட்டுக் கொண்டிறந்தார். அப்போது உயிர்க் கொலை காணத் தாங்கேன்! நானே சாகிறேன் தெய்வமே'' என்று வருந்தினார். ஒரு முஸ்லிம் சிறுவன், உடம்பெங்கும் சிரங்கு வெடித்து வருந்தினான். அவனை வள்ளலார் அருகிலிருந்த ஊற்றிலே குளிக்கச் செய்தார்; புண்கள் மறைந்தன. ஒரு முஸ்லிம் அன்பன் வள்ளலாருக்கு ஒரு பட்டாடை தந்தான். வள்ளற் பெருமான் அதை அணிந்து கொண்டு படுத்திருந்தார். அதை ஒருவன் திருட வந்தான். 'வா தம்பி'' என்று அழைத்துப் பட்டைக் கொடுத்தார்.

**எல்லாப் பெயரும் இறைவன் பெயரே :**

வள்ளலார் எல்லா மதத்தினருடனும் அன்பாகப் பழகினார். தம்மை நாயகியாகவும், நடராசப் பெருமானைக் கணவனாகவும் பாடிய பாடல்கள் உள்ளத்தை அள்ளுகின்றன. அனுபவமாலை முழுதும் இன்பத் தேன் பொழிகிறது. தோழிக்குச் சொல்லுகிறார் : ''குருடர் யானையைக் கண்ட கதைபோல, உலகில் இறைவனைப் பலவாறு மதவாதிகள் கருதிச் சண்டையிடுகின்றனர். என் கணவன் பெயரைநீ கேட்கிறாய்; தோழி கேள் :

பெருகிய பேர் அருளுடையார் அம்பலத்தேஆடும்
பெருந்தகை என் கணவர்திருப் பேர்புகலென்கின்றாய்;
அருகர்புத்தர் ஆதியென்பேன் அயனென்பேன்; நாராயணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதாசிவன் என்பேன் சுத்தசிவன் என்பேன்
பரமனென்பேன் பிரம மென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவுசுத்தபிரம மென்பேன் துரியநிறைவென்பேன்
சுத்தசிவ மென்பனிவை சித்து விளையாட்டே.

சிற்சபை நாயகனுக்குப் புறச் சமயப் பேர் பொருந்துமா எனத் தோழி கேட்கிறாள். பிற சமயத்தார் பெயரும் அவன் பெயரே. நின் பெயரும் என் பெயருங்கூட அவன் பெயரே; எவ்வுயிரின் பெயரும் அவன் பெயரே. சிற்சபையில் அவர் செய்யும் ஞானக் கூத்தைக் கண்டால் எல்லாம் அவரே என்ற இயலுண்மை அறிவாய். அருட்சோதிக் கணவனைத் தழுவியதும் இருட்சோதிச் சமயமெல்லாம் இல்லையென்றாயின'' என்கிறார் வள்ளலார்.

இவ்வாறு மனித குலம் முழுதும் தன்னைச் சுற்றி அன்புடனே வாழச் செய்தார் வள்ளலார். அன்பு, அன்பு, அன்பு—அருளறம் அருளறம் அருளறம். இதுவே வள்ளலாரின் இதயத் துடிப்பு. இதுவே வள்ளலாரின் அருட் புரட்சி. இந்தப் புரட்சியே ஆன்ம ஒருமை தந்து காக்கும். நம்முடைய உள்ளத்திலும் அன்பு அருள் அறம் துடித்து அருட் பணிக்கு உந்துக! அருட் புரட்சி அனைத்துலகிலும் பரவுக.

ஒற்றுமையாய் ஒருகுலமாய்
உலகில் வாழ்வோமே
மற்றவரை நமைப்போல்
மதித்து வாழ்வோமே
கற்றறிந்து கலைவளர்த்துக்
கலந்து வாழ்வோமே
வற்றாத ஊற்றினைப் போல்
வழங்கி வாழ்வோமே!

# பாரத நூற் பண்போவியங்கள்

## 1. பரதன்

கவிஞர் திரு.
மனசை ப. கீரன், B.A., B.T.,
(சென்னை வானொலி நிலையம்)

பாரத நாட்டின்—பாரத இதிகாசத்தின்—பெயருக்கும் புகழுக்கும் மூலப் பெயராக விளங்குபவன் பரதன். பரதன் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்தவன். அவன் தோன்றி வளர்ந்த நிகழ்ச்சிகளைச் 'சாகுந்தலம்' என்ற தனிக்காப்பியம் விவரமாகக் கூறுகிறது. இதை வடமொழி என்று போற்றப்படும் சமஸ்கிருதத்தில் எழுதியவர் காளிதாசர் என்னும் பெரும்புலவர். தென்மொழி என்று சிறப்பிக்கப்படும் தமிழில் அதைச் சிறப்புக் குறையாமல் மொழிபெயர்த்தவர் மறைமலை அடிகள். இச் சாகுந்தலக் காப்பியத்தினை உலகில் பல்கலைக் கழக மாணவர்களும் பாடமாகப் படிக்கிறார்கள். ஜெர்மானியப் பெரும்புலவர் 'கெத்தே' (*Goethe*) சாகுந்தலம் இனிமையான நலங்களை எல்லாம் கொண்டது என விரிவாகப் பாராட்டினர். 'கெத்தே'வின் கருத்தைத் தமிழில் கவிதையாக்கியுள்ளார், புலவர் திரு. ந. ரா. முருகவேள்.

''இன்பொளிர் வேனிற் காலத்(து)
எழில்மலர் கனிகள் மற்றும்
மன்பெரும் கவர்ச்சி மிக்க
மகிழ்ச்சிநல் விருந்தூண் மண்விண்
என்பவை எலாம்சேர்த் தொன்றைச்
''சகுந்தலை'' எனுமோர் சொல்லால்
நன்றுற நவில்வேன்; யாவும்
நனியதில் அடங்கும் அன்றே''

என்பது அந்தக் கவிதை. உலகம் எங்கும் போற்றப்படுகின்ற சாகுந்தலம் என்னும் நாடகத்திலும், மகாபாரதத்திலும் வருகின்ற பரதனின் கதையை, நாம் அறிந்துகொள்ள வேண்டாமா?

அரசன் யயாதியின் வழிவந்தவன் துஷ்யந்தன். அந்தக் காலத்தில் நகரங்கள் அதிகம் இல்லை. காடுகளும் காடுகளில் வனவிலங்குகளும் அதிகமாக இருந்தன. ஆகவே வனவிலங்குகளை வேட்டையாடுவது வேந்தர்களுக்கு ஒரு பொழுது போக்கு. தற்போது நகரங்கள் அதிகமாகிக் காடுகள் குறைந்து வருகின்றன. வனவிலங்குகளும் குறைகின்றன. அதனால்தான் வனவிலங்குகளைப் பாதுகாக்கிறோம். துஷ்யந்தன் ஒருமுறை காட்டுக்கு வேட்டையாடப் போனான். அவன் தன் பரிவாரங்களுடன் காடு மேடு எல்லாம் அலைந்து வேட்டையாடினான். அலைச்சலினால் களைத்ததால் தண்ணீர் குடிக்க விரும்பினான். அருகில் ஓர் ஆசிரமம் இருந்தது. அது கண்ணுவ முனிவரின் ஆசிரமம். அங்கே தண்ணீர் குடிக்கச் சென்றான், துஷ்யந்தன்.

அது மாலை நேரம், கண்ணுவ முனிவர் மாலைநேரத்தில் சந்தியா வந்தனத் தொழுகைக்காகத் தம் மாணவர்களுடன் மாலினி ஆற்றுக்குச் சென்றிருந்தார். அங்கேதான் விசுவாமித்திரருக்கும் அழகில் சிறந்த மேனகைக்கும் பிறந்த சகுந்தலை தனியாக இருந்தாள். அவளை வளர்த்தவரே கண்ணுவர். துஷ்யந்தன் அழகிய அவளுடன் பேசிப் பருகினான். சகுந்தலையின் அழகும் இனிய குணங்களும் துஷ்யந்தனைக் கவர்ந்தன. அதனால் அவன் சகுந்தலையைக் கந்தர்வமுறையில் மணம் புரிந்தான். சகுந்தலைக்குத் தன் நினைவாக அரச இலச்சினை பொறித்த மோதிரம் ஒன்றை அவளது விரலில் அணிவித்தான். அவன் வேட்டையாடுவதற்காகவே காட்டிற்கு வந்ததால், பரிவாரங்களுடன் நாட்டுக்குத் திரும்பினான்.

துஷ்யந்தன் பிரிந்து சென்றதை எண்ணிச் சகுந்தலை அவனையே நினைத்துக் கொண்டிருந்தாள். அவளைச்சுற்றி நடப்பது எதனையும் அறியாதவளாக மெய்ம்மறந்திருந்தாள். அப்போது கண்ணுவரின் ஆசிரமத்தை நாடித் துருவாச முனிவர் வந்தார். அவர் பெரும் முனிவர். அவர் வந்ததையும் நோக்காமல் இருந்ததால், துருவாசருக்குக் கோபம் வந்தது. குணம் என்னும் குன்றேறி நின்றவர்களின் கோபம், கணநேரமும், காக்க முடியாதல்லவா?

''நீ யாரை நினைத்து நான் வந்ததையும் கருதாமல் மெய்ம்மறந்து இருக்கிறாயோ அவன் உன்னை மறந்து விடுவானாக''! என்று கோபத்தால் சாபமிட்டார், துருவாசர். மன்றுடி மன்னிப்பு கேட்டாள். நினைவுப் பொருள் ஏதாவது காட்டினால் நினைவு மீளும் என்றார், துருவாசர்.

பிறகு துஷ்யந்தன் பல்லாண்டு காலம் ஆசிரமத்திற்கு வரவேயில்லை. இடையில் சகுந்தலைக்குப் பரதன் பிறந்தான். அவன் பிறந்த நேரத்தில் 'இவனால் உலகம் தழைக்கும்' என்று, ஒரு வானொலி எழுந்தது.

பரதன் இளைய வயதிலேயே காட்டு விலங்குகளையெல்லாம் அடக்கினான். புலி, கரடி,

சிங்கம் முதலிய விலங்குகள் யாவும் இவனுக்கு அடங்கின. சிங்கக்குட்டிகளுடன் பரதன் விளையாடினான். இப்படிக் கொடிய விலங்குகளையும் அடக்கியதால் 'எல்லாவற்றையும் அடக்கியவன்' என்ற பொருள்படும் 'சர்வ தமனன்' என்ற பெயரைப் பெற்றான்.

பாட்டனாரான கண்ணுவரிடம் பரதன் எல்லாக்கலைகளையும் கற்றான். கண்ணுவர் இதற்கு மேலும் பரதன் காட்டில் இருப்பது நல்லதல்ல என்று நினைத்தார். அவளைத் தாயாருடன் துஷ்யந்தனின் அரண்மனைக்குத் தக்க துணையுடன் வழியனுப்பினார். வழியில் சகுந்தலை குளத்தில் நீர் குடித்தபோது துஷ்யந்தன் கொடுத்த மோதிரம் நழுவி நீரில் விழுந்து விட்டது. பிறகு அது கிடைக்கவே இல்லை.

அரண்மனைக்குச் சென்ற சகுந்தலையைத் துஷ்யந்தன் நினைவுக்குக் கொண்டு வரவே முடியவில்லை. மறந்துவிட்டான். அதனால் துஷ்யந்தன் சகுந்தலையை ஏற்றுக் கொள்ளவில்லை. காட்டுக்குத் திருப்பியனுப்பி விட்டான்.

இதற்கிடையில் செம்படவன் ஒருவனுக்கு மிகப் பெரிய சிறந்த மீன் கிடைத்தது. அதை அரசனுக்குத் தருவதற்கு அரண்மனைக்குக் கொண்டு வந்தான். அதை அரண்மனைச் சமையல்காரன் சமைக்க வெட்டியபோது அதன் வயிற்றில் அரசனின் இலச்சினை பொறித்த மோதிரம் கிடைத்தது. இதைக் கழுவி எடுத்துக் கொண்டு ஓடோடிச் சென்று அரசனிடம் நீட்டினான்.

ஆ! என் மோதிரம். சகுந்தலைக்கு நான் கொடுத்ததல்லவா?'' என்று நினைவில் பளிச்சிட, நடந்தவை எல்லாம் நினைத்துப் பார்த்தான். தான் மறந்துவிட்ட தவற்றை நினைத்து வருந்தினான். உடனே காட்டுக்குச் சென்று சகுந்தலையையும் பரதனையும் அழைத்துக் கொண்டு வந்தான். அது முதல் அவர்களை அரசன் மகிழ்வாக வைத்துக் கொண்டான். பரதன் பெரியவன் ஆனதும் அவனிடம் அரசாளும் பொறுப்பை ஒப்படைத்தான். பரதன் கண்ணுவரைக் கொண்டு பல யாகங்களைச் செய்தான். பரதன் பல்லாண்டு காலம் அவனைப்போல் அரசரில்லை எனப்பாராட்டும் சிறப்புடன் அரசாண்டான். நம் நாட்டுக்கு அவன் பெயர் நிலைத்துவிட்டது. நம் நாட்டுக்குப் 'பாரத நாடு' என்ற பெயர் அதனால்தான் வழங்குகிறது.

—தொடரும்

# கடவுளின் இயற்கைச் சட்டம்

''உலகம் எங்ஙனும் ஓர் ஒழுங்குமுறை நிலவுகின்றது. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும், உலகில் வாழ்கின்ற ஒவ்வோர் உயிரையும், மாற்ற முடியாத ஆற்றல் மிக்க ஒரு பெருஞ் சட்டம், ஆட்சி புரிந்து வருகின்றது. அஃது ஒரு குருட்டியற் சட்டம் அன்று. ஏனெனில், குருட்டியற் சட்டமாயின், உயிரும் அறிவும் உடைய பொருள்களின் இயக்கத்தை வரையறை செய்து நடத்த, அதனால் இயலாது. எனவே வாழ்வனைத்தையும் ஒரு வரையறைசெய்து நடத்துவிக்கும் அந்தச் சட்டம்தான் கடவுள். சட்டமும், சட்டத்தை வகுப்பவனும் ஒன்றே. நாம் அறிந்து கொள்ளாமை காரணமாகச் சட்டத்தினையோ, அதனை வகுத்தவனையோ, இல்லை என்று சொல்லுவது பொருந்தாது. உலகில் நிலவும் அரசின் நெறியினை அறியாமையினாலோ, இல்லை என்று சொல்லுவதனாலோ, நமக்கு ஏதும் பயன் விளையாது. அது போலவே நாம் கடவுளை இல்லை என்பதனால், நமக்கு அவர்தம் சட்டங்களினின்று விடுதலை ஏற்பட்டுவிடாது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதனால், நம் வாழ்க்கை தொல்லைகள் இன்றி, எளியதும் இனியதுமாக அமையும். அங்ஙனமே கடவுளின் இயற்கைச் சட்ட திட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு நாம் நடந்தால், நம் வாழ்க்கைப் பயணம், எளிமையும் இன்பமும் நிறைந்ததாக அமைந்துவிடும்.''

—காந்தியடிகள்.

தமிழாக்கம்: ந.ரா. முருகவேள்.

---

"There is orderliness in the universe: there is an unalterable Law, governing everything and every being that exists or lives. It is not a blind law: for no blind law can govern the conduct of living beings.

That law, then, which governs all life is God. Law and the Law-Giver are one. I may not deny the Law or the Law-Giver because I know so little about It or Him:

Just as my denial or ignorance of the existence of an earthly power avails me nothing, even so my denial of God and His law will not liberate me from its operation. Whereas humble and mute acceptance of divine authority makes life's journey easier even as the acceptance of earthly rules makes our life under it easier"

—MAHATMA GANDHIJI.

# குருவை மிஞ்சிய குருநமசிவாயர்

திரு. ஆ. பக்தவச்சலம்,
(குடியேற்றம்)

திருவண்ணாமலையில் உள்ள ஓர் குகையில் நமச்சிவாயர் எனும் ஓர் மகான் யோகம் பயின்று வந்தார். ஒருநாள் அவருடைய சீடர்களில் ஒருவரான நமசிவாயமூர்த்தி அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தபோது, திடீரென்று 'களுக்' என்று சிரித்தார். சீடர் சிரித்ததற்குக் காரணம் என்னவென்று குரு வினவினார். அதற்குச் சீடர் ''குருநாதா, மன்னித்தருள வேண்டும். திருவாரூரில் தியாகராசர் திருவீதி வலம் வரும்போது முன்னால் நாட்டியமாடிக் கொண்டுவந்த தேவதாசிகளில் ஒருத்தி கால் தவறிக் கீழே விழுந்து விட்டாள். சுற்றியிருந்த அனைவரும் நகைத்தனர். எனக்கும் சிரிப்பு வந்துவிட்டது'' என்று பயந்து கொண்டே கூறினார்.

மற்றொரு நாள் குருவின் முன் நின்று கொண்டிருந்த சீடர், திடீரென்று தமது மேலாடையைக் கைகளால் தேய்த்துவிட்டார். குருநாதர் அதன் காரணத்தை அறிய விரும்பினார். அதற்குச் சீடர் ''சுவாமி, தில்லையம்பதியில் சபேசனின் சந்நிதிக்கு அருகிலிருக்கும் விளக்குத் திரியை ஒரு எலி இழுத்து வந்து திரைச் சீலையின்மீது போட, அது பற்றிக் கொண்டுவிட்டது. அருகிலிருந்தோர் உடனே திரையைத் தேய்த்து விட்டனர். தீ பரவாமலிருக்க அடியேனும் அதை நன்றாகத் தேய்த்து விட்டேன்'' என்றார்.

சீடரின் ஞானதிருஷ்டியைக் கண்டு வியந்தார் குகை நமசிவாயர். குருவையும் மிஞ்சிய சீடனாக இருப்பதைக் கண்டு பெருமை அடைந்தார். அவரை மேலும் சோதித்துவிட வேண்டும் என்று ஒருநாள் தாம் உட்கொண்ட ஆகாரத்தை வாயிலெடுத்து, கையிலேந்தி, சீடரிடம் தந்து, ''நமசிவாயா, இதை மனிதனின் கால்படாத இடத்தில் போட்டுவிடு'' என்று கட்டளையிட்டார். அதைப் பெற்றுக் கொண்ட சீடர், எங்கே போடுவது என்று ஒரு கணம் யோசித்து விட்டு, அதை அப்படியே விழுங்கி விட்டார்.

குகை நமசிவாயர் சீடரைப் பார்த்து, ''அதை மனித நடமாட்டம் இல்லாத இடத்தில் போட்டு விட்டாயா'' என்று கேட்க, ''ஆம்... சுவாமி! நான் அதை என் வயிற்றில் போட்டு விட்டேன். அங்கு ஒருவர் காலடியும் படமுடியாதே'' என்று விடை பகர்ந்தார். ஞான நிலையிலும் மனப்பக்குவத்திலும் தம்மை விடச் சீடன் உயர்ந்துவிட்டான் என்று ஐயமின்றித் தெளிந்த குருநாதர் சீடரை நோக்கி, ''அப்பா, நீ குருவிற்கே குருவாகி விட்ட சீடன். இனி மேல் அனைவரும் உன்னைக் 'குரு' நமசிவாயர்' என்றே அழைப்பார்கள். இரண்டு யானைகளை ஒரே கம்பத்தில் கட்டக்கூடாது. நாம் இருவரும் ஒரே இடத்தில் இருக்கக் கூடாது. நீ சிதம்பரம் போ. உன் தவ வலிமையால் நடராசரின் ஆலயத்திற்குப் பல திருப்பணிகள் நடைபெற்றாக வேண்டியிருக்கிறது'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அதைக் கேட்ட குரு நமசிவாயரின் கண்கள் கலங்கிவிட்டன. ''ஐயா, தங்களைவிட்டு என்னால் தனியே வாழ முடியாது. தங்கள் திருவடிச் சேவைதானே என் உயிர்மூச்சு. அவற்றை விட்டுவிட்டு நான் வேறு எந்தத் தலத்திற்கும் செல்ல மாட்டேன்'' என்று பணிவுடன் கூறினார். சீடரின் சொல்கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்த குருநாதர், 'நமசிவாயா, நீ சிதம்பரம் போய் தில்லை ஈசனைத் தரிசனம் செய். அங்கு நம்மைப் போலவே, அவர் உனக்குத் தரிசனம் தந்தால் அங்கேயே இரு. இல்லாவிட்டால் மீண்டும் அருணாசலத்திற்கே வந்துவிடு' என்று பணித்தார். சிதம்பரம் போனாலும் குருவின் தரிசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்ததும் குருநமசிவாயர், குருவை வணங்கிவிட்டு, விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

வழியில் இருட்டிவிடவே ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்தார் குருநமசிவாயர். சற்றைக்கெல்லாம் அவருக்குப் பசி எடுத்தது. உண்ணாமுலையம்மையைக் குறித்துப் பாடினார்.

''அண்ணாமலையா ரகத்துக் கினியாளே
உண்ணா முலையே யுமையாளே—நண்ணு
நினைதொறும் போற்றிசெயும் நின்னடியர் உண்ண
மனைதோறும் சோறுகொண்டு வா''

இவ்வெண்பாவைப் பாடும் சமயத்தில் அண்ணாமலையார் கோயிலில், தங்கத் தாம்பாளத்தில் சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்துவிட்டு, குருக்கள் மறந்து போய்ச் சந்நிதியிலேயே வைத்துப் பூட்டி விட்டார். பக்தரின் குரல் கேட்டு, உண்ணாமலைப் பெருமாட்டியார் தாம்பாளத்துடன் சர்க்கரைப் பொங்கலை எடுத்து வந்து குருநமசிவாயரிடம் தந்துவிட்டு மறைந்தார்.

இவ்வாறு வழியெல்லாம் அந்த மகான் உண்ணாமலைத் தாயைக் குறித்து வெண்பா பாட, கருணையே வடிவான பராசக்தி, தநயனின் பசியைத் தீர்த்து வைத்தாள். இறுதியில் சிதம்பரம் வந்து சேர்ந்தார். திருக்குளத்தில் நீராடி

விட்டுக் கனக சபாபதியைச் சென்று தரிசித்தார். அருணசலத்தில் குரு தந்த வாக்குப்படியே சபாநாயகர் குகை நமசிவாயரைப் போலவே அவருக்குத் தரிசனம் கொடுத்தார். அது கண்டு பேரின்பத்தில் மூழ்கிய குருநமசிவாயர் தம்மை மறந்தநிலையில் ஓர் அறையில் அமர்ந்து நிட்டையிலாழ்ந்தார்.

அப்போது நடராசப் பெருமான் தில்லை மூவாயிரவரிலே பல்லக்கு ஏறும் மூன்று குருக்கள்மாரை அழைத்துத் ''திருவண்ணமலையிலிருந்து ஒரு பெரியவர் வந்துள்ளார். அவர் யோகத்தில் சிறந்தவர். அவராலே நமக்கு நிறையத் திருப்பணிகள் நடந்தாக வேண்டியிருக்கிறது. தவநிலையில் நிம்மதியாக இருக்க அவருக்கு ஓர் தனியான இடம் கொடுங்கள்'' எனக் கூறி மறைந்தருளினர்.

எந்நேரமும் சிவயோக நிட்டையில் அமர்ந்திருந்த அந்த மகானின் தரிசனத்திற்கு வந்தவர்கள், அவர் காலடியில் பணத்தைக் கொட்டிக் குவித்தார்கள். அதைக் கண்ட குருநமசிவாயர் ''இது ஆட்கொல்லி. இது எனக்குத் தேவையில்லை. நீங்களே வாரிக் கொண்டு போங்கள்' என்று வந்தவர்கட்கே அள்ளித்தந்து வந்தார். இதைக் கண்ட குருக்கள்மார்கள் நடராசப் பெருமானிடம் சென்று முறையிட்டார்கள். உடனே அம்பலவாணர் ஒரு வயோதிகன்போல் உருமாறி, குருநமசிவாயரிடம் சென்று 'திருப்பணிக்கே பொருள் பயன்படட்டும்' என்று கூறி மறைந்தருளினர்.

அன்றுமுதல் தம்மிடம் குவிந்த பொன்னையும் பொருளையும் கொண்டு குருநமசிவாயர் நடராசப் பெருமானுக்குச் சிலம்பும், கிண்கிணியும் செய்து அணிவித்து, அவரைத் தோத்திரம் செய்து மகிழ்ந்தார். பல அறக் கட்டளைகளும் செய்வித்து வைத்தார். திருப்பணி நடக்கும் இந்த நேரத்தில் இத்தகைய மகானின் அறச் செயல்களை நாம் நம் மனத்திரையில் கொண்டு வருவது மிகவும் அவசியமாகும். நடராசப் பெருமானல் வலிந்து அழைக்கப்பட்டு, திருப் பணிகள் செய்த தவயோகியை வணங்கி, சிதம்பரத்தில் மிகவும் பாழடைந்து காணப் படும் குருநமசிவாயமூர்த்திகளின் சமாதி ஆலயத்தையும் புதுப்பிக்கும் செயலை மேற்கொள்வதும் நம் தலையாய கடமை என்று எண்ணுகிறேன்.

இத்தகைய தவ வலிமை பெற்ற மகான் அருளிச் செய்த 'நமசிவாயமாலை' எனும் 100 பாக்கள் கொண்ட சிறுநூல் அச்சிடப்பட்டுள்ளது. அந்நூலில், அப்பர் பெருமான் அருளிய திருவாரூர் திருத்தாண்டகம் (108 போற்றி) பாடலும் சேர்க்கப்பட்டுள்ளது. சைவ சமய அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு 25 பைசா தபால்வில்லை அனுப்பி மேலே கண்ட சிறுநூலை இலவசமாகப் பெற்றுப் பயனடையலாம்.

---

# அறிவிற்குப் பொருந்துவதே !

இவ்வுலகில் உள்ள சூரியன், சந்திரன், பரந்தவானப் பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணற்ற விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கி உயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும் போன்ற முதற் பொருள்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள், என்பனவற்றின் இயல்பை எல்லாம் இனிது எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு நமக்குத் திண்ணிதின் உதிக்கும்.

உலகப் படைப்பும் இயற்கையும் எத்துணை வியக்கத் தக்கனவாக இருக்கின்றன! சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும், தத்தம் ஒழுங்கு முறைகள் தவருமல் ஒளி வீசிச் சுழன்று கொண்டு வருகின்றன. பரந்த பெருங்கடலில் நீரை முகந்து கொண்டு, பல இடங்கட்கும் பரவிச் சென்று மேகங்கள் மழை பொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கி விடாமல் ஒரு வரம்பிற்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது, பகலும் இரவுமாக மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார்காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின்பனிக்காலம் எனப் பலவேறு பருவங்களாகவும் அமைந்து, அவ்வக் காலங்களுக்கு ஏற்ற செடி, கொடி வகைகளை வளர்த்தும், நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும், காய் கனி பயிர் வகைகளை அளித்தும், உதவி புரிந்து வருகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க் கூட்டங்கள் தம்முடைய இனவளர்ச்சியுற்றுப் பெருகி, வழிவழியே தம் பண்புகள் மாருமல் விளங்கி வருகின்றன. இங்ஙனமே மரஞ் செடி, கொடி இனவகைகளில் ஒவ்வொன்றும், தமக்கென ஒவ்வொரு தனித் தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர், குருடு, செவிடு, ஊமை, முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்களாக உள்ளனர். ஒரு சிலர் தீராப்பிணியாளராயும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ் செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாகத் திகழ்கின்றனர். மற்றும் சிலரோ அறியாமையிற் கிடந்து உழன்று அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலைநிற்கின்றனர். பிறர் சிலரோ, தீயொழுக்கமே கன்றிப் பெரிதும் திரிதந்து உழன்று அலைகின்றனர்.

இங்ஙனம், இப் பரந்த உலகத்தை இனிது நோக்கி ஊன்றி யுணருந்தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது, நம்மனேர் அறிவிற்குப் பொருந்துவதேயாகும் என்று ''பஞ்சதிகாரம்'' என்னும் நூலில், திருப்போரூர்ச் **சிதம்பர சுவாமிகள்** பாடுகின்ருர். —**ஆசிரியர்.**

# தமிழக அரசின்
# இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்
# நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ள
# பலவகை அறக்கட்டளைகளின் பட்டியல்

**1. சட்டப்பிரிவு 3ன் கீழ் அறிக்கை செய்யப்பட்ட அறக்கட்டளைகளின் விவரம்.**

| வ. எண். (1) | மாவட்டம் (2) | அறக்கட்டளைகளின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1 | சென்னை | 13 |
| 2 | செங்கற்பட்டு ... ... ... | 22 |
| 3 | வட ஆர்க்காடு ... ... ... | 17 |
| 4 | தென் ஆர்க்காடு ... ... ... | 12 |
| 5 | திருச்சிராப்பள்ளி ... ... ... | 10 |
| 6 | புதுக்கோட்டை ... ... ... | 6 |
| 7 | தஞ்சாவூர் ... ... ... | 52 |
| 8 | மதுரை ... ... ... | 7 |
| 9 | இராமநாதபுரம் ... ... ... | 14 |
| 10 | திருநெல்வேலி ... ... ... | 27 |
| 11 | கன்னியாகுமரி ... ... ... | 1 |
| 12 | கோயம்புத்தூர் ... ... ... | 10 |
| 13 | சேலம் ... ... ... | 2 |
| | கூடுதல் .... | 193 |

**சட்டப்பிரிவு 2ன் கீழ் அறிக்கை செய்யப்பட்ட சமண ஆலயங்களின் விவரம்.**

| | | |
|---|---|---|
| 1 | செங்கற்பட்டு ... ... ... | 2 |
| 2 | வட ஆர்க்காடு ... ... ... | 8 |
| 3 | தென் ஆர்க்காடு ... ... ... | 1 |
| 4 | தஞ்சாவூர் ... ... ... ... | 1 |
| 5 | இராமநாதபுரம் ... ... ... | 1 |
| 6 | கோயம்புத்தூர் ... ... ... | 3 |
| | கூடுதல் | 16 |

சட்டப்பிரிவு 3ன் கீழ் அறிக்கை செய்யப்பட்ட அறக்கட்டளைகளின் பட்டியல்

# சென்னை நகர்

| வ.எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 1. | இராமப்ப முதலியார் சத்திரம்,<br>சைதாப்பேட்டை | எம்.எஸ். 2726[<br>வருவாய்த்துறை,<br>நாள் 2-9-1955. |
| 2. | கணபதி முதலியார் சத்திரம், மற்றும்<br>அன்னக்காவடி மடம்,<br>திருவல்லிக்கேணி. | எம்.எஸ். 3517,<br>வருவாய்த்துறை,<br>நாள் 6-9-1957. |
| 3. | நாச்சாரம்மாள் அறங்கள்,<br>ஏழு கிணறு. | எம்.எஸ். 3995,<br>வருவாய்த் துறை,<br>நாள் 21-10-1957. |
| 4. | வேலூர்க் குப்புசாமி முதலியார் சத்திரம்,<br>வண்ணாரப்பேட்டை. | எம். எஸ். 4160,<br>வருவாய்த் துறை,<br>நாள் 4-11-1957. |
| 5. | திருவெங்கயம் குப்பைய செட்டி வைசிய தர்மச் சத்திரம்,<br>110, வரதா முத்தியப்பன் தெரு,<br>ஜார்ஜ் டவுன், சென்னை-1. | எம். எஸ். 3156<br>வருவாய்த் துறை,<br>நாள் 29-10-1959. |
| 6. | மகேசுவரி பவன்,<br>4040, தங்கசாலை, சென்னை-1. | எம். எஸ். 6887,<br>வருவாய்த் துறை,<br>நாள் 15-11-1973. |
| 7. | சிவகுரு நாராயண அய்யர் துவாதசி அறக்கட்டளை,<br>35, கல்மண்டபம் சாலை,<br>இராயபுரம், சென்னை-13. | எம்.எஸ். 2499,<br>வருவாய்த் துறை,<br>நாள் 5-7-1974. |
| 8. | திருமதி சுப்பம்மாள் அறங்கள்,<br>சுப்பராயலு நாயுடு தெரு,<br>தங்கசாலை, சென்னை-1. | எம். எஸ். 443,<br>வ.வ., அ.ஆ.,<br>நாள் 15-10-1974. |
| 9. | ஜெமூர் ரெங்கநாதன் செட்டி சத்திரம்,<br>363, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,<br>சென்னை-5. | எம்.எஸ். 1033,<br>வ.வ., அ.ஆ.,<br>நாள் 22-7-1976. |
| 10. | வீராகுவாமி தண்ணீர்ப் பந்தல் தர்மம்,<br>திருவான்மியூர், சைதாப்பேட்டை வட்டம். | பலவகை 1130,<br>வருவாய்த் துறை,<br>நாள் 7-3-1956. |
| 11. | பழைய வாயல் தர்மச் சத்திரம்,<br>பழையவாயல் கிராமம், சைதாப்பேட்டை வட்டம், | பலவகை 886,<br>வருவாய்த் துறை,<br>நாள் 23-2-57. |
| 12. | பாடசாலை சத்திரம்,<br>திருவொற்றியூர், சைதாப்பேட்டை வட்டம். | பலவகை 3996,<br>வருவாய்த் துறை,<br>நாள் 21-10-1957. |
| 13. | திருவொற்றியூர் சத்திரம்,<br>34, வடக்கு மாடவீதி, திருவொற்றியூர். | பலவகை 678,<br>வருவாய்த் துறை,<br>நாள் 14-2-1974. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| **செங்கல்பட்டு மாவட்டம் :** | | |
| 1. | மாகறல் மடம்,<br>பெரிய காஞ்சிபுரம் | பலவகை2530.<br>உள்ளாட்சித் துறை,<br>நாள் 8-9-1958. |
| 2. | பாலு செட்டிச் சத்திரம்,<br>திருப்புட்குழி, காஞ்சிபுரம் வட்டம். | ஆணை எண் 1492,<br>நாள் 16-1-1959. |
| 3. | தர்ம சிவாச்சாரியார் சத்திரம்,<br>திருத்தணி அல்லது ஆலடிப் பேட்டை,<br>சுப்பராயச் செட்டியார் சத்திரம், திருத்தணி. | பலவகை 1225,<br>நாள் 28-5-1959. |
| 4. | வைகுண்ட ஏகாதசி தினத்தன்று ஏழைகளுக்கு உணவு<br>அளிக்கும் தர்மம்,<br>காஞ்சிபுரம் நகர், காஞ்சிபுரம் வட்டம். | பலவகை 1971,<br>வருவாய்த் துறை,<br>நாள் 28-7-1964. |
| 5. | தர்மச் சத்திரம்,<br>மஞ்சங்கரணை,<br>திருவள்ளூர் வட்டம். | ஆணை எண் 1924,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-7-1964. |
| 6. | திரு குப்பாத்தி முதலியார் சத்திரம்,<br>திருத்தணி நகரம், வட்டம். | பலவகை 564,<br>வருவாய்த் துறை,<br>நாள் 2-3-1965. |
| 7. | வேத பாடசாலை,<br>திருக்கழுக்குன்றம்,<br>செங்கற்பட்டு மாவட்டம். | பலவகை 774,<br>நாள் 12-3-1965. |
| 8. | அடிவாரம் சத்திரம்,<br>திருக்கழுக்குன்றம்,<br>செங்கற்பட்டு வட்டம். | பலவகை 989,<br>வருவாய்த் துறை,<br>நாள் 23-3-1965. |
| 9. | நாராயண கைக்கோளர் மடம்,<br>10, திருக்குளத் தெரு,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 1345,<br>நாள் 2-8-1967. |
| 10. | யாதவர் மடம்,<br>தோட்டிக்கார மடம் தெரு,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 1695,<br>நாள் 26-9-1967. |
| 11. | கந்தப்பொடி சத்திரம்,<br>தெற்குக் கரை ஸ்கொயர் தெரு,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 2000,<br>வருவாய்த் துறை,<br>நாள் 16-11-1967. |
| 12. | கங்காதரன் சத்திரம்,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 2078,<br>நாள் 28-10-1968. |
| 13. | அரங்கநாதன் செட்டி சத்திரம்,<br>8, திருக்குளத் தெரு,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 1826,<br>வருவாய்த் துறை,<br>நாள் 4-9-1969. |
| 14. | பெத்துச் செட்டி மடம்,<br>19, நாட்டுக்கோட்டைத் தெரு,<br>செங்கற்பட்டு நகர் மற்றும் வட்டம். | பலவகை 3062,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-12-1969. |
| 15. | செம்படவர் மடம் என்கிற பர்வத ராசகுல சத்திரம்,<br>9-ஏ, சன்னதி தெரு,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 408,<br>வருவாய்த் துறை,<br>நாள் 19-2-1970. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 16. | கோட்டா சத்திரம்,<br>207, எம்.பி. சாலை,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 594,<br>வருவாய்த் துறை,<br>நாள் 26-2-1970. |
| 17. | கம்மவார் குப்பம் கைக்கோளர் சத்திரம்,<br>22, நல்லான் குளத் தெரு, அமிர்தபுரம்,<br>திருத்தணி வட்டம். | பலவகை 1141,<br>வருவாய்த் துறை,<br>நாள் 16-4-1970. |
| 18. | பேட்டை மடம்,<br>6, நல்லான் குளத் தெரு,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 1483,<br>வருவாய்த் துறை,<br>நாள் 16-5-1970. |
| 19. | சுங்கவார் சத்திரம்,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 2155,<br>வருவாய்த் துறை,<br>நாள் 10-7-1970. |
| 20. | இனப்பச் சத்திரம்,<br>சன்னதித் தெரு,<br>திருத்தணி நகர் மற்றும் வட்டம். | பலவகை 2484,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-9-1972. |
| 21. | சாது சங்க ஆசிரமம் அல்லது சங்க மகா சபா,<br>திருக்கழுக்குன்றம்,<br>செங்கற்பட்டு வட்டம். | பலவகை 762,<br>வருவாய்த் துறை,<br>நாள் 22-12-1974. |
| 22. | விட்டல் தேவகி கிருஷ்ணபட்டுறுவால் ஏற்படுத்தப்பட்ட<br>தர்மங்கள்,<br>காஞ்சிபுரம் நகர் மற்றும் வட்டம், | பலவகை 1080<br>வ .வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 8-9-1975. |
| **வடஆர்க்காடு மாவட்டம் :** | | |
| 1. | தர்மாதயம்,<br>அருங்கார்த்தி கிராமம்,<br>செய்யார் வட்டம். | எம்.எஸ். 3523,<br>வருவாய்த் துறை,<br>நாள் 9-12-1954. |
| 2. | சர்வே எண் 1391-ல் உள்ள அறங்கள்,<br>மாங்கால் கிராமம்,<br>செய்யார் வட்டம். | பலவகை 34,<br>வருவாய்த் துறை,<br>நாள் 7-1-1955. |
| 3. | சின்னி இராமசுவாமி செட்டியார் அறங்கள்,<br>வேலூர் நகர் மற்றும் வட்டம். | பலவகை 2032,<br>நாள் 29-6-1955. |
| 4. | சத்திரம்,<br>வேலம் கிராமம்,<br>வாலாஜாபாத் வட்டம் | எம்.எஸ். 2454,<br>வருவாய்த் துறை,<br>நாள் 14-6-1957. |
| 5. | ரெட்டி சத்திரம்,<br>காட்பாடி சாலை,<br>வேலூர் நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 2967,<br>வருவாய்த் துறை,<br>நாள் 27-9-1955. |
| 6. | வைத்தியம் சுப்பிரமணிய ஐயர் தருமங்கள்,<br>கம்பராசபுரம்,<br>குடியாத்தம் வட்டம். | பலவகை 205,<br>வருவாய்த் துறை,<br>நாள் 9-8-1957. |
| 7. | சோமசுந்தர தருமங்கள்,<br>திருவத்திபுரம் கிராமம்,<br>செய்யார் வட்டம். | எம்.எஸ். 263,<br>வருவாய்த் துறை,<br>நாள் 24-1-1958. |
| 8. | கன்னடியர் மடம்,<br>நேப்பியர் தெரு, ஆம்பூர்பேட்டை (வாணியம்பாடி),<br>திருப்பத்தூர் வட்டம். | எம்.எஸ். 2733,<br>உள்ளாட்சித் துறை,<br>நாள் 30-9-1958. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 9. | விஸ்வ பிராமண சத்திரம்,<br>திருவண்ணாமலை நகர் மற்றும் வட்டம். | பலவகை 4565,<br>நாள் 24-12-1958. |
| 10. | சின்னி அமிர்தவல்லித் தாயார் அம்மாள் கட்டளை,<br>கன்னிகா பரமேஸ்வரி கோவில் தெரு,<br>வேலூர் நகர் மற்றும் வட்டம். | பலவகை 11,<br>நாள் 3-8-1959. |
| 11. | அறக்கட்டளை கோல்கெண்ட ஏகாம்பரச் செட்டிச் சத்திரம்,<br>வாணியம்பாடி,<br>திருப்பத்தூர் வட்டம். | பலவகை 254,<br>வருவாய்த் துறை,<br>நாள் 29-1-1959. |
| 12. | கல் சத்திரம்,<br>ஆரணி நகர் மற்றும் வட்டம் | பலவகை 2434,<br>நாள் 24-8-1959 |
| 13. | திருமதி காத்தாயி அம்மாள் தர்மம்,<br>திருவண்ணாமலை நகர் மற்றும் வட்டம், | பலவகை 4551,<br>வருவாய்த் துறை,<br>நாள் 12-12-1962. |
| 14. | பருத்திபுரம் சத்திரம்,<br>செய்யாறு நகர் மற்றும் வட்டம். | பலவகை 1486,<br>வருவாய்த் துறை,<br>நாள் 25-6-1964. |
| 15. | மேல்வெங்கடாபுரம் சத்திரம்,<br>கோடிக்கால்புத்தூர் கிராமம்,<br>வாலாஜா வட்டம். | பலவகை 724,<br>வருவாய்த் துறை,<br>நாள் 12-3-1971. |
| 16. | ஆற்காடு வன்னிய சத்திரம்,<br>திரு ஊடல் தெரு,<br>திருவண்ணாமலை நகர் மற்றும் வட்டம். | பலவகை 4991,<br>வருவாய்த் துறை,<br>நாள் 17-8-1973. |
| 17. | வசுவாம்பாள் சத்திரம்,<br>திருவண்ணாமலை. | பலவகை 1608,<br>வருவாய்த் துறை,<br>நாள் 10-4-74. |
| | **தென்ஆர்க்காடு மாவட்டம் :** | |
| 1. | சுப்பிரமணிய செட்டியார் சத்திரம்,<br>விழப்பள்ளம் கிராமம்,<br>கடலூர் வட்டம். | பலவகை 122,<br>வருவாய்த் துறை,<br>நாள் 17-1-1955. |
| 2. | வையாபுரி பரதேசி அன்னதான சத்திரம்,<br>நெல்லிக்குப்பம் கிராமம்,<br>கடலூர் வட்டம். | எம்.எஸ். 2231,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-7-1955. |
| 3. | செல்லாயி அம்மாள் அன்னதான தர்மம்,<br>திட்டக்குடி கிராமம்,<br>விருத்தாசலம் வட்டம். | எம்.எஸ். 1430,<br>வருவாய்த் துறை,<br>நாள் 2-4-1956. |
| 4. | வன்னிய வியாசகுல தர்மங்கள்,<br>விழப்பள்ளம் கிராமம்,<br>கடலூர் வட்டம். | எம்.எஸ். 2588,<br>வருவாய்த் துறை,<br>நாள் 26-6-1957. |
| 5. | இராஜகோபாலன் பிள்ளை சத்திரம்,<br>சிதம்பரம் நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 3046,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-10-1959. |
| 6. | முஷ்ணம் செட்டியார் சத்திரம்,<br>சிதம்பரம் நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 298,<br>நாள் 16-2-1967. |
| 7. | மருங்கைய சுவாமி மடம் மற்றும் தர்மங்கள்,<br>கீழமேடு கிரர்மம், கள்ளக்குறிச்சி வட்டம். | எம்.எஸ். 818,<br>நாள் 25-4-1967. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 8. | ஆதி நாயுடு அறக்கட்டளை,<br>ஆண்டராயலூர் கிராமம்,<br>திருக்கோயிலூர் வட்டம். | எம்.எஸ். 819,<br>நாள்25-4-1967. |
| 9. | ஆர். எம். வித்தியாசாலை,<br>சிதம்பரம் நகர் மற்றும் வட்டம். | ஆணை எண் 2306,<br>நாள் 21-7-1970. |
| 10. | திருஞானசம்பந்தர் சத்திரம்,<br>அரகண்ட நல்லூர்,<br>திருகோவிலூர் வட்டம். | எம்.எஸ். 2483,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-9-1972. |
| 11. | தர்மச் சாவடி,<br>பஞ்சமாதேவி கிராமம்,<br>விழுப்புரம் வட்டம். | எம்.எஸ். 1432,<br>வ.வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 14-9-1977 |
| 12. | சுப்புராம் கட்டளை,<br>ஸ்ரீமுஷ்ணம் அருள்மிகு பூவராக சுவாமி ஆலயத்துடன்<br>இணைந்தது, ஸ்ரீமுஷ்ணம்,<br>சிதம்பரம் வட்டம். | எம்.எஸ். 2232,<br>வ.வ.மற்றும் அ.ஆ.<br>நாள் 27-12-1977. |
| **திருச்சி மாவட்டம் :** | | |
| 1. | வைசியர் சத்திரம்,<br>அரியலூர்,<br>உடையார்பாளையம் வட்டம் | எம். எஸ். 1552,<br>வருவாய்த் துறை,<br>நாள் 6-4-1957. |
| 2. | லால்குடி நகர சத்திரம்,<br>லால்குடி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 1338,<br>நாள் 20-5-1958. |
| 3. | உமையாள்புரம் சத்திரம்<br>மற்றும் தண்ணீர்ப் பந்தல் தர்மம்,<br>உமையாள்புரம் கிராமம். | எம்.எஸ். 4666,<br>வருவாய்த் துறை,<br>நாள் 24-12-1958. |
| 4. | மருமங்கலம் தர்மச் சத்திரம்<br>(ராஜகோபால் செட்டிச் சத்திரம்),<br>கரூர் நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 1082,<br>வருவாய்த் துறை,<br>நாள் 7-4-1959. |
| 5. | அன்னதான சத்திரம்,<br>அரசங்குடி,<br>திருச்சி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 1652,<br>வருவாய்த் துறை,<br>நாள் 30-5-1959. |
| 6. | இராமானுஜகூடம் கட்டளை,<br>ஸ்ரீரங்கம் நகர்,<br>திருச்சி வட்டம். | எம்.எஸ். 1387,<br>வருவாய்த் துறை,<br>நாள் 12-5-1964. |
| 7. | சாம வேத பாடசாலை,<br>திருவானைக்காவல்,<br>திருச்சி வட்டம். | எம்.எஸ். 1968,<br>வருவாய்த் துறை,<br>நாள் 27-8-1964. |
| 8. | துவாதசி கட்டளை மற்றும் சத்திரம்,<br>முசிறி நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 2470,<br>நாள் 23-8-1965. |
| 9. | சதாசிவ தாக்கர் சத்திரம்,<br>திருச்சி நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 6888,<br>வருவாய்த் துறை,<br>நாள் 15-11-1973. |
| 10. | கொண்டியன் அன்ன சத்திரம்,<br>கீரம்பூர் கிராமம்,<br>துறையூர் வட்டம். | எம்.எஸ். 1032,<br>வ.வ. அ.ஆ.<br>நாள் 22-7-1976. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண். தேதி |
|---|---|---|
| **புதுக்கோட்டை மாவட்டம் :** | | |
| 1. | வெ.இ. பெரி. அரு. மங்கையார் சத்திரம்,<br>அரிமளம் கிராமம்,<br>திருமயம் வட்டம். | எம்.எஸ். 500,<br>வருவாய்த் துறை,<br>நாள் 15-2-1971. |
| 2. | வேத பாடசாலை,<br>திருமயம் நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 500,<br>வருவாய்த் துறை,<br>நாள் 10-2-1957. |
| 3. | இராமச்சந்திர விலாஸ் தர்மம்,<br>புதுக்கோட்டை நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 2544,<br>நாள் 9-9-1958. |
| 4. | துவாதசிக் கட்டளை,<br>ஆலங்குடி நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 573,<br>வருவாய்த் துறை,<br>5-3-1965. |
| 5. | அன்னதான சத்திரம்,<br>ஆதனக் கோட்டை கிராமம்,<br>புதுக்கோட்டை வட்டம். | எம்.எஸ். 2108,<br>வ.வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 15-12-1977. |
| 6. | அரிமளம் வைரவன் செட்டியார் அன்னதான சத்திரம்,<br>கந்தர்வக் கோட்டை கிராமம்,<br>புதுக்கோட்டை வட்டம். | எம்.எஸ். 2163,<br>வ.வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 20-12-1977. |
| **தஞ்சாவூர் மாவட்டம் :** | | |
| 1. | சொக்கலிங்கம் பிள்ளை அறக்கட்டளை,<br>வடமட்டம் கிராமம்,<br>நன்னிலம் வட்டம். | எம்.எஸ். 2066,<br>வருவாய்த் துறை,<br>நாள் 8-5-1956. |
| 2. | மேலக்களங்கல் தர்மம்,<br>மேலக்களங்கல் கிராமம்,<br>மாயூரம் வட்டம். | எம்.எஸ். 2741,<br>வருவாய்த் துறை,<br>நாள் 11-7-1956. |
| 3. | காத்தான் செட்டியார் சத்திரம்,<br>திருத்துறைப்பூண்டி நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 709,<br>வருவாய்த் துறை,<br>நாள் 1-10-1956. |
| 4. | கருவேந்திநாதபுரம் அன்னச் சத்திரம்,<br>தலையுடையார் கோயில்பத்து கிராமம்,<br>மாயூரம் வட்டம். | எம்.எஸ். 482,<br>வருவாய்த் துறை,<br>நாள் 1-2-1957. |
| 5. | தர்மச் சத்திரம்,<br>இலுப்பூர் கிராமம்,<br>மாயூரம் வட்டம். | எம்.எஸ். 4355,<br>வருவாய்த் துறை,<br>நாள் 21-11-1957. |
| 6. | வெங்கடாசலபதி சத்திரம்,<br>கருந்தட்டாங்குடி,<br>தஞ்சை நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 2842,<br>வருவாய்த் துறை,<br>நாள் 28—8—1954. |
| 7. | திருவாதிவன்பதிக் கோட்டை அன்னசத்திரம்,<br>திருவாதிவன் பதிக்கோட்டை கிராமம்,<br>பட்டுக்கோட்டை வட்டம். | எம்.எஸ். 2031,<br>நாள் 29—6—1955. |
| 8. | திருவாசல் தண்ணீர்ப்பந்தல் தருமம்,<br>இராமநாதன் கோயில் கிராமம்,<br>மன்னார்குடி வட்டம். | எம்.எஸ். 2410,<br>நாள் 4—8—1955. |
| 9. | சேதுபாலா அன்னச்சத்திரம்,<br>மன்னார்குடி நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 2620,<br>நாள் 25-8-1955. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 10. | ஏ. எஸ். சபாபதிச் செட்டியார் மற்றும் ஏ. எஸ். கனகசபைச் செட்டியார் அன்னதான தருமம், கும்பகோணம் நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 2870, நாள் 15-9-1955. |
| 11. | அன்னதான சத்திரம், ஆத்தூர் மேலக்களக்குடி கிராமம், பாபநாசம் வட்டம். | எம்.எஸ். 3872, நாள் 17-12-1955. |
| 12. | அமாவாசை கட்டளை தர்மங்கள், பள்ளி அக்ரகாரம் கிராமம், தஞ்சாவூர் வட்டம். | எம். எஸ். 99, நாள் 7-1-1957. |
| 13. | மாரிமுத்துப் பிள்ளை தர்மங்கள், கண்ட சிக்ரயம் கிராமம், மன்னார்குடி வட்டம். | எம். எஸ். 636, நாள் 11-2-1957. |
| 14. | காரக்கோட்டை தண்ணீர்ப் பந்தல் தர்மங்கள், காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி வட்டம். | எம்.எஸ். 615, நாள் 9—2—1957. |
| 15. | அன்னச் சத்திரம், வேதங்குடி கிராமம், நன்னிலம் வட்டம். | எம்.எஸ். 210, வ. வ. மற்றும் அ.ஆ., நாள் 26-8-1974. |
| 16. | சாம வேத பாடசாலை, மாயூரம் நகர் மற்றும் வட்டம். | எம்.எஸ். 399, வ. வ. மற்றும் அ. ஆ.; நாள் 4-4-1975. |
| 17. | இராமலிங்கம் பிள்ளை எஸ்டேட், புவனகிரி பூச்சா சின்னையா செட்டியார் அன்ன சத்திரம், வைத்தீசுவரன் கோயில், சீர்காழி வட்டம். | எம். எஸ். 103, வ. வ. மற்றும் அ. ஆ., நாள் 29-1-1976. |
| 18. | தண்ணீர்ப்பந்தல் தர்மம், பழமாநேரி கிராமம், தஞ்சாவூர் வட்டம். | எம். எஸ். 510, வருவாய்த் துறை, நாள் 9-2-1957. |
| 19. | சுல்தான் ஜீயப்பா சத்திரம், ஆவடிக்கு முனை கிராமம், பட்டுக்கோட்டை வட்டம். | எம். எஸ். 1042, வருவாய்த் துறை, நாள் 1-3-1957. |
| 20. | எச். எச். எம். அகல்யாம்பாள்புரம் சத்திரம், பள்ளி அக்ரகாரம் கிராமம், தஞ்சாவூர் வட்டம். | எம்.எஸ். 3900, வருவாய்த் துறை, நாள் 15—10—1957. |
| 21. | வஸ்தாது சாவடி, கிளார்வட்டம் கிராமம், தஞ்சை வட்டம். | எம். எஸ். 4410, வருவாய்த் துறை, நாள் 27-11-1957. |
| 22. | சுப்பராயலு முதலியார் தர்மம், பட்டுக்கோட்டை நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 329, நாள் 29-1-1958. |
| 23. | இராஜகேசவ ராவ் மற்றும் மகா தேவராவ் தருமம், தஞ்சாவூர் நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 1523, உள் துறை, நாள் 3-6-1958. |
| 24. | அன்னபூரணி அம்மாள் சத்திரம், மேட்டுப்பாளையம் கிராமம், திருத்துறைப்பூண்டி வட்டம். | எம். எஸ். 2053, உள் துறை, நாள் 22-7-1958. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 25. | வெங்கடாஜலபதி தர்மச் சத்திரம்,<br>கருப்பூர் கிராமம்,<br>தஞ்சாவூர் வட்டம் | எம். எஸ். 567,<br>வருவாய்த் துறை,<br>நாள் 24-2-1959. |
| 26. | ஸ்ரீ வெங்கடாஜலபதி அன்னதான தர்மம்,<br>திருக்கோடிக்காவல்,<br>கும்பகோணம் வட்டம். | எம். எஸ். 3013,<br>வருவாய்த் துறை,<br>நாள் 19-7-1962. |
| 27. | மீனுட்சி அம்மாள் துவாதசிக் கட்டளை மற்றும் சத்திரம்,<br>செந்தலை கிராமம்,<br>தஞ்சாவூர் வட்டம். | எம். எஸ். 1484,<br>வருவாய்த் துறை,<br>நாள் 25-5-1964. |
| 28. | இராமலிங்கம் பிள்ளை மற்றும் ஜம்புலிங்கம் பிள்ளை<br>கணபதியா பிள்ளை கட்டளைகள்,<br>மாத்தூர் கிராமம்,<br>தஞ்சாவூர் வட்டம். | எம். எஸ். 1914,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-7-1964. |
| 29. | ஸ்ரீ வெங்கடாஜலபதி அன்னதான சத்திரம்,<br>நெடுந் தெரு கிராமம்,<br>பாபநாசம் வட்டம். | எம். எஸ். 2952,<br>நாள் 16-12-1974. |
| 30. | ரெங்கசாமி ரெட்டியார் சத்திரம்,<br>புதுப்பத்தூர் கிராமம்,<br>நாகப்பட்டினம் வட்டம். | எம். எஸ். 2468,<br>வருவாய்த் துறை,<br>நாள் 23-8-1965. |
| 31. | துவாதசிக் கட்டளை,<br>திருவிடைமருதூர்,<br>கும்பகோணம் வட்டம். | எம். எஸ். 2469<br>வருவாய்த் துறை,<br>நாள் 23-8-1965. |
| 32. | மாருதி ராவ் பேஷ்வா கட்டளை,<br>பிள்ளையான் பட்டி கிராமம்,<br>கும்பகோணம். | எம். எஸ். 2392,<br>வருவாய்த் துறை,<br>நாள் 16-8-1975. |
| 33. | வளவப்ப தேவர் சத்திரம்,<br>மகாதேவபட்டினம் கிராமம்,<br>மன்னூர்குடி வட்டம். | எம்.எஸ். 2944,<br>நாள் 25-10-1965. |
| 34. | ரெங்கசாமி நாயுடு எண்டோமெண்ட்ஸ்,<br>கண்டியூர் கிராமம்,<br>தஞ்சாவூர் வட்டம். | எம். எஸ். 3157,<br>நாள் 4-11-1966. |
| 35. | வெங்கடாஜலபதி தர்மச் சத்திரம்,<br>குன்னியூர் கிராமம்,<br>நாகப்பட்டினம் வட்டம். | எம். எஸ். 1600,<br>நாள் 26-8-66. |
| 36. | சுந்தர சுவாமிகள் வித்யாசாலை,<br>திருவையாறு,<br>தஞ்சாவூர் வட்டம். | எம். எஸ். 2086,<br>வருவாய்த் துறை,<br>நாள் 1-7-1970. |
| 37. | திருவாசல் தர்மம்,<br>காரையூர் கிராமம்,<br>நன்னிலம் வட்டம். | எம். எஸ். 3713,<br>வருவாய்த் துறை,<br>நாள் 22-6-1973. |
| 38. | பாலாஜி ராவ் பண்டிதர் சத்திரம்,<br>அபிராம்பட்டினம்,<br>பட்டுக்கோட்டை வட்டம். | எம். எஸ். 1700,<br>வருவாய்த் துறை,<br>நாள் 18—-4-1974. |
| 39. | அரண்மனை கிருஷ்ண பாகவதர் கட்டளை,<br>கும்பகோணம் நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 2815,<br>வருவாய்த் துறை,<br>நாள் 8-7-1974. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
| --- | --- | --- |
| 40. | சாம வேத பாடசாலை,<br>பட்டமங்கலத் தெரு,<br>மாயூரம் நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 399,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 4-4-1975. |
| 41. | ரெங்கசாமி நாயுடு எண்டோமெண்ட்ஸ்,<br>சாட்டியக்குடி கிராமம்,<br>நாகப்பட்டினம் வட்டம். | எம். எஸ். 510,<br>வருவாய்த் துறை,<br>நாள் 23-4-1975. |
| 42. | கிருஷ்ணசுவாமி ஐயர் கட்டளைகள்,<br>கணபதி அக்ரகாரம் கிராமம்,<br>பாபநாசம் வட்டம். | எம். எஸ். 509,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 23-4-1975. |
| 43. | தி. சடையப்ப செட்டியார் சத்திரம்,<br>குற்றாலம்,<br>மாயூரம் வட்டம். | எம். எஸ். 1004<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 19-7-1976. |
| 44. | மேலவீட்டுச் சத்திரம்,<br>மகாதேவபட்டினம் கிராமம்,<br>மன்னார்குடி வட்டம். | எம். எஸ். 1110,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 9-8-1976. |
| 45. | கைலாசதேவர் தர்மச் சத்திரம்,<br>வேளாங்கண்ணி,<br>நாகை வட்டம். | எம். எஸ். 1550,<br>வ. வ. அ.ஆ.,<br>நாள் 5-11-1976. |
| 46. | சிதம்பரம் பிள்ளை தர்மச் சத்திரம்,<br>கிழையூர் நகர்,<br>நாகை வட்டம். | எம். எஸ். 1301,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 13-9-1976. |
| 47. | முத்துசாமி பிள்ளை தர்ம சத்திரம்,<br>எண்ணெய்க்குடி கிராமம்,<br>நன்னிலம் வட்டம். | எம். எஸ். 1783,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 14-12-1976. |
| 48. | தர்மச் சத்திரம்,<br>டி. மேலக்காடு கிராமம்,<br>பட்டுக்கோட்டை வட்டம். | எம். எஸ். 32,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 6-1-1977. |
| 49 | சன்னநல்லூர் தர்மச் சத்திரம்,<br>தூத்துக்குடி கிராமம்,<br>நன்னிலம் வட்டம். | எம். எஸ். 726,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 16-4-1977. |
| 50. | வெங்கடாஜலபதி அன்னச் சத்திரம்,<br>ஒளிமதி கிராமம்,<br>மன்னார்குடி வட்டம். | எம். எஸ். 2164,<br>வ. வ. மற்றும் அ. ஆ.,<br>நாள் 20-12-1977. |
| 51. | பழனி ஆண்டவர் தருமச் சத்திரம்,<br>வடக்கு வட்டார் கிராமம்,<br>மன்னார்குடி வட்டம். | எம். எஸ். 2231,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 27-12-1977. |
| 52. | சக்ரபாணி ஐயர் தர்மம்,<br>சேங்காலிபுரம் கிராமம்,<br>நன்னிலம் வட்டம். | எம். எஸ். 297,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 9-3-1978. |
| **மதுரை மாவட்டம் :** | | |
| 1. | முத்துக் கருப்பன் செட்டியார் எண்டோமெண்ட்ஸ்,<br>வடபுதுப்பட்டி கிராமம்,<br>பெரியகுளம் வட்டம். | எம். எஸ். 148,<br>வருவாய்த் துறை,<br>நாள் 16-1-1959. |
| 2. | மீனாட்சியம்மாள் கட்டளை,<br>சின்னமனூர் கிராமம்,<br>பெரியகுளம் வட்டம். | எம். எஸ். 1236,<br>வருவாய்த் துறை,<br>நாள் 28-4-1959. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 3. | ஆர். என். இராமாச்சாரியார் தர்மம்,<br>மதுரை நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 3905,<br>வருவாய்த் துறை,<br>நாள் 28-12-1959. |
| 4. | வெங்கடாசலம் செட்டியார் தண்ணீர் பந்தல் தர்மம்,<br>மதுரை நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 3139,<br>வருவாய்த் துறை,<br>நாள் 8-10-1970. |
| 5. | பெரியநாயகி அம்மாள் எண்டோமெண்ட்ஸ்,<br>கருங்காலக்குடி கிராமம்,<br>மேலூர் வட்டம். | எம். எஸ். 3194,<br>வருவாய்த் துறை,<br>நாள் 5-10-1970. |
| 6. | சி .ஏ .எஸ். டி. அன்னதான சத்திரம்,<br>தெற்கு ரத வீதி,<br>பழனி. | எம். எஸ். 528,<br>வருவாய்த் துறை,<br>நாள் 18-2-1971. |
| 7. | அன்னதான மடம்,<br>கூவலாபுரம் கிராமம்,<br>திருமங்கலம் வட்டம். | எம். எஸ். 1431,<br>வ. வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 14-9-1977. |

## இராமநாதபுரம் மாவட்டம் :

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 1. | சங்கிலி நாயக்கர் சத்திரம்,<br>விருதுநகர்,<br>சாத்தூர் வட்டம். | எம். எஸ். 1477,<br>வருவாய்த் துறை,<br>நாள் 5-4-1956. |
| 2. | வி. ஆர். சத்திரம்,<br>தனுஷ்கோடி,<br>இராமநாதபுரம் வட்டம். | எம். எஸ். 860,<br>வருவாய்த் துறை,<br>நாள் 21-2-1957. |
| 3. | மதகுப்பட்டி சத்திரம்,<br>மதகுப்பட்டி கிராமம்,<br>எண்ணூர் வட்டம், சிவகங்கை வட்டம். | எம். எஸ். 745,<br>வருவாய்த் துறை,<br>நாள் 16-2-1957. |
| 4. | அன்னதான சத்திரம்,<br>குன்றக்குடி,<br>திருப்பத்தூர் வட்டம். | எம். எஸ். 2581,<br>உள் துறை,<br>நாள் 11-9-1958. |
| 5. | அன்னச் சத்திரம்,<br>காளையார் கோயில்,<br>சிவகங்கை வட்டம். | எம். எஸ். 3044,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-4-1959. |
| 6. | அன்னதானச் சத்திரம்,<br>ஆதி சேதுக்கரை (திருப்புல்லாணிக் கிராமம்),<br>இராமநாதபுரம் வட்டம். | எம். எஸ். 318,<br>வருவாய்த் துறை,<br>நாள் 7-2-1964. |
| 8. | குஜிலி சுப்பையர் சத்திரம்,<br>சிவகாசி,<br>சாத்தூர் வட்டம். | எம். எஸ். 1473,<br>வருவாய்த் துறை,<br>நாள் 25-5-1964. |
| 9. | கணக்குப் பிள்ளை மடம்,<br>எமனேஸ்வரம் கிராமம்,<br>பரமக்குடி வட்டம். | எம். எஸ். 1388,<br>வருவர்ய்த் துறை,<br>நாள் 12-5-1964. |
| 10. | அச்சுத சடகோப வரவரமுனி கட்டளைகள்,<br>திருத்தங்கல் கிராமம்,<br>சாத்தூர் வட்டம். | எம். எஸ். 1598,<br>வருவாய்த் துறை,<br>நாள் 24-8-1968. |
| 11. | அன்னதானச் சத்திரம்,<br>தொண்டி,<br>திருவாடானை வட்டம். | எம். எஸ். 2373,<br>வருவாய்த் ஸறை,<br>நாள் 25-7-1970. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 12. | சி. கே. சி. டி. காசிச் செட்டியார் வேத பாடசாலை, திருப்பூவணம், சிவகங்கை வட்டம். | எம். எஸ். 1827, வருவாய்த் துறை, நாள் 26-6-1971. |
| 13. | மீனாட்சி அம்மாள் சத்திரம், மானாமதுரை, சிவகங்கை வட்டம். | எம். எஸ். 2465, வருவாய்த் துறை, நாள் 13-9-1972. |
| 14. | முத்துச் சத்திரம், வெளிப்பட்டினம் கிராமம், காரைக்குடி வட்டம். | எம். எஸ். 639, வ. வ. மற்றும் அ. ஆ., நாள் 25-11-1974. |

**திருநெல்வேலி மாவட்டம் :**

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 1. | திரவியம் செட்டியார் கட்டளைகள், செவந்திபட்டி கிராமம், திருநெல்வேலி வட்டம். | எம். எஸ். 3569, வருவாய்த் துறை, நாள் 18-11-1955. |
| 2. | துவாதசி அன்னதானக் கட்டளை, தென்காசி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 1131, வருவாய்த் துறை, நாள் 7-3-1956. |
| 3. | அன்னதானச் சத்திரம், கடையநல்லூர் கிராமம், தென்காசி வட்டம். | எம். எஸ். 2441, வருவாய்த் துறை, நாள் 24-6-1959. |
| 4. | அன்னதானச் சத்திரம், பாப்பான்குளம் கிராமம், அம்பாசமுத்திரம் வட்டம். | எம். எஸ். 2469, வருவாய்த் துறை, நாள் 28-8-1959. |
| 5. | கண்கண்ட நாடார் சத்திரம், பூசனூர் கிராமம், கோயில்பட்டி வட்டம். | எம். எஸ். 3962, வருவாய்த் துறை, நாள் 31-12-1959. |
| 6. | துவாதசிக் கட்டளை தர்மம், சிக்கநரசையன் கிராமம், (மேல வீரராகவபுரம்), திருநெல்வேலி வட்டம். | எம். எஸ். 1925, வருவாய்த் துறை, நாள் 20-7-1964. |
| 7. | என். எஸ். பழனி ஆச்சி அன்னதான சத்திரம், திருநெல்வேலி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 1962, வருவாய்த் துறை, நாள் 27-7-1964. |
| 8. | கரிவலம் வந்த நல்லூர் சத்திரம், கரிவலம்வந்தநல்லூர் கிராமம், சங்கரன்கோயில் வட்டம். | எம். எஸ். 1923, வருவாய்த் துறை, நாள் 20-7-1964. |
| 9. | பிரதோஷக் கட்டளை மற்றும் மகாராஜ பிள்ளை காந்திமதி அம்மன் சத்திரம், திருநெல்வேலி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 1972, வருவாய்த் துறை நாள் 28-7-1964. |
| 10. | சிவகிரி சத்திரம், சிவகிரி, சங்கரன்கோயில் வட்டம். | எம். எஸ். 2079, வருவாய்த் துறை, நாள் 20-8-1964. |
| 11. | அன்னதானச் சத்திரம், தென்காசி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 575, வருவாய்த் துறை, நாள் 3-3-1965. |
| 12. | பிளீடர் சங்கரலிங்கம் பிள்ளை சத்திரம், கோடகநல்லூர் கிராமம், திருநெல்வேலி வட்டம். | எம். எஸ். 579, வருவாய்த் துறை, நாள் 12-3-1965. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| 13. | சௌமிய நாராயணப்பய்யர் அன்னதான சத்திரம்,<br>செங்கோட்டை நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 2600,<br>வருவாய்த் துறை,<br>நாள் 6-9-1965. |
| 14. | பேரல் பெருமாள் பிள்ளை சத்திரம்,<br>சாத்துப்பட்டு கிராமம்,<br>அம்பாசமுத்திரம் வட்டம். | எம். எஸ். 2635,<br>வருவாய்த் துறை,<br>நாள் 10-9-1965. |
| 15. | குன்னத்தூர் சுப்ரமணிய பிள்ளை சத்திரம்,<br>திருநெல்வேலி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 1256,<br>வருவாய்த் துறை,<br>நாள் 19-4-1966. |
| 16. | அன்னதான சத்திரம்,<br>ஆவடியூர்,<br>அம்பாசமுத்திரம் வட்டம். | எம். எஸ். 3147,<br>வருவாய்த் துறை,<br>நாள் 2-11-1966. |
| 17. | கோமதி அம்மன் அன்னதான சத்திரம்,<br>களக்காடு கிராமம்,<br>நாங்குனேரி வட்டம். | எம். எஸ். 3143,<br>வருவாய்த் துறை,<br>நாள் 31-10-1966. |
| 18. | தண்ணீர்க்குளம் முத்துசாமி ஐயர் வேத பாடசாலை,<br>திருநெல்வேலி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 545,<br>வருவாய்த் துறை,<br>நாள் 10-3-1967. |
| 19. | வேதநாதன் சத்திரம்,<br>வேதநாதன் கிராமம்,<br>கோவில்பட்டி வட்டம். | எம். எஸ். 1501,<br>வருவாய்த் துறை,<br>நாள் 26-8-1967. |
| 20. | துவாதசி அன்னதான சத்திரம்,<br>புளியரை கிராமம்,<br>செங்கோட்டை வட்டம். | எம். எஸ். 2420,<br>வருவாய்த் துறை,<br>நாள் 24-12-1968. |
| 21. | ஆத்தங்கரை அன்னதான சத்திரம்,<br>கரிவலம் வந்த நல்லூர் கிராமம்,<br>சங்கரன்கோவில் வட்டம். | எம். எஸ். 1797,<br>வருவாய்த் துறை,<br>நாள் 30-8-1969. |
| 22. | யஜுர் வேத பாடசாலை,<br>களக்காடு கிராமம்,<br>நாங்குனேரி வட்டம். | எம். எஸ். 2419,<br>வருவாய்த் துறை,<br>நாள் 21-10-1969. |
| 23. | அன்னதான சத்திரம்,<br>சாம்பூர் வடகரை,<br>செங்கோட்டை வட்டம். | எம். எஸ். 1044,<br>வருவாய்த் துறை,<br>நாள் 23-5-1969. |
| 24. | அன்னபூரணி அன்னதான சத்திரம்,<br>முன்னீர்ப்பள்ளம் கிராம்,<br>திருநெல்வேலி வட்டம். | எம். எஸ். 2447,<br>வருவாய்த் துறை,<br>நாள் 1-8-1970. |
| 25. | குருசுவாமி அன்னதான சத்திரம்,<br>ஒட்டப்பிடாரம் கிராமம்,<br>திருநெல்வேலி மாவட்டம். | எம். எஸ். 1457,<br>வருவாய்த் துறை,<br>நாள் 14-5-1971. |
| 26. | எசக்கியாடும் பெருமாள் பிள்ளை சத்திரம்,<br>குறுங்குளம் கிராமம்,<br>ஸ்ரீவைகுண்டம் வட்டம். | எம். எஸ். 1725,<br>வருவாய்த் துறை,<br>நாள் 14-6-1971. |
| 27. | ஏகாந்தலிங்கம் பிள்ளை என்னும் சுப்ரமணிய பிள்ளை<br>அன்னதான சத்திரம்,<br>உரப்பநாடு கிராமம்,<br>ஸ்ரீவைகுண்டம் வட்டம். | எம். எஸ். 2346,<br>வருவாய்த் துறை,<br>நாள் 5-6-1974. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
| --- | --- | --- |
| **கன்னியாகுமரி மாவட்டம் :** | | |
| 1. | துவாதசி தர்மம்,<br>தளியல் மகாதேவர்கோயில் கிராமம்,<br>அகஸ்தீஸ்வரம் வட்டம். | எம். எஸ். 815,<br>வ .வ. மற்றும் அ.ஆ.,<br>நாள் 21-6-1978. |
| **கோயம்புத்தூர் மாவட்டம் :** | | |
| 1. | சத்திரம் மற்றும் தண்ணீர்ப்பந்தல் தர்மம்,<br>கோமன்காளம்புதூர் கிராமம்,<br>பொள்ளாச்சி. | எம். எஸ். 2021,<br>வருவாய்த் துறை,<br>நாள் 26-7-1954. |
| 2. | பேச்சிரெங்கசாமி கௌண்டர் கட்டளை,<br>கோவை நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 117,<br>வருவாய்த் துறை,<br>நாள் 12-1-1959. |
| 3. | சுந்தர தீட்சதர் கட்டளை,<br>கொளுஞ்சிவாடி கிராமம்,<br>தாராபுரம் வட்டம். | எம். எஸ். 3288,<br>வருவாய்த் துறை,<br>நாள் 27-11-1958. |
| 4. | தண்ணீர்ப்பந்தல் தர்மம்,<br>நாச்சியார்பாளையம் கிராமம்,<br>தாராபுரம் வட்டம். | எம். எஸ். 453,<br>வருவாய்த் துறை,<br>நாள் 13-2-1959 |
| 5. | ஸ்ரீமதி திருமூர்த்தி அம்மாள் மற்றும் சீதம்மாள் கட்டளை,<br>தலைவாய்ப்பட்டினம்,<br>தாராபுரம் வட்டம் | எம். எஸ். 1818,<br>வருவாய்த் துறை,<br>நாள் 18-6-1959. |
| 6. | பிராமண சத்திரம் என்னும் கங்காதரன் செட்டியார் சத்திரம்,<br>அவிநாசி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 3507,<br>வருவாய்த் துறை,<br>நாள் 16-12-1963. |
| 7. | பிராமணர் அன்னதான சத்திரம்,<br>சூலூர் கிராமம்,<br>பல்லடம் வட்டம். | எம். எஸ். 3426,<br>வருவாய்த் துறை,<br>நாள் 14-12-1965. |
| 8. | கொடுமுடி பிராமண அன்னச் சத்திரம்,<br>கொடுமுடி,<br>ஈரோடு வட்டம். | எம். எஸ். 2485,<br>வருவாய்த் துறை,<br>நாள் 14-6-1974. |
| 9. | நஞ்சப்ப கௌண்டர் சத்திரம்,<br>பவானி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 2738,<br>வருவாய்த் துறை,<br>நாள் 2-7-1974. |
| 10. | பெருமாள் நாயுடு சத்திரம்,<br>பவானி நகர் மற்றும் வட்டம். | எம். எஸ். 2811,<br>வருவாய்த் துறை,<br>நாள் 8-7-1974. |
| **சேலம் மாவட்டம் :** | | |
| 1. | மெக்டொனல்டு சத்திரம்,<br>மேம்படித்தளம் கிராமம்,<br>சேலம் வட்டம். | எம். எஸ். 2895,<br>வருவாய்த் துறை,<br>நாள் 20-7-1956. |
| 2. | அப்புராசபுரம் சத்திரம்,<br>குமரப்ப பாளையம் கிராமம்,<br>திருச்செங்கோடு வட்டம். | எம். எஸ். 2966,<br>வருவாய்த் துறை,<br>நாள் 27-9-1955. |

## சட்டப்பிரிவு 2ன் கீழ் அறிக்கை செய்யப்பட்ட சமண ஆலயங்கள்

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| **செங்கற்பட்டு மாவட்டம் :** | | |
| 1. | அருள்மிகு திருலோக்கியநாதசுவாமி ஆலயம், திருப்பருத்திக்குன்றம், காஞ்சிபுரம் வட்டம். | எம். எஸ். 2483, வருவாய்த் துறை, நாள் 28-8-1954. |
| 2. | அருள்மிகு தர்ம தீர்த்தங்கர் சமண ஆலயம், அருங்குளம் கிராமம், திருத்தணி வட்டம். | எம். எஸ். 2626, வருவாய்த் துறை, நாள் 7-11-1969. |
| **வடஆற்காடு மாவட்டம் :** | | |
| 1. | அருள்மிகு அருகர் ஆலயம், வெண்குன்றம் கிராமம், வந்தவாசி வட்டம். | எம். எஸ். 2189, வருவாய்த் துறை, நாள் 28-5-1957. |
| 2. | அருள்மிகு அருகர் ஆலயம் பிருதூர் கிராமம், வந்தவாசி வட்டம். | எம். எஸ். 1370 வருவாய்த் துறை, நாள் 28-3-1961. |
| 3. | அருள்மிகு அருகர் ஆலயம், பூண்டி கிராமம், ஆரணி வட்டம். | எம். எஸ். 658, வருவாய்த் துறை, நாள் 9-3-1966. |
| 4. | அருள்மிகு வர்த்தமானேஸ்வரர் ஆலயம், தேசூர் கிராமம், வந்தவாசி வட்டம். | எம். எஸ். 3030, வருவாய்த் துறை, நாள் 13-10-1966. |
| 5. | அருள்மிகு ரிடப சுவாமி ஆலயம், கோகிலம்பட்டி கிராமம், செய்யாறு வட்டம். | எம். எஸ். 3029, வருவாய்த் துறை, நாள் 13-10-1966. |
| 6. | அருள்மிகு குன்றுநாதசுவாமி மற்றும் தேவராஜ சுவாமி ஆலயம், கரந்தைக் கிராமம், செய்யாறு வட்டம். | எம். எஸ். 3264, வருவாய்த் துறை, நாள் 21-11-1969. |
| 7. | அருள்மிகு அருகர் ஜெயின் ஆலயம், இராமசமுத்திரம் கிராமம், வந்தவாசி வட்டம். | எம். எஸ். 138, வருவாய்த் துறை, நாள் 22-1-1973. |
| 8. | அருள்மிகு திருலோக்கியநாத சுவாமி ஆலயம், தெள்ளாறு கிராமம், வந்தவாசி வட்டம். | எம். எஸ். 796, வ.வ. மற்றும் அ.ஆ., நாள் 11-6-1976. |
| **தென்ஆற்காடு மாவட்டம் :** | | |
| 1. | அருள்மிகு ஆதீஸ்வரர் என்னும் அருகர் ஆலயம், மேல்மலையனூர் கிராமம், செஞ்சி வட்டம். | எம். எஸ். 1079, வ. வ. மற்றும் அ.ஆ., நாள் 8-9-1975. |

| வ. எண் | அறக்கட்டளையின் பெயர், கிராமம் | அரசு ஆணை எண், தேதி |
|---|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம் :** | | |
| 1. | அருள்மிகு தீபநாயகி அம்மன் ஆலயம், தீபங்குடி கிராமம், நன்னிலம் வட்டம். | எம். எஸ். 1462, வருவாய்த் துறை, நாள் 21-5-1964. |
| **இராமநாதபுரம் மாவட்டம் :** | | |
| 1. | அருள்மிகு மணவாளநாத சுவாமி ஆலயம், அம்மத்தான்குடி கிராமம், திருவாடானை வட்டம். | எம். எஸ். 2833, வருவாய்த் துறை, நாள் 26-11-1969. |
| **கோயம்புத்தூர் மாவட்டம் :** | | |
| 1. | அருள்மிகு அம்மணிஸ்வரர் ஆலயம், திங்களூர் கிராமம், ஈரோடு வட்டம். | எம். எஸ். 2848, வருவாய்த் துறை, நாள் 27-11-1969. |
| 2. | அருள்மிகு சந்திரபிரபா தீர்த்தங்கர் ஆலயம், மேட்டுப்புதூர் (விஜயமங்கலம்), ஈரோடு வட்டம். | எம். எஸ். 2702, வருவாய்த் துறை, நாள் 24-8-1970. |
| 3. | அருள்மிகு பஸ்திக் கோயில், ஆதீஸ்வரர் ஆலயம், (ஆதி நாதர் ஆலயம்), சீனாபுரம் கிராமம், ஈரோடு வட்டம். | எம். எஸ். 1459, வ.வ. மற்றும் அ.ஆ., நாள் 21-9-1977. |

**(முற்றிற்று)**

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008.
158638

---

# எம்பெருமான் திருக்கருணை


அத்தா! உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்!
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்!

எத்தனையும் அரியைநீ எளியை யானாய்!
எனைஆண்டு கொண்டிரங்கி என்று கொண்டாய்!


பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே!

இத்தனையும் எம்பரமோ? ஐய ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே!

—திருநாவுக்கரசர்.



திருக்குற்றாலத்தில் பண்பொழி திருக்குமரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளித் துவக்க விழாவில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், I.A.S., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



திருவாரூர்த் தியாகேசப் பெருமானின் அழகிய ''ஆழித் திருத்தேர்''—திருவீதி உலா வருதல் (15-9-'78).

பதிவு எண். எம். 7039



திருவாரூர்த் தியாகேசப் பெருமானின் பூங்கோயில், மற்றும் கமலாலயத் திருக்குளம், ஆகியவற்றின் அழகிய தோற்றம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.